நன்றி - நூலகத்திட்டம்

සරිනිහර්
SARINIHAR
# சரிநிகர்
சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

**பேடியர்க்குத் தலைவர் பேர்**

ஊடுவர்; ஊடிமனம் வாடுவர்; வாடிப்பின்
கூடுவர்; கூடிமனங் குளிர்வர்; பின் -நாடுவர்
நாடியதைப் பெற்று நயப்பர்; நாட்டிலிந்தப்
பேடியர்க்குத் தலைவர் பேர்

ஈழமோகம்

இதழ் 45 ஏப்பிரல்21 -மே 4 1994 விலை 7/=

# ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தேர்தல் வியூகம்

**எதிர்வரும் ஜனாதிபதி மற்றும் பாராளுமன்ற தேர்தல்களை ஒட்டி ஐ.தே.க.வினர் தமது கட்சியின் வெற்றியை உறுதி செய்யும் விதத்தில் புதிய வியூகம் ஒன்றை வகுத்து வருவதாகத் தெரியவருகிறது. இப்புதிய வியூகத்தில் பல காய்கள் வேகமாக நகர்த்தப்பட்டு வருகின்றன. கட்சியின் மேல்மட்டத்தில் இருந்து கீழ் மட்டம் வரை பல மாற்றங்களை அது செய்து வருகிறது. அண்மையில் தென் மாகாண சபைத் தேர்தலில் ஏற்பட்ட படுதோல்வியின் பின் இந்த மாற்றங்களை மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தி வருகின்றது. இப்புதிய வியூகத்தில் முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் அணியினர் முக்கிய இடங்களுக்கு நகர்த்தப்படலாம் எனவும் தெரிய வருகிறது.**

இது பற்றி மேலும் பேசப்படுவதாவது, ஐ.தே.கவின் ஜனாதிபதி வேட்பாளரான ஜனாதிபதி விஜயதுங்க அண்மைக்காலங்களில் கடைப்பிடித்து வந்த இனவாத கோட்பாடுகளையும் சிறுபான்மையினர் மீதான வெறுப்பினையும் குறிப்பாகத் தொண்டமான் அணியினர் மீதான வெறுப்பினையும் தற்காலிகமாகவேனும் நிறுத்தி வைப்பதாக அது முடிவு செய்துள்ளது. இ.தொ.கா தொண்டமானுடனான உறவு மீளப் புதுப்பிக்கப்பட்டுள்ளது இதன் ஒருபடி நடவடிக்கையாகும்.

முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசவின் மரணத்தின் பின் திட்டமிட்டு ஒதுக்கப்பட்டு வந்த அவரது குடும்பத்தினருக்கும் மற்றும் அவரது 'இன சமத்துவ', வறுமை ஒழிப்புக் கோட்பாடுகளுக்கும் முக்கியத்துவம் கொடுப்பதெனவும் இது ஐ.தே.கட்சியின் வெற்றிக்கு மிகவும் அவசியமானது எனவும் கட்சியின் உயர்மட்டத்தினைச் சேர்ந்த சிலர் செயலாளர் சிறிசேன கூரே தலைமையில் வற்புறுத்தி வருகின்றனர். இது தவிர வடக்கிலிருந்து ஏற்கனவே தெரிவு செய்யப்பட்ட ஈரோஸ் குழுப் பாராளுமன்ற உறுப்பினர்களை மீளவும் பாராளுமன்றத்திற்கு அழைக்க வேண்டும் என்ற முடிவுக்கும் ஐ.தே. கட்சியினர் வந்துள்ளனர். அண்மையில் ஈரோஸினரை நோக்கி இத்தகையதொரு அழைப்பு அரசு தரப்பில் விடப்பட்டது தெரிந்ததே. ஏற்கனவே பிரேமதாச மீது கொண்டு வரப்பட்ட ஒழுக்கவழுவுரைப் பிரேரணையின் போது ஈரோஸினரைப் பாராளுமன்றத்துக்குள் மீளக் கொண்டு வர முயற்சிகள் எடுக்கப்பட்டதும் தெரிந்ததே.

பெரும் நம்பிக்கையுடன் கட்சிக்குள் உள்ளிளுக்கப்பட்ட காமினி திசநாயக்க, ரொனி டிமெல் போன்றோரைச் சிறிது தூர வைத்திருப்பதே தற்போதைய நிலைமையில் புத்திசாலித்தனமானது என கட்சி உயர்மட்டம் கருதுவதாகவும் தெரியவருகிறது.



ஊடுதல் காமத்திற்கு இன்பம் அதற்கின்பம்
கூடி முயங்கப் பெறின் -குறள்

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்திலும் கூட கட்சி தனது நடவடிக்கைகளில் பல மாற்றங்களை செய்து வருவதாக அங்கிருந்து வரும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை காலமும் கட்சியின் அனைத்து நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாக இருந்த ரிஸ்வி சின்ன லெப்பை ஓரங்கட்டப்பட்டு இவரது இடத்திற்கு அண்மையில் ஏறாவூர் நகர பிரதேசசபைக்கு சுயேட்சைக்குழு சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று பின்னர் ஐ.தே.கவுடன் சேர்ந்து கொண்ட அலி சா்கிர் மௌலானா நியமிக்கப்பட உள்ளதாக நம்பகரமாகத் தெரிய வருகிறது. இதே சமயம் ஏற்கனவே ஐக்கிய தேசியக் க்ட்சியின் தமிழ்ப் பிரமுகர்களான ஈஸ்வரன் - பத்மநாதன் ஆகியோருக்கிடையில் விரிசல் ஏற்பட்டுள்ளது. இதன் எதிரொலியாகவே ஈஸ்வரன் அண்மையில் இரகசியப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டதாகத் தெரிய வருகிறது.

அத்துடன் தற்போது மட்டக்களப்பு அரசாங்க அதிபராக இருக்கும் மோனகுருசாமியை மட்டக்களப்புக்கு பொறுப்பாக நியமிக்க ஐ.தே.க.வின் உயர் வட்டாரங்கள் முயற்சி எடுத்த வருவதாகவும், இது தொடர்பாக ஐ.தே.க. மோனகுருசாமியுடன் பேச்சுவார்த்தை நடாத்தியதாகவும் அவர் இதற்கு இணங்கியதாகவும் ஐ.தே.க.வட்டாரங்களிலிருந்து கிடைத்த தகவல்கள் தெரிவிக்கின்றன.

அண்மையில் இவர் இடமாற்றம் செய்யப்பட்டு பின்னர் அவ்விடமாற்றம் ரத்துச் செய்யப்பட்டது தெரிந்ததே. இதே வேளை தேர்தலுக்கு முன்பு அபிவிருத்தித் திட்டங்களை அமுல்படுத்தி அதன் மூலம் மட்டக்களப்பு மக்களின் ஆதரவைப் பெற வேண்டும் என்பதற்காக மட்டக்களப்பு மாவட்டத்தில் அபிவிருத்தி வேலைகளைக் கண்காணித்து

→16

## ஆப்பிழுத்த சாமி

தொண்டா - டி.பி.விஜயதுங்க ஊடல் நீங்கியதைத் தொடர்ந்து ஐ.தே. கட்சிக்குள் காற்று ராஜாங்க அமைச்சர் செல்லச்சாமிக்கு எதிராக வீசத் தொடங்கியுள்ளதாகத் தெரியவருகிறது. தனக்கும் மத்திய மாகாணசபை உறுப்பினர்கள் எண்மருக்கும் எதிராகத் தொண்டமான் தலைமையிலான இ.தொ.காவின் தேசிய சபை எடுத்த முடிவுகள் சட்டபூர்வமற்றவை என்றும் அவை தொண்டமானின் தனிப்பட்ட அதிகாரத்துவ அடிப்படையிலேயே அமைந்தவை என்றும் ஜனாதிபதிக்கு எழுதியுள்ள கடிதம் ஒன்றில் குறிப்பிட்ட செல்லச்சாமி அவர்கள், மந்திரிசபையில் இருந்து கொண்டே அரசாங்கத்திற்கு எதிராக இயங்கியதற்காகத் தொண்டமானை மந்திரி பதவியில் இருந்து நீக்கிவிடுமாறும் கேட்டிருந்தார். ஆயினும் செல்லச்சாமி அவர்களை விடத் தொண்டமான் அவர்களே சக்திமிக்கவர் என்று நம்பும் ஐ.தே.கவினர் இப்போது செல்லச்சாமியின் கோரிக்கைக்குச் செவி சாய்ப்பதாகத் தெரியவில்லை.

செல்லச்சாமி தொண்டமானை மந்திரி பதவியில் இருந்து நீக்கவேண்டும் என்று கோரியது தொடர்பாக கருத்துத் தெரிவித்த தொண்டமான் 'அவர் தனது அரசியல் சமநிலையையும் எதிர்காலத்தையும் இழந்து விட்டார். அவர் போக வேண்டிய இடம் அங்கொடை தான்' என்று குறிப்பிட்டார். செல்லச்சாமி அவர்கள் அங்கொடைக்குப் போக வேண்டுமோ இல்லையோ அவரது இன்றைய நிலை ஆப்பிழுத்த குரங்கின் நிலைதான் என்பதில் சந்தேகமில்லை.

## புதிய படைப்பிரிவுகள் மூன்று

வட-கிழக்குப் புலிகளை முறியடிக்கும் நடவடிக்கைகளை மேலும் விரிவுபடுத்தும் நோக்குடன் ராணுவத்துள் நடவடிக்கைப் படைப் பிரிவுகள் மூன்றை நிறுவுவதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இராணுவத்தின் புதிய மறுசீரமைப்புக்குக் கீழ் நிறுவப்படும் இந்தப் படைப்பிரிவுகள் மூன்றும் அநுராதபுரம், மட்டக்களப்பு இராணுவத் தலைமையகங்களுடன் தொடர்புபடுத்தப்படும். அநுராதபுரம் தலைமையகத்துடன் தொடர்புபடுத்தப்படும் நடவடிக்கை படைப்பிரிவு யாழ்ப்பாணம், ஆனையிறவு நடவடிக்கைகளுக்காகவும், மட்டக்களப்புத் தொடர்புப் படைப் பிரிவு கிழக்கு, திருகோணமலை மணலாறு நடவடிக்கைகளுக்காகவும் பயன்படுத்தப்படும்.

இந்த விசேட படைப்பிரிவுகள் மூன்றினதும் தளபதிகளாக மேஜர் ஜெனரல் மூவர் நியமிக்கப்படுவர். அதற்காகத் தற்போதுள்ள பிரிகேடியர் பதவியிலுள்ள மூவர் மேஜர் ஜெனரல்களாகப் பதவி உயர்வு பெறுவர் என்றும் அத் தகவல் தெரிவிக்கிறது.

## இலங்கைக்கு அங்கீகாரமில்லை



ஐ.தே.கவின் வெளிநாட்டுக் கொள்கை அதற்குச் சர்வதேசரீதியில் எத்தகைய மதிப்புமற்ற நிலையை உருவாக்கி உள்ளது என்று தெரிவிக்கிறார் ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா. ஐ.தே. கட்சி அரசு 1977இல் ஆட்சிக்கு வந்ததும் எமது வெளிநாட்டுக் கொள்கைகளை தமது நோக்கத்திற்கேற்ப திரித்துக் கொண்டது. அதனால் இன்று உலக நாடுகள் மத்தியில் முன்பிருந்தளவு அங்கீகாரம் அதற்கு இல்லாமல் போயுள்ளது. இன்றைய எமது வெளிநாட்டுக் கொள்கை, அந்நிய உதவிகளின் அடிப்படையில் தீர்மானிக்கப்படுகிறது. அண்மையில் இலங்கை அரசு ஆர்ஜன்டீனாவுக்கு எதிராக இங்கிலாந்தைச் சார்ந்து நின்றது இதற்கு ஒரு நல்ல உதாரணமாகும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நன்றி - நூலகத்திட்டம்



# யாருக்கு எதில் அக்கறை

## சந்திரசேகரனின் அறிக்கை தொடர்பாகச் சில கேள்விகள்

- அறுவைக்குமரன்



சந்திரசேகரன் தனது சர்ச்சைக்குரிய பிணை -விடுதலை பற்றி அண்மையிலே ''வீரகேசரி'' பத்திரிகையில் அறிக்கை ஒன்று விடுத்திருந்தார். அதிலே தன்னை விடுதலை செய்தவர்களின் நோக்கத்திலே அரசியல் இருக்கிறதா இல்லையா என்பதிலே தனக்கு அக்கறை இல்லை எனக் குறிப்பிட்டிருந்தார்.

இரவு முழுவதையும் விபச்சாரியின் விடுதியிலே கழித்த ஒருவ்ன் கையுங்களவுமாக மாட்டிக் கொண்டவுடன் '' இது விபச்சார விடுதியா இல்லையா என்பதிலே எனக்கு அக்கறை இல்லை. நான் கற்போடிருக்கிறேன்'' என்று சொன்னானாம். அதைப் போலிருக்கிறது சந்திரசேகரனின் பதில். அப்பாவி மக்கள் மனதில் இக்கூற்று வீரமுழக்கமாக தென்படலாம். .ஆனால் குற்றம் புரிந்த நெஞ்சின் குறுகுறுப்பை மறைக்கும் ஒப்பாரியே அது என்பது விடயம் தெரிந்தவர்களுக்குப் புரியும்.

அரசியல் விபச்சாரத்திலே ஈடுபடுபவர்களுக்கு இத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களில் அக்கறை இல்லாமல் இருக்கலாம். ஆனால் தனது அரசியல் எதிர்காலம் பற்றி இந்த சமூகத்திற்கு அக்கறை இருக்கிறது. தன்னைப் பிரதிநிதித்துவம் செய்வதாக கூறிக்கொள்பவர்களின் அரசியல் நடத்தையைப்பற்றி அதற்கு அக்கறை இருக்கிறது. தான் நம்பும் ஒருவர் சோரம் போகும் போது அதை தட்டிக் கேட்டு தடுத்து நிறுத்தும் அக்கறை அதற்கிருக்கிறது. திருவாளர் சந்திரசேகரனுக்கு மக்களை ஏமாற்றாமல் நேர்மையாக அரசியல் செய்ய வேண்டுமென்ற அக்கறை உண்மையில் இருக்குமானால் பின்வரும் கேள்விகளுக்கு அவர் பொறுப்போடு பதில் கூற வேண்டும். வாய்மாலங்களால் மூடி மெழுகாமல் ''ஆம்'' அல்லது ''இல்லை'' என்று நேரடியாக பதில் கூற வேண்டும்.

1.திரு.செல்லச்சாமி, இல.50,கிரகறிஸ் பாதை, கொழும்பு 07 ல் உள்ள குற்றப்புலனாய்வு தலைமையகத்தில் உங்களை மாத்திரம், மூன்று அல்லது நான்கு தடவைகள் சந்தித்து தனிமையில் உரையாடினாரா இல்லையா?

2. செல்லச்சாமி சந்திப்பை அடுத்து எந்நேரமும் அவருடன் நேரடியாக உரையாடக் கூடிய வித்தில் நீங்கள் தடுத்து வைக்கப்பட்டிருந்த 6ம் மாடியில் உங்களுக்கு தொலைபேசி வசதி செய்து தரப்பட்டதா இல்லையா?

3. நீங்கள் ஒரு தடவையல்ல, பல தடவைகள் செல்லச்சாமியுடன் தொலைபேசி மூலம் தொடர்பு கொண்டீர்களா இல்லையா?

4. செல்லச்சாமியுடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு கட்சித்தலைவர் என்ற முறையில் அதன் அனுமதியைப் பெற்றீர்களா?

5. செல்லச்சாமியுடன் தனிமையில் காதோடு காதாக நிகழ்த்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்களை கட்சி முன்னிலையில் வைத்து அங்கீகாரம் பெற்றீர்களா?

6. உங்களது வழக்கு ஓரளவு முடிவடைந்து தொகுப்புரை வழங்கும் கட்டத்தை நெருங்கி விட்டது. திரு.காதரின் வழக்கு முடிவடைந்து விட்ட மாதிரி. ஆனால் திரு.தர்மலிங்கத்தின் வழக்கு இன்னும் தொடக்க நிலையிலேயே இருக்கிறது. அப்படியான சூழலில் திரு.தர்மலிங்கத்திற்கு பிணை வாங்கிக் கொடுக்காமல் நீங்கள் மாத்திரம் விடுதலை பெற்றது அப்பட்டமான சுயநலமா இல்லையா?

7. 18.03.94 ல் பிணையிலே செல்லச்சாமியின் தயவால் பின் கதவு வழியாக வெளியேறுவது வெளிச்சத்திற்கு வந்து விடக்கூடாது என்பதற்காக பல நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொண்டீர்கள். தலவாக்கொல தலைமையகத்திற்கு தொலைபேசி மூலம் அறிவித்து அங்கிருந்து எவரும் நீதிமன்றம் வராமல் தடுத்து விட்டீர்கள். இவ்விடயத்தை திரைமறைவிலிருந்து கையாண்ட உங்கள் வாரிசு மாத்திரம் நீதிமன்றத்திற்கு ''விஜய்''யம் செய்தார். அன்று மாலைவரை தலவாக்கொலையிலுள்ள உங்கள் கட்சி முக்கியஸ்தர் எவருக்கும் பிணையில் நீங்கள் விடுதலையாகும் விடயம் தெரியாது. இதெல்லாம் உண்மையா இல்லையா?

8. மறுநாள் அதாவது 19.03.94ல் உங்கள் தங்கையின் திருமணத்திற்கு திரு.செல்லச்சாமி வருகை தந்த போது அருகிலிருந்த உங்கள் அமைப்பாளர்களிடம் 'வெட்கம் இருந்தால் இவர் இப்படி வருவாரா?'' எனக்கூறி அவரோடு எந்த நட்பும் இல்லாததுபோல் நாடகமாடினீர்களா இல்லையா? பின்னர் அவரை ''வந்தவரை வரவேற்கும் பண்பாடு'' என்பது போல் வரவேற்றீர்களா இல்லையா?

9. ''சரிநிகர்' பத்திரிகையைப் பார்த்துத்தான் உங்கள் கட்சி முக்கியஸ்தர்கள் நீங்கள் செல்லச்சாமியின் முயற்சியால் தான் விடுதலையானீர்கள் என்ற விபரத்தை ஆச்சரியத்தோடு தெரிந்து கொண்டார்கள் என்பது உண்மையா இல்லையா?

எப்படியோ, திரைமறைவிலே திருட்டுத்தனமாக நடந்த ஒரு விடயம், வெளியே வராமல் மறைத்து விடலாம் என நினைத்த ஒரு விட்ய்ம் வெளிச்சத்திற்கு வந்துவிட்டது. நீங்கள் விடுதலையாகிச் செல்லும் போது செல்லா- விஜயதுங்க உறவை நீங்கள் பெருமையாகக் கருதியிருக்கலாம். தொண்டமானை வெளியே தள்ளிவிட்டு உங்களை உள்ளே கொண்டுவந்து மந்திரியாக ஆக்குவார்கள் என்று கூட கற்பனை செய்திருக்கலாம். ஆனால் தென மாகாணசபை முடிவு அனைத்து எதிர்பார்ப்புகளையும் தவிடு பொடியாக்கி விட்டது. அரசுடனான உறவை இட்டு பெருமை பேச முடியாத நிலை உங்களுக்கு. உங்களைப் பகிரங்கமாக அரவணைத்து எதிர்கட்சிகளிடம் வாங்கிக் கட்டிக் கொள்ளும் வலிமை இப்போது அரசிற்கில்லை. விஜயதுங்க தனது தேர்தல் வியூகத்தை வேறு மாற்றி அமைக்கத் தொடங்கி விட்டார். தொண்டமானுடன் சமரசம் செய்து கொள்ள அவர் தயாராகிக் கொண்டிருக்கிறார். இதனால் திரைமறைவிலே உங்களுக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்ற பேரத்தால் இருவருக்குமே பயனில்லாமற் போய்விட்டது.



இப்போது....சமூகத்திற்குப் பதில் சொல்ல வேண்டிய பரிதாபகரமான நிலைமைக்கு நீங்கள் தள்ளப்பட்டிருக்கிறீர்கள். எப்படி அந்த அசிங்கத்தை நியாயப்படுத்துவது? சிறந்த பிரச்சாரகரான தாங்கள் வீரவசனங்கள் பேசி அதை மூடிக்கட்ட முயல்கிறீர்கள் என்பது...ன் உண்மை. இத்தகைய வெற்று வேட்டு சத்தங்களால் காது புளித்துப் போயிருக்கிறது. உங்கள் கள்ளத்தனத்தை கவர்ச்சியான வார்த்தைகளால் மூடி மெழுகாமல் செய்ததவறை ப்கிரங்கமாக ஒத்துக் கொள்ளுங்கள்; அதை விடுத்து கூட்டம் போட்டு உரத்துப்பேசுவதால், காரசாரமாக பத்திரிகைகளுக்கு அறிக்கை விடுவதால் முழுப்பேரையும் முட்டாளாக்கி விடமுடியாது.

# எல்லைத் தமிழன்

## பள்ளா பிதுறு கண்ணேத் நாஃஹ; கண கொணாட்ட தென்னெத் நாஃஹ!

யாழ்ப்பாணத்திற்கு நல்லண்ண விஜயம் ஒன்றை மேற்கொண்டு, புலிகளுடன் சமாதானப் பேச்சுவார்த்தைக்கான நிலைமைகளைப் பரிசீலிக்கவென சபாநாயகர் எம்.எச்.முகமத் அவர்கள் எடுத்த முயற்சி தடுக்கப்பட்டு விட்டது.

பயணத்தை ஒத்திப் போடுமாறு ஜனாதிபதி கேட்டுள்ளதாக செய்திகள் கூறுகின்றன.

புலிகளுடனான பேச்சுக்கு இத்தகைய தனிப்பட்ட முயற்சிகளை மேற்கொண்டவர்களை ஜனாதிபதி தடுப்பது இது முதல் தடவை-அல்ல. இதற்கு முன்னரும் இவ்வாறே அமைச்சர் தொண்டமான் அவர்களது முயற்சிகளும் தடுக்கப்பட்டிருந்தது!

மனமுடைந்து போன முகமத் தனது சபாநாயகர் பதவியை ராஜினாமாச் செய்வதாக தெரிவித்திருக்கிறாராம்.

இந்தளவுக்கு தனது சுயகௌரவத்தை அவர் மதிப்பது சந்தோசமானது தான்!

ஆனால், 'நான் உயிருடன் இருக்கும்வரை ஈழம் பிரிய இடம் தரமாட்டேன்' என்றும் '' வடக்கு கிழக்கில் பயங்கரவாதமே நிலவுகிறது'' என்றும் கூறும் ஜனாதிபதியின் அரசு, இப் பேச்சுவார்த்தைக்கு ஒப்புக் கொள்ளும் என்ற நம்பிக்கையில் சபாநாயகர் முயற்சி செய்தாரோ தெரியவில்லை!

விஜயதுங்கவின் 'பொலிஸி'யை ஒரு சிங்களப் பழமொழி தெளிவாகவும இரத்தினச் சுருக்கமாகவும் விளக்குகிறது.

பள்ளா பிதுறு கண்ணேத் நாஃஹ; கண கொணாட்ட தென்னெத் நாஃஹ

வைக்கோற பட்டடை நாய் நாய் என்பார்களே, அதுதான். தானும் தின்னாது; தின்னுற மாட்டையும் தின்ன விடாது!

## சொல்லா விட்டால் குற்றம்!

புலிகள் பற்றித் தகவல் கொடுக்கத் தவறியவர்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் அச்சுவேலியைச் சேர்ந்த இரண்டு இளைஞர்கள்கள் மீது விசாரணை நடைபெற்றது.

நீதிமன்றத்தில், புலிகளுக்குப் பதுங்குகுழி வெட்டியது, அவர்கள் பற்றி தகவல் தராதது என்பதுபற்றி நடந்த இந்த விசாரணையின் போது, யாழ்ப்பாணத்தில் இருக்கும் ஒருவர் எப்படித் தகவல் தருவது? அதற்கு அவர் வவுனியாவுக்கல்லவா வர வேண்டும் என்று நீதிபதியே அரசுதரப்பு வழக்கறிஞரிடம் கேட்டார்.

இப்படியான குற்றச்சாட்களின் மீது நடக்கும் விசாரணைகளின் கேலிக்கூத்தை இதைவிடச் சிறப்பாக ஒருவர் விமர்சிக்க முடியாது.

சும்மாகவேனும் யாராவது இளைஞர்களை கைது செய்வது, காலவரையற்று சிறையிலடைப்பது பின்னர் ஏதாவது ஒரு குற்றச்சாட்டை சுமத்துவது என்பனஇலங்கை அரசின் பொலிசாரின் கடமையாகிவிட்டது!

யாழ்ப்பாணத்திலிருந்து வருகிற எவருக்கும் நம்பிக்கையாகவே சுமத்தக்கூடிய ஒரு குற்றச்சாட்டு தான் 'பதுங்கு குழி வெட்டியது' என்பது.

யாழ்ப்பாணத்தில் பதுங்கு குழி வெட்டியவர்கள் எல்லாம் விசாரிக்கப் படுவதானால், அதற்கு இலங்கையிலுள்ள நீதிமன்றங்களே போதா.

அந்தக் 'குற்றத்தை' செய்யாதவர்கள் என்று யாராவது மிஞ்சுவார்கள் என்பதும் அபூர்வம்.

ஆனாலும், இந்த அரசின் பொலிசாருக்கு இவையும் குற்றங்கள்!

வேண்டாப் பெண்டாட்டி கைபட்டாலும் குற்றம், கால்பட்டாலும் குற்றம் என்பார்கள்.

இவர்களுடைய நீதியில் தமிழராய்ப் பிறப்பதே குற்றம் என்பதுதான் உண்மை.

புலிகளுக்கு பதுங்கு குழி வெட்டியவர்கள் விசாரிக்கப்பட வேண்டுமானால், அவர்களுக்கு ஆயுதம் கொடுத்த ஐ.தே.கவினரை முதலில் விசாரிக்க வேண்டும்.

என்ன செய்வது? இந்த நாட்டில் சிறுபான்மையினராகப் பிறந்தவர் தலைவிதி இது. அனுபவித்துத் தொலைக்க வேண்டியதுதான்!



சரிநிகர் மாதம் இருமுறை இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் (MIRJE)வெளியிடப்படும் இதழாகும். கருத்துச் சுதந்திரமும் பத்திரிகைச் சுதந்திரமும் பேணப்படுவதற்காகவும், இனத்துவ சமத்துவத்துக்காகவும் சரிநிகர் பாடுபடும். சரிநிகரில் வெளியாகும் எல்லாக் கருத்துகளும் ஆசிரியருடையதோ அல்லது இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்துக்குமான இயக்கத்தினதோ கருத்துக்களாக அமைய வேண்டுமென்ற கட்டாயமில்லை. பத்திரிகை நாகரீகத்தையும் தர்மத்தையும் பேணியமைந்த எவ்வகையான மாற்றுக் கருத்துக்களையும் சரிநிகர் பிரசுரிக்கும்.


சந்தா:
உள்நாடு:175/=
வெளிநாடு : 30U.S.$

சந்தாவை காசுக்கட்டளை/தபாற் கட்டளை மூலமாக MIRJE என்ற பெயருக்கு எடுத்து அனுப்பி வையுங்கள்.

எல்லாத் தொடர்புகளுக்கும்
ஆசிரியர்
'சரிநிகர்'
4, ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு -05
தொலைபேசி: 584380

நன்றி - நூலகத்திட்டம்





சரிநிகர்
4 ஜெயரட்ன மாவத்தை
திம்பிரிகஸ்யாய
கொழும்பு-05
தொலைபேசி:584380

பிரதம ஆசிரியர்:சேரன்

# மரம் பழுத்தால் வெளவால் வரும்

தேர்தல் ஆண்டாக இவ்வாண்டு பிரகடனப் படுத்தப்பட்டிருக்கிறது. ஐ.தே.க அரசாங்கத்தின் இந்த முடிவு வெளியானதோ இல்லையோ எல்லாக் கட்சிகளும் கச்சையைக் கட்டிக் கொண்டு களத்தில் குதிக்க ஆரம்பித்துவிட்டன.

தூசுதட்டிப் போன பழைய அறிக்கைகள், கட்சிக் கோட்பாடுகளை தூசுதுடைத்துக் கொண்டு கடை விரிக்க ஆரம்பித்துவிட்டன.

கடந்த ஐந்தாண்டு காலமாக மறந்து போன மக்களைப் பற்றி அக்கறையுடனும் அனுதாபத்துடனும் பேசத் தொடங்கி விட்டன.

அண்மையில் நடைபெற்ற உள்ளூராட்சித் தேர்தல்கள், மாகாணசபைத் தேர்தல்கள் தந்த உற்சாகத்துடன் இக்கடை விரிப்புகள் ஆரம்பமாகியுள்ளன.

இவற்றுள், தமிழர் விடுதலைக் கூட்டணியே தமிழ்க்கட்சிகளில் இப்போது மிகவும் தீவிரமாக கடை விரிக்கத் தொடங்கியுள்ள கட்சியாகும்.

பாராளுமன்றத்தில் இம்முறை உதய சூரியன் சின்னத்தில் தனித்து நின்று போட்டியிடுவது என்ற முடிவுடன் அவர்கள் களத்தில் இறங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

வவுனியா, மட்டக்களப்பு, திருமலை மன்னார் பிரதேசங்களில் தமது உறுப்பினர்களை நிறுத்துவதற்கான முயற்சிகளையும் முடுக்கிவிட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

கடந்த தேர்தலில் முன்னாள் 'விடுதலை இயக்கங்களுடன்' கூட்டாகச் சேர்ந்து போட்டியிட்டு மண்கவ்விய போதும், இம்முறை எப்படியாவது வெற்றி பெற்று விடலாம் என்ற நம்பிக்கையை அவர்களுக்கு கொடுத்தது அண்மைய உள்ளூராட்சித் தேர்தல்களே.

பாராளுமன்ற அப்புக்காத்து அரசியல் பாரம்பரியத்தைக் காப்பாற்றி வந்த கூட்டணியினர், அடுத்த தேர்தல் தமிழீழத்திலேயே என்று 1977ல் வீதிக்கு வீதி முழங்கிய கூட்டணியினர், மாற்று அரசியல் கருத்துக் கொண்டோரைத் துரோகிகள் என்று பட்டம் சூட்டி 'மரணதண்டனை' வழங்குவதற்கு வாழ்த்துப்பாடிய கூட்டணியினர், இன்று மீண்டும் தேர்தலில் குதிக்க முடிவு எடுத்துள்ளனர்.

உண்டு ருசிகண்ட சீட்ருக்கு தன் உத்தியோகத்தைவிட மனம் வருமா என்ன? ''மரம்பழுத்தால் வெளவால் வரும்'' என்று தெளிவாகவே உணர்ந்து வைத்திருப்பவர்கள் அவர்கள்; தமிழ் மக்களின் விடுதலை உணர்வை வெற்று வெறியாக்கி அவர்களது தியாகங்களை முதலாக வைத்து அரசியல் பிழைப்பு நடாத்தத் தெரிந்தவர்கள் அவர்கள்; எந்த நேரத்தில் எப்படி யாருடைய காலைப்பிடித்து தமது பதவியைக் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பதில் நிபுணத்துவம் பெற்றவர்கள் அவர்கள்.

சரியான சந்தர்ப்பத்தில் தேர்தலில் குதிக்கவுள்ளார்கள்.

இனியென்ன? களம்பல கண்ட தமிழர் தமது வீரத்தை இன்னொருமுறை மெய்ப்பிக்க உதயசூரியனுக்கு புள்ளடி போடும்படி கேட்கப்படப்போகிறார்கள்.

சிம்மக் குரலோன் சிவா பாராளுமன்றத்தில் 'சிங்கள வெறிநாய்க்' கூச்சலை அட்க்கக் கர்ச்சிக்கப் போவதைப் பார்த்து நாமெல்லாம் மெய்சிலிர்க்கப் போகிறோம்.

வெறும் கூட்டணியினர் மட்டுமல்ல.

காங்கிரஸ் கட்சியின் தலைவர் குமார் பொன்னம்பலமும் தனது கட்சியை தேர்தலில் இறக்க ஆள்தேடும் படலத்தை ஆரம்பித்துள்ளார்.

இவ்வாறான ஒரு முயற்சியாக அவர் அண்மையில் பண்டார நாயக்கா சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் கூட்டம் ஒன்றைக் கூட்டி கொழும்பு மாவட்டத்தில் தனது தலைமையில் ஒரு சுயேட்சைக்குழுவை இறக்கும் முயற்சியில் ஈடுபட்டார்.

அவரது இம் முயற்சியும் வழமைலபோல கைகூடாததால் கிழக்கு மாகாண தேர்தல் களம் பற்றி இப்போது சிந்தித்து வருவதாக தெரிகிறது.

இதுதவிர வேறுசில புத்திசீவிகளும் ஒரு புதிய கட்சி ஒன்றை உருவாக்கி தேர்தலில் இறங்க முயல்வதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஆக எல்லோருக்கும் உள்ள ஒரே இலட்சியம் தேர்தலில் குதிப்பதும் ஆசனங்களை கைப்பற்றுவதும் தான்.

ஸ்ரீ லங்கா அரசின் பாராளுமன்றம், அதன் இருப்பு எல்லாமே சிறுபான்மை மக்களது உரிமைகளை நசுக்கும் நோக்குடன் அமைக்கப்பட்டிருக்கின்றன என்ற உண்மையை இவர்கள் ஒவ்வொருவரும் நன்கு அறிவர்.

அதே மக்கள் விரோத, இனவெறிப் பாராளுமன்றத்தின் ஆவனங்களில் அமர்வது சுத்தமான காட்டிக் கொடுப்பு என்றும் இவர்கள் அறிவர்.

ஆனால் ஆசை -பதவி ஆசை -அதிகார விருப்பு என்பன யாரைத்தான் விட்டது.

தமிழ் மக்களது அரசியல் உரிமைகள் போனால் என்ன? அவர்களை முற்றாகக் கொன்றொழிப்பதே இந்த அரசின் நோக்கமாக இருந்தால் தான் என்ன?

இந்த நாட்டின் மொத்தச் சிறுபான்மை இனமுமே -தமிழ், முஸ்லீம் மலையக மக்களுமே- அவமதிக்கப்பட்டால்தான் என்ன?

பாராளுமன்றக் கதிரைச் சுகத்துக்கு முன் அவை எம்மாத்திரம்?

பாராளுமன்றத்தில் எம்மவர்கள் முழங்கப் போகிற முழக்கத்திற்கு முன்னாள் இம்மக்கள் துன்ப துயரங்களெல்லாம் தூசு தூசாகிப் போகவோ என்ன?

ஆயினும் ஒரு கேள்வியைக் கேட்டுத்தான் ஆக வேண்டும் என்று தோன்றுகிறது.

நமது முதுகிலே ஏறிச் சவாரிவிட இவர்களை எவ்வளவு காலத்துக்குத்தான் நாம் அனுமதிக்கப் போகிறோம்?

# காக்கை உவக்கும் பிணம்

கடந்த சில மாதங்களாக நிலவி வந்த தொண்டா -விஜேதுங்க ஊடல் சென்ற வாரத்தில் நடைபெற்ற கூடலுடன் முடிவுக்கு வந்தது.

தொண்டா -டிங்கிரி பண்டா உறவு இந்தக் கூடலில் மீளக் கட்டியெழுப்பப்பட்டதாகவும், இரு முதுபெரும் அரசியல் வாதிகளும் மீளவும் இணைகிறார்கள் என்றும் பத்திரிகைகள் எழுதின.

தொண்டா இல்லாமலே, பெரும்பான்மையினரின் ஆதரவால் மட்டுமே இந்த நாட்டின் ஆட்சியை மீளவும் கைப்பற்றி விட முடியும் என்று கணக்குப் போட்டிருந்தார் டிங்கிரி பண்டா. அனுராவை ஸ்ரீ.ல.சு.கவிலிருந்து உடைத்தெடுத்து, காமினியைச் சேர்த்துக் கொண்டு நின்றும் கூட தெற்கில் நடைபெற்ற மாகாண சபைத் தேர்தலில் ஐ.தே.க படுதோல்வியைத் தழுவியது. ஜனாதிபதியின் பேரினவாதக் கூச்சல், வடக்கு கிழக்கின் மீதான தனது படையெடுப்புக்கு ஆதரவுக்கரம் தந்து தன்னைப்பலப்படுத்துமாறு அவர் முன்வைத்த கோரிக்கை போன்றவற்றிற்கு மக்கள் செவிசாய்க்கவில்லை என்றும், ஐ.தே.க.வின் தென் மாகாணத் தோல்விக்கு தொண்டாவின் தலைமையிலான இ.தொ.காவின் ஆதரவின்மையும் ஒரு காரணம் என்றும் ஐ.தே.கவினரே கூறத் தொடங்கிவிட்டனர்.

இந்தத் தோல்வி ஒரு சிவப்பு நோட்டீஸ்; அபாய எச்சரிக்கை என்று தெரிவித்த ரணில் உடனடியாக இதை திருத்திக் கொள்ள தாம் முயல வேண்டும் என்றும் கூறியிருந்தார்.

கட்சியின் செயலாளர் நாயகம் சிறிசேனகூரே, சிறுபான்மையினரை அரவணைத்துப் போன முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசாவின் கோட்பாடுகளைத் தூக்கி வீசியது பெரும் தவறு என்று தெரிவித்திருந்தார்.

ஆக, ஜனாதிபதியின், திமிர் பிடித்த இனவெறிக் கூச்சலை அடக்கி வாசிப்பதும் தொண்டமானுடன் உறவைப் புதுப்பித்துக் கொள்வதும் அவசியம் என்று யூ.என்.பியினர் தெளிவாகவே உணரத் தொடங்கினர்.


மார்ச் 24ம் திகதிய மக்கள் கூட்டணியின் தென் மாகாணசபை தேர்தல் வெற்றி யூ.என்.பிக்கு தனது போக்குப் பற்றிய ஒரு அமிலப் பரிசோதனை (Acid Test) யாக இருந்தது என்பதில் ஐயமில்லை.

செல்லச்சாமி அவர்களையும், அவரது மத்திய மாகாணசபைச் சகாக்களான எட்டுப்பேரையும் சார்ந்து நின்று இ.தொ.காவை நிலைகுலையச் செய்து விடலாம் என்ற முயற்சியும் அவ்வளவு பயன்தருவதாக இருக்கவில்லை.

இ.தொ.கா.விலிருந்து செல்லச்சாமி கோஷ்டியின் வெளியேற்றம் இ.தொ.கா.விலோ தொண்டமானின் தலைமையிலோ ஒரு சிறிய தாக்கத்தைக் கூட ஏற்படுத்தவில்லை; மாறாக அது இ.தொ.கா ஒரு நியாயத்திற்காக, மானத்திற்காக நிற்கும் கட்சி என்ற பிரமையை மேலும் வளர்க்கவே பயன்பட்டது என்பதும் அரசுக்குத் தெளிவாகிப் போய் விட்டது.

விளைவு, டி.பியார் தொண்டாவிடம் தன்னைச் சந்திக்க வருமாறு அழைப்பு அனுப்பினார். கடந்த வாரத்தின் ஒரு மாலை நேரத்தில் பேரன் ஆறுமுகத்துடன் சென்ற தொண்டாவை டி.பியார் கட்டியணைத்து நெஞ்சாரத் தழுவி உணர்ச்சி பொங்க 'உங்களைப் புண்படுத்தும் நோக்கம் எனக்கு ஒரு போதும் இருந்ததில்லை' என்று அறிவித்ததும் தொண்டாவின் உச்சி குளிர்ந்து போய் விட்டது.

'பத்திரிகைகள் தான் வேற்றுமைகளை ஊதிப் பெரிதாக்கி வளர்த்து விட்டன. உங்கள் மனதை எனது பேச்சுக்கள் புண்படுத்தியிருந்தால் அதற்காக நான் வருந்துகின்றேன். உண்மையில்



எனக்கு அந்த நோக்கம் இருக்கவில்லை...'

இத்தகைய ஒரு கணத்துக்காகவே காத்துக் கிடந்த தொண்டமான் மெய்சிலிர்த்துப் போய் எல்லாக் கசப்புகளையும் மறந்துவிட்டதாய் அறிவித்தார்.

'எமது உறவு இரு சகோதரர்களுக்கிடையிலான ஒப்பந்தம் போன்றது...' என்று பிறகு அறிவித்தார் தொண்டமான் அவர்கள்.

அவருக்கு இருந்ததெல்லாம் மலையக மக்களை ஒடுக்குவது சிறுபான்மை இனங்களை அவமதிப்பது, வடக்குக் கிழக்கில் தொடர்ந்து யுத்தத்தை நடாத்துவது என்பனவே.


வடக்கு கிழக்கில் நிலவுவது பயங்கரவாதமே என்று கூறி, தொண்டமான் புலிகள் சந்திப்புக்கான முயற்சிகளை அவர் தடுத்தது ஒன்றும் தொண்டமானை அவமானப்படுத்த அல்ல.

இனப்பிரச்சினைக்கான தீர்வு யுத்தமே என்று உறுதியாகத் தெரிவிக்கவே அவர் அப்படிச் செய்தார்.

பெரும்பான்மையினம் என்ற விருட்சத்தில் படரும் கொடிகளே சிறுபான்மையினங்கள் என்று சொன்னதெல்லாம் என்னவிதத்தில் தொண்டமானை புண்படுத்த முடியும்?

உண்மையில் தொண்டமானைப் புண்படுத்திய விடயங்கள் இவையல்ல.

அவரது அடிமடியிலேயே கைபோடுகின்ற டிங்கிரியாரின் நடவடிக்கை மலையக மக்கள் தொடர்பான அவரது கோரிக்கைகள் எல்லாம் தனக்கும் -டி.பியாருக்கும் இடையில் ஏற்பட்ட உறவின் பின்னர் நிறைவேற்றப்பட வேண்டியவை அல்ல என்றாகி விட்டது தொண்டமான் அவர்களுக்கு.



அவரைப் புணபடுத்தும் நோக்கம் தன்னிடமிருக்க வில்லை என்று டி.பியார் சொன்னபின் இனி என்ன வேண்டும்? உண்மைதான்.

டிங்கிரி பண்டா விஜேதுங்காவுக்கு தொண்டமான் அவர்களைப் புண்படுத்தும் நோக்கம் ஒரு போதும் இருக்கவில்லை.

யான, தொண்டமான் இல்லாமலேயே தம்மால் வெல்லமுடியும் என்று கூறிச் செயற்பட்டு வந்ததே உண்மையில் அவரை புண்படுத்திய விடயமாகும்.

அவரவர் தத்தம் பங்கை அனுபவிப்பதும் இருவரும் சேர்ந்து தம் பங்குகளை பிறரிடமிருந்து பாதுகாப்பதும் என்ற தமக்கிடையிலான 'சகோதரத்துவ' ஒப்பந்தத்தை மீறி தொண்டமானின் பங்கையும் டி.பி.யார் அனுபவிக்க முயன்றது தான் அவரைப் புண்படுத்திய விடயம்.

ஆனால் மார்ச் 24 ம் திகதிய தேர்தல் முடிவு டிங்கிரியாருக்கு ஒரு உண்மையை விளக்கிவிட்டது:

தொண்டமான் பங்கிலே கைவைக்கப் போய் தன்பங்கையும் பறிகொடுத்து விட வேண்டி வரக்கூடும் என்ற உண்மையே அது.

ஆக அவர்களது 'சகோதரத்துவ ஒப்பந்தம்' மீளவும் நடைமுறைக்கு வருகிறது. கூடலில் முடிவுபெற்ற ஊடல் முன்பை விட ஆழமான பிணைப்பை ஏற்படுத்திவிடும் என்று எதிர்பார்க்கலாம்.

செல்லச்சாமியை கைவிடுவது என்ற முடிவை ஐ.தே.க எடுப்பது இதற்கு ஒரு அடையாளமாகலாம்.

எப்படியோ, இனவாத நோக்குடன் தொண்டமானை எதிர்த்த டி.பியார் இப்போது அவருடன் இணைந்து விட்டார். டி.பியின் இனவாதமும் சரி, தொண்டாவின் இனப்பற்றும் சரி ஒரே மாதிரியானவைதான். ஆட்சியில் இருப்பதற்கான தந்திரங்கள்!

ஆட்சியில் இருப்பது என்ற இலட்சியத்திற்காகவே இயங்குகிறவர்கள் இணைவதில் என்ன ஆச்சரியம் இருக்கிறது?

**மூர்க்கரை மூர்க்கர் முகப்பர் முதுகாட்டிற்**
**காக்கை உவக்கும் பிணம்!**

-ஔவையார்

நன்றி - நூலகத்திட்டம்




ஐ.தே.க.வின் பாராளுமன்ற உறுப்பினரும், சிறீலங்கா அரசின் சபாநாயகருமாகிய காமினி பொன்சேகா அவர்களால் திரைக்கதை எழுதப்பட்டு, நெறியாள்கை செய்யப்பட்ட சினிமாக்கலைட் படைப்பு 'நொமியன மினிசுன்' (இறவா மனிதர்கள்)

காமினி பொன்சேகா, ஏற்கனவே தமிழ் சிங்கள இன உறவுகள் தொடர்பாக 'சறுங்கலே' (பட்டம்) 'கொட்டி வலிகய' (புலியின் வால்) ஆகிய திரைப்படங்களைத் தயாரித்துள்ளார். இப்போது சற்று நிலைமை மாறிவிட்டது. இனவாதத்தைக் கக்கிக் கொண்டிருக்கின்ற ஒரு வரைத் தலைவராகக் கொண்டவர் காமினி பொன்சேகா. அத்துடன் நாட்டின் ஒரு இன மக்களை அழித்துக் கொண்டிருக்கிற இராணுவத்தை வீரர்களாகக் கணித்து, தனக்கு அரசினால் வழங்கப்பட்ட சகல வசதிகளையும் அவ்விராணுவத்துக்கு வழங்க வேண்டும் எனும் கோட்பாட்டையும் கொண்டவர். அத்தகைய ஒருவரால் இத்திரைப்படம் தயாரிக்கப் பட்டிருக்கிறது.

காமினி பொன்சேகாவே இத்திரைப்படத்தின் நாயகன். இராணுவ அதிகாரியாக அவர் பாத்திரமேற்றுள்ளார். இன முரண்பாடு கூர்மையடைந்த காரணத்தால் அவர் மனைவி அவரை விட்டுப் பிரிந்து இந்தியா சென்று விட்டார். இராணுவ செயற்பாடுகளே அவர் முழுநேர வேலை. அவரின் கீழ் இன்னொரு இராணுவ அதிகாரி. மிக இளைஞன். அவ்வதிகாரி ஒரு பெண்ணைக் காதலிக்கிறார்









சிங்களவரின் 'காலைப்பிடிக்க' வேண்டிய தேவையையே வலியுறுத்துகிறது. இது எந்த வகையில் சேர்த்தி?

போராளிகளின் கொடுமையான பக்கங்கள் காட்டப்படுகின்றன. சிங்கள இராணுவ அதிகாரி காயம் பட்டிருக்கிறது. காமினி பொன் சேகா கொல்லப்படுகிறார்.

மேலோட்டமாகப் பார்த்தால், குறிப்பிட வேண்டிய, நாட்டுக்குத் தேவையான கருத்தே எடுத்துக்கூறப்பட்டிருப்பது போல் தோன்றும். ஆனால் 'பச்சை' இனவாதக் கருத்துக்களைக் கொண்ட திரைப்படம் இது. ஜனாதிபதியும், அமைச்சர்களும், பாராளுமன்ற

சிறீலங்கா இராணுவம் தமிழ்ப் பிரதேசத்துக்கு வருகிறது. பனையைக் காட்டுகிறார்கள். ஆனால் அதன்முன்னர் காட்டப்படுவது மின்கம்பத்தில் மரண தண்டனை வழங்கப்பட்ட ஒருவரை. குரூரமான பிரதேசமாக இதனைக் காட்டுவதுதான் நோக்கம். தமிழ்நாட்டில் கே.பா

றான். வைத்தியம் தெரிந்த தமிழ்க் குடும்பம் அவனைக் காப்பாற்றுகிறது. போராளிகளின் கட்டுப்பாட்டிலுள்ள ஒரு பிரதேசத்தில் அவனை ஒளித்தும் வைத்திருக்கிறது. போராளிக்குழுவிற்கு இத்தகவல் தெரிவிக்கப்படவுமில்லை. போராளிக்குழு இதனை அறி

போய், தமிழ்மக்களைக் கொன்றொழிக்கிற இராணுவத்தை **'இறவா வீரர்கள்** என அழைக்கிறார். இது எந்த வகையில் நியாயம்?

அமெரிக்கா சார்பு நிலைப்பாடு, அமெரிக்காவை நியாயப்படுத்தி, வியட்நாமில் அமெரிக்கா செய்த கொடுமைகளை மூடி மறைத்து "வியட்நாம் போரை வைத்து ஹொலிவூட் பல திரைப்படங்களைத் தயாரித்துள்ளது. 'பிளாட்டூன்' (Platoon) அவற்றுள் ஒன்று. ஆனால் எந்த ஒரு திரைப்படமும், வியட்நாம் மண்ணில் அமெரிக்க இராணுவம் செய்த கொடுமைகளை ஒப்புக்காவது காட்டாமல் விட்டதில்லை.

இவ்வாறான திரைப்படங்களில் வி.கோபாலகிருஷ்ணன், எஸ்.ராம்தாஸ், ஸ்ரீதர் பிச்சையப்பா, நிலாமதி பிச்சையப்பா போன்ற தமிழ்க் கலைஞர்களும் நடிக்கிறார்கள் என்பது தான் இன்னும் வெட்கத்துக்குரிய செயல். வாமதேவன் எனும் தமிழ்க் கலைஞரே ஒளிப்பதிவும் செய்திருக்கிறார். இவர்களை என்ன சொல்ல?




ஒரு இராணுவ அதிரடி நடவடிக்கைக்காக அவ்விளம் இராணுவ அதிகாரியை காமினி பொன்சேகா தமிழ்ப் பிரதேசம் ஒன்றிற்கு அனுப்பி வைக்கிறார். போராளிகளின் முகாம் ஒன்று முற்றுகையிடப்படுகிறது.

போராளிகள் குழுத்தலைவன் பிடிபடுகிறான். இளம் இராணுவ அதிகாரி அத்தலைவனுக்கு மனிதாபிமான அடிப்படையில் உதவி செய்கிறார். இராணுவம் வெற்றியுடன் திரும்புகிறது எனும் சமயத்தில் போராளிக்குழுவின் கண்ணி வெடித் தாக்குதலாலும், ஏனைய தாக்குதல்களாலும், இராணுவம் அழிகிறது. தலைவன் விடுவிக்கப்படுகிறான். இளம் இராணுவ அதிகாரி கொல்லப்படுகிறான் என நினைத்த போதிலும், வைத்தியரான தமிழர் ஒருவரின் குடும்பம் ஒன்றினால் காப்பாற்றப்படுகிறார். இதனை மோப்பம் பிடித்த போராளிக்குழு, இளம் இராணுவ அதிகாரியை தம்முடன் கூட்டிச் செல்கின்றது. பாதுகாப்புக் கொடுத்த தமிழ்க்குடும்பத்தையும் கொலை செய்கிறது.

இளம் அதிகாரி இறந்துவிட்டார் என்றே இராணுவ அதிகாரிகள் நினைக்கிறார்கள். ஆனால் போராளிக் குழுவின் நிபந்தனை ஒன்றில், இளம் இராணுவ அதிகாரியின் பெயர் குறிப்பிடப்பட்டு அவரை விடுதலை செய்வதற்கான கோரிக்கையை முன் வைக்கிறது. இது தொடர்பான பேச்சுவார்த்தை நடாத்த இராணுவ அதிகாரியான காமினி பொன்சேகா தமிழ்ப் பிரதேசத்துக்கு வருகை தருகிறார். காமினி பொன்சேகாவின் செயற்பாட்டை விரும்பாத இன்னொரு இராணுவ அதிகாரி, இப்பேச்சுவார்த்தை நடக்கிற போது, துப்பாக்கியால் போராளிகளை நோக்கிச் சுடுகிறார். பேச்சுவார்த்தை நடக்கிற போது யுத்தம் தொடங்குகி

உறுப்பினர்களும், எதிர்கட்சியைச் சேர்ந்தவர்களும், ஏனைய நிறுவனங்களும் தம்மளவில் செய்கின்ற காரியங்களை கலைஞன் எனும் முறையில் காமினி பொன்சேகா கச்சிதமாகச் செய்திருக்கிறார்.


இச்சினிமாவில் அடிக்கடி ஒரு வசனம் வருகிறது. "இந்த நாட்டிற்காகவும், இனத்திற்காகவும் போராட வேண்டும்." நாட்டிற்காகப் போராடுவது சரி. இனத்திற்காகப் போராட வேண்டும் என்கிறார் காமினி பொன்சேகா. எந்த இனத்திற்காக? தமிழினத்தை அடக்கி ஒடுக்கிற பெருந்தேசிய இன வாதிகளுக்காகவா?

போராளிக்குழுத் தலைவன் கூறுகிறான்! "நீங்கள் கூலிக்காக வேலை செய்பவர்கள் தானே?" இராணுவ அதிகாரி பதிலளிக்கிறான்" நாட்டிற்காகவும் இனத்திற்காகவும் போராடுகிறோம்." இதில் அப்பட்டமாகத் தொனிப்பது இனவாதமில்லையா? அவர்கள் இனம் எனக் குறிப்பது சிங்கள இனத்தை மாத்திரமே.



லச்சந்தர் தனது புன்னகை மன்னன் எனும் சினிமாவில் ஈழத்துத் தமிழ்ப் போராளிகளைக் காட்டுகிற போது இவ்வாறு தான் சித்திரவதை முகாமாகப் போராளிக் குழுக்களின் இருப்பிடத்தைக் காட்டினார். இவ்வாறு காட்டுவதால் போராட்டத்தைக் கொச்சைப்படுத்தி விடலாம் என அவர்கள் எண்ணுகிறார்கள். காமினி பொன்சேகா தனது தேவை கருதி இதனை அப்பட்டமாகவே செய்து விடுகிறார்.

உயர் இராணுவ அதிகாரியாக கடமையாற்றுகின்ற காமினி பொன் சேகாவின் வீட்டின் வேலைக்காரன் சுப்பிரமணியம் என்கிற தமிழன். காமினி பொன்சேகாவின் சகல சுகதுக்கங்களிலும் பங்கு கொண்டவன். ஆனால், காமினி பொன்சேகா வீட்டிற்கு வருகிற சந்தர்ப்பங்களில் சப்பாத்து, சொக்கைக் கழட்டி விடுவதிலிருந்து, காலைப் பிடித்து விடுவது வரை சுப்பிரமணியத்தின் வேலை. இன முரண்பாடு கூர்மையடைந்திருக்கிற இச்சந்தர்ப்பத்தில், இக்காட்சியின் படிமமானது, தமிழர்



கிறது. இராணுவ அதிகாரியை மீட்டுக் கொண்டு செல்கின்றனர். அத்தமிழ்க் குடும்பத்திற்கு மரண தண்டனை வழங்கப்படுகிறது. இது கொடுமை என்பது ஒருபுறமிருக்க, ஒரு சின்னக்கேள்வி; இதனை மறுபுறம் திருப்பிப்பார்ப்போம். தமிழ்ப் போராளி ஒருவர் காயப்படுகின்றார். சிங்களக் குடும்பம் அவரைக் காப்பாற்றுகிறது. அரசாங்கக் கட்டுப்பாட்டிலுள்ள பிரதேசத்தில் அப்போராளி இளைஞனை சிங்களக் குடும்பம் ஒளித்து வைத்திருக்கிறது. இதனை அறிந்த சிங்கள அரசு ராணுவம் என்ன செய்யும்? சிங்களக் குடும்பத்துக்குப் பொன்னாடையா போர்த்தப் போகிறது? ஒன்றுமறியா அப்பாவித்தமிழர்களையே வாடகைக்கு வீட்டில் குடியமர்த்த வேண்டாம் என சிங்களப் பொலிசார் சிங்கள மக்களுக்கு அறிவுறுத்துகிறார்கள். இதுவெல்லாம் காமினி பொன்சேகாவுக்கு தெரியாதா? இனவாதம் கண்ணை மறைக்கிறது.

சிங்கள இராணுவம் போராளிக் குழுக்களின் இருப்பிடத்தைச் சுற்றி வளைக்கிறது. சண்டை நடைபெறுகிறது, ஹெலிகள் குண்டுகளைப் பொழிகின்றன. பனை மரங்கள் முறிகின்றன. இதனையெல்லாம் அழகாக எடுக்கத் தெரிந்தவர்களுக்கு தமிழ்ப்பிரதேசத்தில் சிங்கள இராணுவம் செய்த, செய்கின்ற அட்டூழியங்களை எடுக்கத் தெரியவில்லை. கொக்கட்டிச் சோலையிலும், மைலந்தனையிலும் தமிழ் மக்களைக் குரூரமாகக் கொலை செய்த இராணுவத்தின் வெளிப்பக்கத்தை காமினி பொன்சேகா மறந்து விட்டார். அவர் கண்ணை மறைத்தது இனவாதம். இராணுவம் செய்த, செய்கின்ற அட்டூழியங்களை இவரால் ஏன் எடுக்க முடியவில்லை? இன்னும் ஒரு படி மேலே

சரி, சினிமா முடிகிறது. காமினி பொன்சேகா கூற வந்த கருத்து யாது? குழப்பமாக இருக்கிறது. கருத்து ஒன்றுமில்லை. குழப்புகிறார். இராணுவத்தை இறாவா வீரர் என்கிறார். அதுதான் தெளிவடைந்த கருத்து. இவர் பிரச்சினையை முன் வைக்கிறார். அதற்கான தீர்வு என்ன? புரியவில்லை. எல்லாக் கலைப்படைப்புகளும் தீர்வைச் சொல்ல வேண்டிய கட்டாயமில்லை. ஆனால் நாட்டை உலுக்குகிற முக்கியமான பிரச்சினையை முன்வைக்கிற போது, அதற்கான தீர்வை, அல்லது தீர்வை நோக்கிய பயணத்தையாவது எடுத்துக் காட்டத்தானே வேண்டும்? அதுதான் இல்லை. சரி போராளிக் குழுவை அழித்துவிட்டால் சரியா? எது தீர்வு? காமினி பொன் சேகாவிற்குத் தீர்வில் தெளிவு இல்லை. பிரச்சினையை வளர்த்து விடுகிற அரசில் அங்கம் வகிக்கிற அவரால் தீர்வினைச் சொல்லி விடவும் முடியாது. இப்பிரச்சினையின் ஆணிவேர் என்ன? அதாவது எடுத்துக் காட்டப்படுகிறதா என்றால் இல்லை. முக்கியமாக இச்சினிமாவில் எதனைச் சொல்ல வருகின்றார் என்பது தெளிவில்லை.

இச்சினிமாவில் ஒளிப்பதிவு நன்றாக அமைந்திருக்கிறது; காமினி பொன்சேகா அற்புதமாக நடித்திருக்கிறார் என்பதனைத் தவிர, இனவாதக் கருத்தைக் கொண்டு இச்சினிமா அமைந்திருக்கிறது என்பதுதான் எமக்கு முன் அப்பட்டமாகத் தெரிகிற உண்மை, இந்நாட்டில் இனவாதம் புற்று நோயாக எல்லா இடத்திலும் பரவி உள்ளதனை அறிந்து கொள்வதற்கு, இச்சினிமா ஒன்றே போதும்.

நன்றி - நூலகத்திட்டம்



# குடியிருப்புகள் நெருப்பில்

## மலையகத்திலிருந்து தமிழர்கள் விரட்டப்படுகின்றனர்

**என்.எஸ்.குமரன்**



இரவு ஏழே முக்கால் மணியிருக்கும்.

திடீரென அவலக்குரல்கள் கேட்கத் தொடங்கின.

நான் முற்றத்திற்குச் சென்று பார்த்தேன். எமக்கு நாலைந்து வீடுகள் தள்ளியிருந்த வீடு எரிந்து கொண்டிருந்தது.

எதிர்த்திசையிலிருந்த இன்னொரு வீடு அதற்கருகிலிருந்த வீடு. எரிந்து கொண்டிருந்த வீடுகளிலிருந்து குழந்தைகளைத் தூக்கிக் கொண்டு ஆண்கள் ஓடிக்கொண்டிருந்தனர். பெண்கள் அவர்கள் பின்னால்.

நான் வீட்டுக்குள் நுழைந்து எனது இரண்டு பிள்ளைகளையும் தூக்கிக் கொண்டேன். மனைவி கைக்குழந்தையைத் தூக்கிக் கொண்டாள். தொடர்ந்து அவலக் குரல்கள் கேட்ட வண்ணமிருந்தன.

நாங்கள் அருகிலிருந்த காட்டை நோக்கி ஓடினோம். இரவு முழுக்க பீதியுடன் காட்டுக்குள் இருந்தோம். எங்களது கிராமத்திலிருந்து எழுந்த தீச்சுவாலைகள் ஆகாயத்தைப் பகலாக்கியிருந்தன. அடுத்தநாள் காலை எட்டு மணிக்கு பொலிஸார் வந்து உங்களுக்குப் பாதுகாப்புத் தருகிறோம் வெளியில் வாருங்கள் என்று அழைக்கும் வரை நாங்கள் காட்டைவிட்டு வெளியே வரவில்லை' என்கிறார் மில்ரிக் தோட்டத்தைச் சேர்ந்த ஒருவர்.

37 தமிழ்க் குடும்பங்களைச் சேர்ந்த ஏறத்தாழ 150 பேர் வசித்து வந்த மில்ரிக் தோட்டம் கடந்த 20ம் திகதி இரவு அயலிலிருந்த சிங்களக் கிராமத்தைச் சேர்ந்த காடையர்களால் தாக்கப்பட்டிருக்கிறது. வீடுகள் எரிக்கப்பட்டிருக்கின்றன.

மில்ரிக் தோட்டத்தில் குடியிருக்கும் பரமநாதனின் மனைவியையும் தங்கையையும் பக்கத்துத் தோட்டத்தைச் சேர்ந்த சிங்களவரான ஹரிச்சந்திரவும், அவரது நண்பரும் தொடர்ந்து பாலியல் வக்கிரம் கொண்டதான கேலி புரிந்து வந்தனர்.

இது தொடர்பாக பரமநாதன் பலமுறை ஹரிச்சந்திரவை எச்சரிக்கை செய்திருக்கிறார். சம்பவத்திற்கு முதல் நாளன்றும் ஹரிச்சந்திரவும் நண்பர்களும் வழக்கத்திற்கு அதிகமாகவே சேஷ்டை புரிந்துள்ளனர். இதனால் சகோதரி தமயனிடம் முறையிட்டிருக்கிறார். ஆத்திரம் கொண்ட பரமநாதன் ஹரிச்சந்திரவை மறித்து ஏசியிருக்கிறார். ஹரிச்சந்திர மதுபோதையில் இருந்தார். வாக்குவாதம் கைகலப்பாக மாறியது. பரமநாதனிடம் இருந்த கத்தி ஹரிச்சந்திரவை பதம் பார்த்திருக்கிறது. அன்றிரவே பரமநாதன் பொலிஸில் சரணடைந்தார். ஹரிச்சந்திர இறந்து போனார்.


காலம் காலமாகவே தமிழர்க்கெதிராக வளர்க்கப்பட்டு வந்த குரோதம் வேலை செய்ய ஆரம்பித்தது. சுற்றியிருந்த கொப்பேகர, வெலேமுள்ள, கந்தவந்த, கல்கும்புற, மில்லவான ஆகிய சிங்களத் தோட்டத்திலிருந்து ஆட்கள்



திரட்டப்பட்டனர். மறுநாள் இரவு தாக்குவதற்குத் திட்டமிடப்பட்டிருந்தது.

ஏற்கனவே அசம்பாவிதங்கள் ஏற்படலாம் என்பதால் பொலிஸார் பாதுகாப்புக் கடமையில் ஈடுபடுத்தப்பட்டிருந்தனர் எனினும் தாக்குதல் ஆரம்பித்த போது பொலிஸார் அங்கிருக்கவில்லை.

தாக்கும் ஆயத்தங்களுடன் பலர் வருவதைத் தூரத்திலிருந்தே கண்ட தோட்டத்திலுள்ள தமிழர்கள் ஓட்டம் பிடித்துள்ளனர். பிறந்து ஒருமாதமும் ஆகாத பச்சை குழந்தையையும் இன்னும் பல சிறுவர்களையும் தூக்கிக் கொண்டு அம்மக்கள் மரணப்பயத்துடன் ஓடியுள்ளனர். இவ்வாறு ஓடும்போது சிறுவர்கள் தொடக்கம் பலர் விழுந்து காயத்துக்குள்ளாகியுள்ளனர். அனைவரும் கலகும்புற எனும் காட்டை அடைந்து அங்கு இருளில், மிருகங்கள் வாழும் காட்டில் குழிகளிலும் மறைவிடங்களிலும் ஒரு நாள் முழுவதையும் கழித்துள்ளனர்.



அடுத்தநாள் காலை 8.00 மணியளவில் பொலிஸார் காட்டுக்கு வந்து ''இனி நாங்கள் பாதுகாப்பு தருகிறோம் வெளியே வாருங்கள்'' என குரல் கொடுத்ததன் பின்னரே வெளியே வந்துள்ளனர் என்ற போதும் பலர் பயத்தில் தங்களுக்கு தெரிந்த உறவினர்களின் வீடுகளுக்கு தங்கியிருக்கச் சென்றுவிட்டனர். ஒரு சிலரே பொலிஸ் பாதுகாப்பை நம்பி குடியிருப்புக்கு மீளவும் வந்துள்ளனர்.

தாங்கள் எந்த நேரத்திலும் கொல்லப்படலாம் என்ற பயத்தில் காணப்படும் இவர்கள் தொழிலுக்காகவோ பிள்ளை



களை பாடசாலைக்குக்கூட அனுப்பாமல் இருவாரத்திற்கும் மேலாக குடியிருப்பை விட்டு வெளியே வர அஞ்சுகின்றனர். தொழிலுக்குப் போக முடியாததால் அன்றாட கூலித் தொழில் செய்து பிழைத்து வந்த இவர்கள் எந்த வித சொத்துக்களுமற்ற நிலையில் சாப்பிடவும் கஷ்ரப்படுகின்றனர். நாங்கள் சென்றிருந்த தினத்தில் பகல் வேளையில் அடுப்பில் உலை வைத்த வீடொன்றைத்தானும் காணக்கிடைக்கவில்லை.

''ஆடு, மாடு, கோழி என்பவை வளர்த்து வந்தோம். அவற்றை பக்கத்து சிங்களக் கிராமங்களிலிருந்து இங்கு வந்து களவெடுத்து சென்றுவிடுவர். திருப்பி கேட்க எங்களால் முடிவதில்லை. பயமே காரணம். இந்த முறையும் நாங்கள் தாக்கப்பட்ட போதும் எதிர்த்து போராட எங்களால் முடியவில்லை. அவர்களோ பலர். நாங்களோ மிகவும் குறைவானவர்களாகவும் உள்ளோம், மேலும் அவ்வாறு தாக்கிவிட்டு நாங்கள் நிச்சயமாக உயிர் தப்ப முடியாது.''


பரமநாதனதும் இன்னுமொருவரதும் வீடும் முற்றாக எரித்து சாம்பலாக்கப்பட்டன. வாழை மரங்கள் வெட்டி சாய்க்கப்பட்டன. கொழுத்தப்பட்டன. பொருட்கள் சேதமாக்கப்பட்டன.

அத்தோட்டத்தின் தலைவர் (இலங்கை தொழிலாளர் காங்கிரஸ்) பி.சிவநாதன் கண்டபடி தாக்கப்பட்டுள்ளார். உடலெல்லாம் பலத்த காயங்களுக்குள்ளான அவர் மயக்கம் போட்டு விழுந்துள்ளார். பின்னர் பொலிஸாரும் இன்னும் சிலரும் மாதிபளை வைத்தியசாலைக்கு கொண்டு சென்றுள்ளனர். அவரது காயங்கள் பலமானவை எனக்கூறி அங்கிருந்து மாத்தளை பொது வைத்தியசாலையில் 14 ஆம் இலக்க அறையில் அனுமதிக்கப்பட்டார். ஏப்பிரல் இரண்டாம் திகதியிலிருந்து கொழும்பு பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டுள்ளார். ரவிச்சந்திரன், சுப்பிரமணியன், கே.மாரியாயி எனும் இளைஞர்களும் தாக்கப்பட்டு காயமடைந்துள்ளனர்.

அத்தோட்டத்தின் உபதலைவர் ஆர். சதாசிவத்திடம் சம்பவம் பற்றி விசாரித்த போது ''இதுவரை 1977 இன் பின் நான்கு தடவைகள் நாங்கள் தாக்கப்பட்டுள்ளோம். ஒருமுறை இங்குள்ள கோயிலையே இடித்து நாசம் பண்ணினர். இன்றுவரை கோயிலே இல்லை'' என்றார்.

இச்சம்பவத்தில், தாக்கியவர்கள் கொலை செய்யப்பட்டவரின் உறவினர்களோ நெருங்கியவர்களோ இல்லை. அனைவரும் இனத்துவேஷத்தின் அடிப்படையிலேயே குரூர உணர்வுடன் பசி தீர்க்க வந்திருந்தனர் என்பது அவர்களது அபிப்பிராயம்.

''தோட்டங்கள் கம்பனிகளுக்கு கொடுக்கப்பட்டதனால் வேலையுமில்லாமல் குடியிருப்புகளும் சொந்தமாக்கப்படாமல் இங்கு உள்ளோம். தொழில் தேடி வெளியே தான் போகிறோம். சுற்றிவர தொடர்ந்தும் பாதுகாப்பற்ற அச்சத்துக்குரிய சூழ்நிலை. இவ்வளவையும் அனுபவித்து வரும் எங்களை இந்த இடத்தை விட்டு தமிழர் வாழும் இடத்துக்கு கொண்டு சென்று வாழவையுங்கள். அல்லாது போனால் அவர்கள் எங்களை கொல்ல வேண்டிய அவசியமேற்படாது. நாங்களே தற்கொலை செய்து கொள்வோம்'' என்றார்.



மாத்தளை பொது வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவரும் தோட்டத்தலைவர் சிவநாதனை வைத்தியசாலைக்குப் பார்க்கச் சென்ற போது வைத்திய சாலையைச் சேர்ந்தவர்கள் அவரோடு கதைக்க அனுமதி தர மறுத்தனர் அவரது மனைவியினது சம்மதத்தோடு அவரோடு கதைக்க முற்பட்ட போது அவர் இன்னும் சுயநினைவுடன் இல்லை என்பது தெரிந்தது. கட்டிலில் உட்கார்ந்து காணப்பட்டாலும் அவரது பேச்சில் உளறலே வெளிப்பட்டது. தலையிலும், நெற்றியிலும் வலது கண்ணிலும் வாயிலும் பிளந்த அடையாளங்களும் காயங்களும் காணப்பட்டன. ''இனியும் இவருக்கு எழுந்து நடக்க முடியுமா பழையபடி வேலைகள் தான் செய்ய முடியுமா'' என அவரின் மனைவி கண்ணீருடன் கூறினார்.

இச்சம்பவத்தைப்பற்றி முறையிடுவதற்காக மாத்தளை மாவட்ட இ.தொ.கா. காரியாலயத்திற்கு சென்றிருந்த வி.வேலுப்பிள்ளை என்பவர் கூறும்போது ''அன்றைய சம்பவத்தைத் தொடர்ந்து மிகவும் நொந்து போன நிலையில் நாங்கள் மாத்தளை இ.தொ.கா காரியாலயத்திக்கு முறையிடுவதற்காகச் சென்றிருந்தோம். அங்கு மாவட்ட் பிரதிநிதி குடிபோதையில் காணப்பட்டார். நாங்கள் எங்கள் வேதனையைச் சொல்லி முறையிட்ட போது ''கெட்அவுட்'' என விரட்டினார். அவரது கோபத்துக்குள்ளாகக் கூடாது என்பதற்காக நான் சிலநேரம் வெளியில் காத்திருந்து மீண்டும் அவரிடம் விடயத்தைக் கூறினேன். காரியாலயத்திற்கு வந்திருந்த ஏனையோரதும் வற்புறுத்தலின் காரணமாக அவர் மாத்தளை பொலிஸ் நிலையம் வந்து A.S.Pயிடம் சம்பவத்தைப்பற்றி உளர ஆரம்பித்ததும் அவர் பொலிஸ் A.S.Pயினால் ''கெட் அவுட்'' என விரட்டப்பட்டார். பின்னர் நானே பொலிஸில் முறையிட்டேன்.

இவ்வளவு காலமும் நாங்கள் இ.தொ.கவை இதற்காகத்தான் ஆதரித்தோமா? நூற்றாண்டுகளுக்கும் மேலாக வாழும் எங்களுக்கு குடியிருப்புகள் சொந்தமாக்கப்படும் எனக் கூறியும் ஏன் இன்னமும் சொந்தமாக்கப்படவில்லை? பரம்பரையாக செய்து வந்து தொழிலையும் பறித்து எங்களை அன்றாடம் பட்டினி கிடக்க வைக்கும் அரசு தொழிலுக்கு என்ன உத்தரவாதம் அளித்தது? தாக்கியவர்களுக்கு எதிராக அரசு என்ன நடவடிக்கையை எடுத்தது? பாதிக்கப்பட்டவர்களுக்கு என்ன நிவாரணத்தினை அரசு வழங்கியது? இதற்கு முன்னர் பல தடவைகள் இனவாதத்துக்கு இரையாகி இந்த தோட்டத்தை விட்டு தமிழர்கள் பலர் ஓடியது அரசுக்குத் தெரியும் இத்தனை காலம் தான் அவற்றினைக்கண்டு கொள்ளவில்லை. இம்முறையும் தாக்கப்பட்டோம். இனியாவது அரசு உணருமா? இனியாவது எங்களை தமிழர் வாழும் பகுதிக்கு குடியேற்றுமா? இத்தனை கேள்விகளுக்கும் மத்தியில் எங்களை வைத்து பிழைத்து அரசுக்கு துணை போகும் தலைவர்களை இனியும் நாங்கள் ஆதரிக்கத் தான் வேண்டுமா?'' என்கிறார்.

நன்றி - நூலகத்திட்டம்



# எதிலிருந்து தொடங்குவது? 7

## அ.டேவிட் நந்தகுமார்

இரண்டு, மூன்று நாட்களாக முரளியைக் காணவில்லை. நமது கல்லூரியிலிருந்து அவன் வீடு அதிகம் தூரம் தான். என்றாலும், ஒழுங்காகப் பாடசாலைக்கு வருவதில் சளைத்தவனல்ல. அவனுக்கென்ன, வீட்டு வாசலில் ஸ்கூல் பஸ் வந்து விடும். ஏறி விடுவான். சீற்றும் கிடைத்து விடும். ஏறி உட்கார்ந்தான் என்றால் கல்லூரி வாசலில் இறங்கி விடுவான்.

பஸ்ஸில் ஏறியவுடன் 'மாணிக்கம்' சஞ்சிகையைப் புரட்டுவான். நியூ வேவ் தொடர் கதைகள், சினிமாத் துணுக்குகள், ஜோக்குகள் எனச் சஞ்சிகை குமுதம், விகடன் போல அமர்க்களப்படும். துட்டுக்கும் இலங்கை அரசியல் கிடையாது. தமிழ் நாட்டு அரசியல் அவ்வப் போது சில பக்கங்களில் எட்டிப்பார்க்கும்.

முரளியின் அண்ணன் ரகு கொழும்பில் இருப்பவர். அவர் வருகிற போது பழைய 'மாணிக்கம்' சஞ்சிகைகளை கட்டுக் கட்டாகக் கொண்டு வந்து குவிப்பர். முரளி ஒரு நாளைக்கு ஒரு சஞ்சிகையை கல்லூரிக்குக் கொண்டு வருவான்.

எனக்கும் மகேனுக்கும் ஜெகனுக்கும் சஞ்சிகை வாசிப்பதில் போட்டா. போட்டி. நான் பாடசாலை வரப்பிந்துவதனால், மகேன் அல்லது ஜெகன் முந்திக் கொண்டு விடுவார்கள். இறுதிச் சுற்றுத்தான் எனக்கானது.

என் வாசிப்பு வேகம் அதிகமானது. அனேகமாக ஒரு பாட நேரத்திலேயே வாசித்து முடித்து விடுவேன்.

சந்திரசேகரம் சேர் அல்லது நடராஜா சேர் படிப்பிக்கிற போது புத்தகங்களுக்கிடையில் 'மாணிக்கம் சஞ்சிகை' வைத்து விட்டு வாசிக்கத் தொடங்கினால் அவர்கள் போகிறபோது "தாங்யூ...சேர்" என்று கோரஸாகப் பாடுவதற்கும் 'மாணிக்கம்' ருசி விடாது. ஆனால் பெனடிக்கற் சேரிடம் இந்தச் சேட்டை பலிக்காது. அவர் கதிரையில் இருப்பதில்லை. ஒரு கையில் பிரம்பு, மறுகையில் புத்தகம், பம்பரமாக வகுப்பைச் சுற்றிக் கொண்டு திரிவார். அவர் படிப்பிக்கிற போது புத்தகத்தில் எங்கள் கண்கள் மேயவில்லை என்றால், முதுகில் விளாசல் விழும்.

பாடசாலைக்குள் நுழைகிற போதே பெனடிக்ற் சேரின் மோட்டார் சைக்கிள் நிற்கிறதா என்றுதான் எல்லார் கண்களும் துழாவும்.

இரண்டு, மூன்று நாட்களாக முரளி பாடசாலைக்கு வரவில்லை. காரணம் என்னவென்பதும் தெரியவில்லை.

நான் பாடசாலைக்கு வரவில்லை என்றால் அதற்குக் காரணம் அதிகம்.

நான் பாடசாலைக்கு வருகிற போது அன்று மழை பெய்ததா? நான் பாடசாலைக்கு ஆஜர் இல்லை. மழை பெய்யவில்லை; துமித்தால் போதும். மழையில் நின்று பார்ப்பது. நன்றாக நனையவில்லை என்றால் இருக்கவே இருக்கிறது றோட்டில் வெள்ளம். அள்ளித் தலையில் தெளித்து சேர்ட்டை நனைத்து வீடு திரும்பலாம். அம்மா "மழை அவ்வளவு பெய்யவில்லையே" என்றால், "அங்கை, நல்ல மழை" என்று எடுத்து விட வேண்டியது தான்.

'ஹோம் வேர்க்' செய்யவில்லையென்றால்;செய்யத் தெரியவில்லை என்றால் தோட்டத்தில், வரம்பில் கொஞ்சம் உலாவல் போட வேண்டியதுதான். 'நாம்பிரான்' கோயில் வாசலில் நின்று விட்டு, வாழைக் சருகுகளை வெட்டி அடுக்க வேண்டியதுதான். வெங்காயத்தில் புல்லுப் புடுங்க வேண்டியதுதான். நேரம் போனதை வீட்டில் சாட்டலாம். முருகையா சேரின் பிரமாண்டமான உருவத்தையும், பிரம்படியையும் எடுத்துக் காட்டலாம்.

அம்மன் கோயில் திருவிழா என்றால் சொல்லவே தேவையில்லை. 4ம், 6ம், 7ம், 8ம், சப்பறம், பூங்காவனம் ஆகிய திருவிழாக்கள் முடிகிறபோது, சிகரங்கள் கழட்டுகிறவனையும் அனுப்பி சப்பறம் அடுக்குகிறவனையும் அனுப்பி, லைற் இஞ்சின் போவதையும் பார்த்து, லவுட்ஸ்பீக்கர்காரன் வயர் சுற்றுவதையும் கவனித்து அனுப்பி, கடலைக்காரிகள் கொட்டாவி விட்டபடி பஸ்ஸிற்கு அல்லது தட்டி வானிற்குக் காத்து நின்று அவர்கள் ஏறுவதையும் பார்த்த பின்னர் வீடு சென்றால் போதும். அன்று பாடசாலைக்குப் போகத் தேவை இல்லை. நேரம் போய்விடும்.

வேறும் சின்னச் சின்னக் காரணங்கள் போதும். தோட்டத்தில் வேலை அதிகம் என்றால் பாடசாலைக்குப் போக்கு இல்லை. பெனடிக்ற் சேரின் ஆங்கிலப் பாடம் 'டபிள் பீரியட்' என்றாலும் பாடசாலை போகக் கால்கள் பின்னிற்கும். வேறும் பல.



ஆனால் முரளிக்கு அப்படியல்ல. விஷேச காரணங்கள் இல்லாது அவன் நிற்க மாட்டான்.

வந்தான். ஒரு திங்கட்கிழமை காலையில்; முகம் வாடியபடி இருந்த முரளியைப் பார்க்க நேர்ந்தது.

"கொழும்பிலை ரகு அண்ணையைப் பொலிஸ் பிடிச்சிட்டுது....வீட்டிலை ஒரே பிரச்சினை. வீட்டை வந்து பூபதி அண்ணையையும் பிடிச்சுக் கொண்டு போட்டாங்கள்....அம்மா ஒரே அழுகை...."

இதுதான் காரணம் என்று முரளி சொன்னான். முரளியின் அண்ணன் ரகு. முரளியின் அண்ணன் பூபதி. ரகுவின் பெயர் அடிக்கடி பேப்பரில் வருவதுண்டு. எதுவோ காரணம் பற்றி ரகுவின் பெயரைப் பேப்பரில் பார்க்கலாம்.

ரகுவின் தம்பியாக இருப்பது முரளிக்குப் பெருமை. ரகுவின் தம்பி என்றே பலர் முரளியை அடையாளங்கண்டனர். விநாயகரத்தினம் சேர், கண்ணாடி நடராஜா சேர் (மாட்டு நடராஜா சேர் அப்பிளைட் நடராஜா சேர் எனப் பல 'நடராஜா சேர்' களும் கல்லூரியில் இருந்தனர்.) என்று பலர் முரளியை இன்னாரின் தம்பி என்றே அடையாளங் கண்டனர். சுகம் விசாரித்தனர்.

நமக்கு இப்படி ஒரு அண்ணன் இல்லை என்று நாம் ஏங்கினோம். நம் பெயர் சொல்ல, நம் பெயர் நிலைக்க ஒரு அண்ணன் நமக்கு வாய்க்கவில்லையே என்பதே நம் கவலையானது.

இப்போது முரளியைப் பார்க்கக் கவலையாக இருந்தது.

அவன் துயரம் நமக்கானது; அவன் துன்பம் நம்முடையது.

ரகு கொள்ளையடித்து பொலிஸில் பிடிபட்டவரல்லர்; கொலை செய்தும் அல்ல. தமிழ் இளைஞர் பேரவையின் ஒரு கிளைத் தலைவர். தமிழ் என்பதற்காக உரிமை வேண்டியவர். தமிழன் என்பதற்காக கைது செய்யப்பட்டவர்.

இது நம் கவலைதான்.

அந்த வயதில், அந்த அனுபவத்தில், நாம் முரளிக்கு என்ன ஆறுதலைக் கூற முடியும்? அவன் முதுகைப் பரிவுடன் தடவுவதைத் தவிர; அவன் கைகளை ஆதரவாகப் பற்றுவதைத்தவிர. அவன் சொல்லும் துன்பம் நிறைந்த கதைகளை ஆழ்ந்து கேட்பதினைத் தவிர. வேறெவ்விதம் ஆறுதலைத் தெரிவித்திட முடியும்?

ஆறுதல் கூறுவதுடன் ஆயிற்றா? அதற்கப்பால் என்ன செய்யலாம்?

நம் பிரச்சினையே தலைக்கு மேல். 'ஹோம் வேர்க்' செய்யச் சொல்லி வாத்திமாரின் ஆக்கினை ஒரு பக்கம். செய்யாவிடில் அடித்துத் துவைத்து விடுவார்கள். பெனடிக்ற் சேர் மோட்டார் சைக்கிளில் செல்லும் போது அப்படியே எமனுலகம் செல்லும் படி எவ்வளவு தரம் நேர்ந்தாயிற்று. கடவுளும் கருணை காட்டுகிறாரில்லை. சேர்மார் கேள்வி கேட்டு அடிக்கிறார்கள். அப்பிளைட் நடராஜா சேர் "மாடு மாடு" என்று காற்சட்டை பிடித்து அடிப்பது புளிக்கிறது. பாடசாலைக்குப் பிந்தி வருகிற ஒவ்வொரு சமயமும் முருகையா சேரின் பிரம்பு பதம் பார்க்கிறது. அந்தக் கொடுமையை என்னவென்று சொல்ல? லைனில் விட்டு விட்டு, பிரேயர் முடிய மற்ற மாணவர் வகுப்பறைக்குச் சென்ற பின்னர் ஒவ்வொருவராகக் கூப்பிட்டு விளாசுவார். ஒவ்வொருவர்க்கும் அடி விழுகிற போது நமக்கு மூத்திரம் வருமாப் போல் முட்டுகிறது.

ஐயாவுக்கும் அம்மாவுக்கும் இது விளங்குவதில்லை. "பள்ளிக்கூடம் போ..." என்று விரட்டுகிறார்கள். பின்னேரங்களில் விளையாட விடுகிறார்களில்லை, "தோட்டத்துக்குப் போ" எனும் பல்லவி. விளையாடுவதற்குக் கெஞ்சிக் கேட்க வேண்டியிருக்கிறது. ஆட்டுக்குக் குலை தேட வேண்டும். மாட்டுக்குப் புண்ணாக்கு வைக்க வேண்டும், வெங்காயத்துக்குத் தண்ணி கட்ட வேண்டும். மிளகாய்ப்பழம் ஆய வேண்டும். இருட்டிய பிறகு விசுவையாப்பாவின் வீட்டிலிருந்து பால் வாங்கி வரவேண்டும். பேய்ப்பயம்.

நண்பர்கள் சரியில்லை. ஒரு நாளைக்குப் போகாவிட்டால் அடுத்த நாள் விளையாட்டில் சேர்த்துக் கொள்கிறார்களில்லை. விளையாடுகிற போதும் அழாப்புகிறர்ர்கள்.

இந்த நேரத்தில் இந்த இடத்தில் முரளிக்கு நம்மால் என்ன செய்து விட முடியும்?

என்ன புண்ணாக்கு வாழ்க்கை இது.

## எங்கள் வாழ்வும் எங்கள் வளமும் மங்காத தமிழென்று சங்கே முழங்கு

# நாலு வார்த்தை எழுத விடு

## சூரி

## கோமல் சுவாமிநாதன்

இதனை எழுதிக் கொண்டிருக்கிற போதோ அல்லது நீங்கள் இதனை வாசித்துக் கொண்டிருக்கிற போதோ கோமல் சுவாமிநாதன் அவர்கள் இலங்கையை விட்டுப் புறப்பட்டிருப்பார். நிறைய அனுபவங்களைச் சுமந்து கொண்டுதான் செல்வார்.

தண்ணீர் தண்ணீர் சினிமாதான் கோமல் சுவாமிநாதனை ஈழத்து ரசிகர்கள் மத்தியில் இனங்காட்டியது. கே.பாலச்சந்தர் இதுவரையில் ஒரு சினிமாவையே ஓரளவுக்காவது பூரணப்படுத்தியிருந்தார். அச்சினிமா கோமல் சுவாமிநாதனின் தண்ணீர் தண்ணீர். ஏனைய பாலச்சந்தரின் அனைத்துச் சினிமாவும் பிசிறல்கள் நிறைந்தவை. இச்சினிமாவுக்கு இந்திய மத்திய அரசு ஒரு விருது வழங்கியிருந்தது. பிரதிக்கான விருது. இவ்விருதும் கோமல் சுவாமிநாதனுக்குரியது. தண்ணீர் தண்ணீர் திரைப்படமும் நாடகத்தன்மை வாய்ந்தது எனும் கருத்தும் சில சினிமா விமர்சகர்களிடம் உண்டு.

கோமல் சுவாமிநாதன் யுகதர்மம், அனல்காற்று, ஒரு இந்தியக் கனவு முதலான சினிமாக்களை இயக்கியிருந்தார். சில விருதுகளை அவை பெற்றிருந்தன. வர்த்தகரீதியாகத் தோல்வி. கோமல் சினிமாத் துறையிலிருந்து விலகினார்.

அடிப்படையில் கோமல் நாடகக்காரர். அவரது நாடகங்கள் நவீன அரங்கத் தன்மையை உட்கொண்டவை அல்ல. யதார்த்தவாத நாடக மரபிலிருந்து முகிழ்ந்தவர். டி.கே.ஷண்முகம், எஸ். வி.சகஸ்ரநாமம் ஆகியோரின் நாடக சபாவிலிருந்து உருவானவர். ஆனால் சமூகத்தை விமர்சனம் செய்யும் பாணியில் மேற்கூறியவர்களிலிருந்து பெரிதும் வேறுபட்டவர். பொதுவாகவே தமிழ் நாட்டின் அனைத்து நாடக சபாக்களின் நாடகப்பொருளில் மாறுபட்டிருந்தார். மார்க்சிசத்தை இவர் நம்பியதும் இதற்கான காரணமானது. சமூகத்தை விமர்சனம் செய்கிற போதும் மார்க்சிச கண்ணோட்டத்தில் நோக்கினார். அப்படி இருந்த போதிலும் இவரது நாடகங்கள் தோல்வியுற்றதாகக் கூறிவிட முடியாது. கொம்மியுனிஸ்ற் கட்சித் தோழர்கள் இவர் நாடகங்களை பல ஊர்களிலும் மேடையேற்றினார்கள். தற்போது இவர் பங்களிப்பில் விதந்து குறிப்பிடத்தக்கது, 'சுபமங்களா' எனும் சஞ்சிகை எனலாம். சிறுசஞ்சிகைகளே இலக்கியத்தை வளர்க்கின்றன எனும் கருத்து ஒருபுறமிருக்க, வணிக நோக்கிலும் வெற்றிபெற்று, இலக்கியத்தை வளர்ப்பதிலும் பெரும் பங்காற்றுவது, சுபமங்களா. ஏற்கனவே தீம்தரிகிட, வண்ணமயில் முதலான வணிக நோக்கிலான சஞ்சிகைகள் காத்திரமான இலக்கியங்களை வெளிக்கொணர முயன்று, வணிக ரீதியாகப் பெரும் தோல்வியைத் தழுவின. ஆனால் சுபமங்களா காத்திரமான இலக்கியத்தைப் படைப்பதில் முன்னிற்கின்றது. குறிப்பாக ஈழத்து இலக்கியப் படைப்புகளுக்கு அதிகளம் கொடுத்து, தமிழ்நாட்டில் அதனை சுபமங்களா எடுத்தும் காட்டுகின்றது. ஈழத்துப் படைப்புக்களை மெச்சுகிறவராகவும் கோமல் காணப்படுகின்றார்.

கடந்த ஒரு மாதமாக கோமல் இலங்கையில் சுற்றுலா ஒன்றினை மேற்கொண்டார். மலையகம், மட்டக்களப்பு, யாழ்ப்பாணம், திருகோணமலை எனப் பல்வேறு இடங்களிலும் அவர் உரை நிகழ்ந்தது. கொழும்பில் இரு இடங்களில் மாத்திரம் அவர் உரையைக் கேட்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. தேசிய கலை இலக்கியப் பேரவையே கோமலை அழைத்திருந்தது. பேரவையின் வரவேற்பு விழாவில் கோமலின் பேச்சைக் கேட்க முடிந்தது. அரங்காடிகள் எனும் நாடக, அரங்க அமைப்பானது நாடகம் தொடர்பான கலந்துரையாடல் ஒன்றினை கோமலுடன் ஒழுங்கு செய்திருந்தது.

கோமலின் உரைகளில் 'உண்மை பேசுவது' ஒரு நோக்கமாகக் காணப்பட்டது. பொதுவில் தமிழ் நாட்டில் இருந்து இங்கு வருகை தருகின்ற (அனேகமான இந்து சமயக் கலாசார அமைச்சின் அழைப்பின் பேரில் இவர்கள் வருவதுண்டு) அறிஞர்கள் என அழைக்கப்படுபவர்கள் சொல்லலங்காரம் பொய்புனைவு கொண்ட உரைகளையே பெரும்பாலும் நிகழ்த்துவதுண்டு. கோமல் இவற்றிலிருந்து முற்றிலும் மாறுபட்டிருந்தார்.

ஈழத்துப் படைப்புக்களை அதிகம் வெளியிடுகின்ற கோமல், ஒருவரின் கேள்வி ஒன்றுக்குப் பதிலளிக்கையில், கவிதையில் சமகாலத்தைப் பொறுத்து ஈழத்துடன் ஒப்பிடுகிற போது தமிழ்நாட்டுக் கவிதை தரம் வாய்ந்தது எனும் குண்டொன்றைத் தூக்கிப் போட்டார். இக்கருத்து விமர்சனத்துக்கானது. சமகாலத்தில் மஹாகவி யிலிருந்து சோலைக்கிளி வரை கவிதைகளை வாசித்துத்திருந்தால் கோமல் இக்கருத்தைக் கூறியிருக்க மாட்டார்என எண்ணுகின்றேன்.

நாடகம் தொடர்பான கலந்துரையாடலில், அரங்கொன்றின் வெளிப்பாட்டில் பார்வையாளர் கட்டுப்படுத்தப்பட வேண்டும் அல்லது அவர்கள் மீது கருத்துத் திணிக்கப்பட வேண்டும். (இது அதிகபட்சமான வசனமோ தெரியவில்லை) எனும் கருத்தினை ''ம் முன்வைத்தார். நவீன நாடகங்களின் வருகை, வளர்ச்சி தொடர்பாக-கோமல அவர்கள் உற்சாகமே கொண்டிருந்தாலும் இப்போதைய 'போரம்' அரங்கு (Forum Theatre) தொடர்பாக அவரிடம் உற்சாகம் இல்லை.

கோமலின் இலங்கை விஜயத்தில் மிக முக்கியமானது யாழ்ப்பாணத்திற்கும் அவர் விஜயம் செய்திருந்தமையே. இலங்கை அரசால் மிருகங்கள் மட்டுமே வாழ்கின்ற பிரதேசம் என யாழ்ப்பாணப் பிரதேசம் வர்ணிக்கப்பட்டிருந்த போதும், கோமல் யாழ்ப்பாணம் போவதற்கு ஆவல் கொண்டிருந்தார். கொழும்பிலுள்ள 'முற்போக்குகள்' சில கோமல் யாழ்ப்பாணம் செல்வதானால் இலங்கை, இந்திய அரசுகளிடமிருந்தும், புலிகளிடமிருந்தும் கோமலுக்கு இடைஞ்சல்கள், இன்னல்கள் நேரலாம் எனப் பயமூட்டின. ஆனால் கோமல் யாழ்ப்பாணம் செல்வதில் விடாப்பிடியாக நின்றார். சென்று வந்தும் விட்டார். யாழ்ப்பாண அனுபவம் குறித்து சுபமங்களாவில் எழுதுவதாகக் கூறியிருந்தார். யாழ்ப்பாணம் பற்றிய உண்மைகள் வெளித்தெரிவது முக்கியம்.

இறுதியாக, சரிநிகர், கோமலுடன் சந்திப்பு ஒன்று நிகழ்த்துவதற்கு தேசிய கலை இலக்கியப் பேரவை யினர் நாள் ஒன்று குறித்துக் கொடுத்திருந்தனர். கோமலைச் சந்திக்கிற நப்பாசையில் நானும் சென்றிருந்தேன். கோமல் வரவில்லை. யாழ்ப்பாணம் சென்றிருந்தார் என அறிந்தோம். தேசிய கலை இலக்கியப் பேரவையினர் இச்செய்தியினை சரிநிகருக்கு அறிவித்திருக்கலாம்.


நன்றி - நூலகத்திட்டம்



## இந்தியாவும் தமிழ்த் தேசியப் பிரச்சினையும் -2

# அகண்ட பாரதத்தின் அச்சுறுத்தல்!

~ டி.சிவராம்



'சுதந்திர இந்தியாவின் ஆட்சியுரிமை தம் கைக்கு வருவது உறுதி என்பதை அறிந்து கொண்ட காலத்திலிருந்தே 'அகண்ட பாரதம்' அல்லது 'விசால இந்தியா' போன்ற கருத்துக்கள் இந்தி மொழி பேசும் உயர்வர்க்கங்களிடையே வேரூன்றலாயின. தென் ஆசியப் பிராந்தியத்தை இந்தி மொழி, இந்து மதம் என்பவற்றை மையமாகக் கொண்ட ஒரு கலாசார அரசியல் ஆதிக்கத்திற்கு உட்படுத்துவதே இக்கருத்துகளின் இறுதிக் குறிக்கோளாக இருந்தமை மிகவும் தெளிவாகத் தெரியவே, இஸ்லாமியரும், இந்தி மொழி பேசாத வேறு பல தேசிய இனங்களும் தமக்கெனத் தனிப்பாதை வகுக்கத் தலைப்பட்டனர். இதில் முக்கியமானவை இஸ்லாமியருக்குப் பாகிஸ்தான் என்னும் தனிநாடு வேண்டும் எனக் கோரிய மொகமட் அலி ஜின்னா தலைமையிலான முஸ்லீம் லீக்கும், தென் இந்திய மக்களுக்கு திராவிட நாடு எனும் தனிநாடு வேண்டும் எனக் கோரிய பெரியார் ஈ.வே.ரா தலைமையிலான (பின்னர் திராவிடக் கட்சியாகிய) நீதிக் கட்சியும் ஆகும். அத்துடன் ஆங்கிலேயரினால் கைப்பற்றப்பட்டு இந்தியாவுடன் இணைக்கப்பட்ட நாடான நாகலாந்தும் மீண்டும் தனிநாடாவதற்கு முயன்று கொண்டிருந்தது.

இச்சூழலில் இந்தி-இந்துக் கலாசார அரசியல் ஆதிக்கத்தை மையமாகக் கொண்ட 'விசால இந்தியா' என்னும் கருத்தால் ஈர்க்கப்பட்டிருந்த இந்திய விடுதலை இயக்கத்தலைவர் பலர் தென் ஆசியா தொடர்பான தம் நீண்ட காலக் குறிக்கோளினை அடக்கி வாசிக்க வேண்டியதாயிற்று. எனினும் சுதந்திரம் பெற்ற பின்னர் இந்திய அரசு காஷ்மீர் இராச்சியத்தைத் தனதாக்கிக் கொண்ட முறை, நாகலாந்தை ஏமாற்றி நசுக்கிய முறை, பல சுதேச ஸமஸ்தானங்களை இராணுவரீதியாக இந்தியக் குடியாட்சியில் இணைத்தமை என்பன இந்தியாவை சுற்றி இருந்த நாடுகளில் பயத்தையும் சந்தேகத்தையும் தோற்றுவிக்க ஏதுவாயின. இவை மட்டுமல்லாமல் இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் இந்தியாவின் மேலாதிக்கத்தை நிலைநிறுத்துவது எங்ஙனம் என்பது பற்றி நேருவுக்கு நெருக்கமான ஒரு சிலரால் வெளியிடப்பட்ட கருத்துக்களும் அண்டைநாடுகளில் 'சுதந்திர' இந்தியாவின் உண்மை நோக்கங்கள் பற்றிய பய உணர்விற்கு வலுவூட்டின.

இவ்வாறான ஒரு சூழலிலேயே சீனா, தன் கேந்திர, பொருளாதார நலன்களை விஸ்தரிக்கும் நோக்கில் இந்தியாவின் அண்டை நாடுகள் அனைத்துடனும் வர்த்தக, இராணுவ உறவுகளை மிகத் துரிதமாக வளர்த்துக் கொள்வதற்கு வாய்ப்பு ஏற்பட்டது. இந்நிலைமையைப் பயன்படுத்தி மேற்கு நாடுகளும், குறிப்பாக அமெரிக்காவும் தம் செல்வாக்கை தென் ஆசிய பிராந்தியத்தில் இந்தியாவை அண்டியுள்ள நாடுகளில் வளர்த்துக் கொண்டன. இந்தியப் படையெடுப்பொன்றின் உதவியுடன் 1971 இல் தனிநாடாகிய பங்களாதேஷ் கூட ஷேய்க் முஜிபூர் ரகுமானின் கொலைக்குப் பின்னர் மிகத் துரிதமாக இந்தியாவின் செல்வாக்கிலிருந்து விடுபட்டுச் சென்றதோடல்லாமல் இந்தியாவிற்கு முரண்பட்ட வகையிலும் பல விடயங்களிற் செயல்பட்டு வருகிறது. காஷ்மீர் பிரச்சினையை மையமாகக் கொண்டு இந்தியாவும் பாகிஸ்தானும் யுத்தங்களில் ஈடுபட்டதும் இன்றுவரை முரண்பட்டு நிற்பதும் தெரிந்ததே.

இந்நிலையில் சீனா பாகிஸ்தானுடன் தன் உறவைத் தொடர்ந்து பலப்படுத்தி வருவது இந்தியாவிற்கு பெரும் சங்கடத்தைக் கொடுத்துள்ளது. இச்சங்கடத்திற்கு முக்கிய காரணிகளில் ஒன்றாக காராகோரம் (Karakoram) பாதை நிர்மாணத்தைக் குறிப்பிடலாம். இப்பிரமாண்டமான பாதையானது (Highway) சீனாவிலிருந்து பாகிஸ்தானூடாக இந்துமா சமுத்திரத்தின் அரபிக்கடல் ஓரத்தை அடையும் நோக்கில் அமைக்கப்பட்டு வருகிறது. இது பாகிஸ்தானின் கட்டுப்பாட்டில் தற்போது இருந்து வரும் வட காஷ்மீரினூடாகச் செல்லும் ஒரு பாதையாகும். அத்துடன் இந்தியப் பொருளாதாரத்தின் உயிர் நாடியாகக் கருதப்படும் பம்பாய் கரையோரத்தின் வடமேற்கில் அமைந்துள்ள பாகிஸ்தானின் கரைப்பிராந்தியத்தினை துரிதமாக அடையக் கூடிய வசதியை சீனாவிற்கு இக் காராகோரம் பாதை ஏற்படுத்திக் கொடுக்கும். இதன் அர்த்தம் யாதெனில் இந்தியாவுடன் ஒரு யுத்தச் சூழல் ஏற்படும் பட்சத்தில் சீனா மிக விரைவாக பல பெரும் படையணிகளை (Divisions) இந்தியாவின் வடமேற்குக் கரைப் பிராந்தியத்தை அச்சுறுத்தும் வகையில் நகர்த்தலாம் என்பதேயாகும். பாகிஸ்தானை மையமாகக் கொண்டு, இந்து சமுத்திரத்தில் தன் பலத்தை விஸ்தரிக்கும் நோக்கில் சீனா அமைத்து வரும் இது போன்ற திட்டவட்டமான வியூகங்களை இந்தியா கணக்கில் எடுத்துக் கொண்டே இப்பிராந்தியத்தில் செயல்பட வேண்டியுள்ளது.

அடுத்தது நேபாளம். இந்தியா சுதந்திரமடைந்த காலத்திலிருந்து மன்னராட்சிக்குட்பட்ட இந்நாடு படிப்படியாக தன் செல்வாக்கிற்குட்பட்டுவிடும் என டெல்லி எதிர்பார்த்தது. செயல்பட்டது. இந்தியாவை ஓரளவு அனுசரித்து நடந்து வந்த நேபாள மன்னராட்சியும் 80களில் மெதுவாக சீனாவுடன் நெருக்கமாகத் தொடங்கிற்று. சீனாவிடமிருந்து இராணுவத் தளபாடக் கொள்வனவிற்கான முயற்சிகளையும் மன்னர் பிரேந்திரா மேற்கொள்ளலானார். அதைவிட நேபாள -சீனா எல்லையூடாக ஒரு போக்குவரத்துப் பாதை அமைக்கும் சாத்தியப் பாடுகளையும் இரு அரசுகளும் ஆராய்ந்து கொண்டிருந்தன. இது டெல்லிக்கு அச்சத்தை ஏற்படுத்திற்று. நேபாளம் சீனாவுடன் போக்குவரத்துப் பாதை அமைப்பதில் அக்கறை காட்டியதற்கு முக்கிய காரணமுண்டு. நேபாளத்தின் வெளியுலகத் தொடர்புகள் அனைத்தும் (விமான மார்க்கம் தவிர்ந்த) இந்தியாவினூடாகவே அமைந்திருந்தன. அதனால் நேபாளத்தின் பொருளாதார ஜீவனோபாயமே இந்தியாவின் கையிலேயே தங்கியிருந்தது. இதனால் நேபாளம் தன்வடபாகத்தில் மிக நீண்டதொரு பொது எல்லைப்புறத்தைக் கொண்டிருந்த சீனாவுடன் ஒரு பாதையை அபிவிருத்தி செய்ய முற்பட்டது இயல்பே.

பாகிஸ்தானுக்கும், நேபாளத்திற்கும் அடுத்ததாக இந்தியாவுடனும் சீனாவுடனும் பொது எல்லையைக் கொண்டிருக்கும் நாடுகள் பூட்டானும் மியன்மாரும் (முன்னாள் பர்மா) ஆகும். இதில் பூட்டான் இந்தியாவின் இராணுவ, பொருளாதாரச் செல்வாக்கிற்கு பெரும்பாலும் உட்பட்டிருந்தாலும் அதன் மன்னர் சீனாவுடன் உறவுகளை வளர்ப்பதற்கும் அதன் மூலம் இந்தியாவின் செல்வாக்கிலிருந்து ஓரளவு விடுபடவும் சில முயற்சிகளை 80களின் பிற்பகுதியில் மேற்கொண்டார். மியன்மாரைப் (பர்மா) பொறுத்தவரை அதன் தற்போதைய இராணுவ ஆட்சியாளர்கள் சீனச்சார்புடையவர்களாகவே உள்ளனர். இந்தியாவின் வடகிழக்குப் பிராந்தியத்தில் தனிநாடு கோரிப் போராடி வரும் நாகர்களுக்கு மியன்மாரின் இராணுவ ஆட்சியாளர்களும், அவர்களினூடாக சீனாவும் உதவி வருவதாக இந்தியா கருதுகிறது. மேலும் 1961 இல் சீனாவுடன் ஒரு நட்புறவு ஆக்கிரமிப்புத் தவிர்ப்பு (Friendship and Non-aggression Treaty) ஒப்பந்தமொன்றை மியன்மார் ஏற்படுத்திக் கொண்டமையும் இந்தியாவிற்குப் பாதகமாக அமைந்து விட்டது எனலாம். இதில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது என்னவெனில் பாகிஸ்தானுக்கு அடுத்ததாக இந்தியா, சீனா, இந்து சமுத்திரம் ஆகியவற்றுடன் பொது எல்லையைக் கொண்டுள்ள ஒரு நாடு மியன்மார். எனவே இந்து சமுத்திரப் பிராந்தியத்தில் தன் செல்வாக்கை விஸ்தரிக்கவும், இந்தியாவின் பிராந்தியச் செல்வாக்கை மட்டுப்படுத்தவும் சீனாவிற்கு மிக வசதியாக அமைந்துள்ள ஒரு கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த ஒரு நாடு அது எனலாம். இந்தியாவின் பயங்களுக்கு வலுவூட்டும் வகையில் அண்மையில் மியன்மார் அரசு சீனாவிற்கு கடற்படைத்தளம் அமைத்துக் கொள்ள ஓரிடத்தை ( Haingyi Island) கொடுத்துள்ளது. (இறுதியாக இந்திய உபகண்டத்தின் தென் கோடியிலுள்ள இலங்கையை எடுத்துக் கொள்வோமேயானால் அதுவும் சுதந்திரத்தின் பின்னர் இந்தியாவின் பிராந்தியச் செல்வாக்கிலிருந்து விடுபட முயற்சிகளை மேற்கொண்டுவந்தது கண்கூடு. 1987 ல் இந்திய இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்ட காலத்தில் இந்திய அரசிற்காக் டெல்லி ஆய்வகம் ஒன்றினால் தயாரிக்கப்பட்ட இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகம் தொடர்பான ஆவுணமொன்றில் கூறப்பட்ட சில விடயங்களை இங்கு நாம் கவனிக்க வேண்டும். இந்தியாவும் இலங்கையும் சுதந்திரம் பெற்ற காலத்தில் இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஏறத்தாழ 51% இந்தியாவுடனேயே இருந்தது எனவும், பின்வந்த ஆண்டுகளில் இலங்கையின் ஆட்சியாளர்கள் குறிப்பாக ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினர் சீனாவுடனும் பாகிஸ்தானுடனும் வர்த்தக உறவுகளைக் கணிசமாக வளர்த்துக் கொண்டதனால் இன்று இலங்கையின் வெளிநாட்டு வர்த்தகத்தில் ஒரு மிகச்சிறிய பகுதியே இந்தியாவுடன் உள்ளது எனவும் இந்த ஆய்வு சுட்டிக்காட்டிற்று. இந்நிலைமையை மீண்டும் இந்தியாவிற்குச் சார்பாக எங்ஙனம் மாற்றி அமைக்கலாம் எனவும் சில வழிமுறைகளை அது எடுத்தியம்பிற்று. இலங்கை வர்த்தகத்தில் மட்டுமல்லாது இராணுவ விடயங்களிலும் சீனாவையும் பாகிஸ்தானையும் 70களின் ஆரம்பத்திலிருந்து அணுகலாயிற்று. 1971 இல் நடைபெற்ற இந்திய -பாகிஸ்தான் யுத்தத்தின் போது அந்நேரம் கிழக்கு பாகிஸ்தானாக இருந்த பங்களாதேஷிற்கு அனுப்பப்பட்ட பாகிஸ்தானின் போர் விமானங்கள் இலங்கையில் தரித்துச் செல்ல அன்றைய ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி அரசு அனுமதித்தமை டெல்லியின் எரிச்சலைக் கிளப்ப ஏதுவாயிற்று. எனினும் அதே காலகட்டத்தில் ஸ்ரீ லங்கா சுதந்திரக்கட்சி அரசு சீனாவிடமிருந்து கடற்படை ரோந்துப்படகுகள் உட்பட பல இராணுவத் தளபாடங்களை வாங்கத் தொடங்கியது.




இந்திய இராணுவத்தின் சில வருடாந்த அறிக்கைகளிலும் இலங்கையில் வளர்ந்துவரும் சீன பாகிஸ்தானிய இராணுவ தளபாட விற்பனவு பற்றி சுட்டிக்காட்டப்பட்டது. அத்துடன் 77இற்குப் பின் ஜே.ஆர் அரசு அமெரிக்காவிற்கு Voice of America ஒலிபரப்புத்தளம் அமைக்கவும் அமெரிக்கக் கம்பனி ஒன்றிற்கு திருகோணமலையில் எண்ணெய்க் குதங்களை (Tank Farm) கொடுக்க முற்பட்டமையும் இந்தியாவிற்கு மேலும் சிக்கல்களைத் தோற்றுவிப்பதாக அமைந்தன.

கடைசியாக மிகச்சிறிய நாடான மாலைதீவு. இது கூட இங்கிலாந்துடனும், இலங்கையுடனுமே தனது இராணுவ பொருளாதார, கேந்திர நலன்களை மிக இறுக்கமாகப் பிணைத்துக் கொண்டிருந்தது. அத்துடன் அமெரிக்காவிடமிருந்து இராணுவக் கல்வி, பயிற்சிக்கான சிறு உதவியும் I.N.E.T. (International Education and Training) எனும் இராணுவ உதவித்திட்டத்தின் கீழ் பெற்று வந்தது.

இதுவரை கூறியவற்றிலிருந்து நாம் கவனிக்க வேண்டியது யாதெனில் இந்தியாவைச் சுற்றியிருந்த நாடுகள் அனைத்தும் ஏதோ ஒரு வகையில் தம் கேந்திர, பொருளாதார இராணுவ நலன்களை இந்தியாவின் செல்வாக்கிற்கு உட்படாதவாறு வளர்த்துக் கொள்ளவே முயன்றன, முயல்கின்றன என்பதேயாகும்.

இதில் ஆசியாவைப் பொறுத்தவரையில் சீனாவும் தென் ஆசியாவைப் பொறுத்தவரையில் பாகிஸ்தானும் இந்தியாவின் கேந்திர, பொருளாதார நலன்களை விஸ்தரிப்பதற்கும், ஸ்திரப்படுத்தவும் பிரதான முட்டுக்கட்டையாக இருந்து வருகின்றன. இவ்விரு நாடுகள் தொடர்பான இந்தியாவின் அச்சங்களே தென் ஆசியப் பிராந்தியத்தில் உள்ள ஏனைய நாடுகளுடனான டெல்லியின் உறவை 60களில் இருந்து பிரதானமாகத் தீர்மானித்துள்ளது. இவ்விரு நாடுகளுடனும் இந்தியா யுத்தத்தில் ஈடுபட்டது. அதிலும் சீனாவிடம் தோல்வி கண்டது என்பதும் இதில் முக்கியமானது. இந்நிலையில் தென் ஆசியப் பிராந்தியத்தில் தன் கேந்திர, அரசியல் பலத்தை நிலைநிறுத்தவும் விஸ்தரிக்கவும் பயன்படுத்திய பிரதான முறைகள் இரண்டு. ஒன்று இனப்பிரச்சினைகளின் ஊடாக அரசியல், இராணுவத் தளம்பலை உண்டாக்கல் இது பிரதான முறை.

இரண்டு ஜனநாயகத்திற்கான போராட்டங்கள் எனச் சித்திரிக்கப்பட்ட போராட்டங்களினூடாகத் தளம்பலை உண்டாக்கல்.

(வரும்)

நன்றி - நூலகத்திட்டம்



# சரஜிவோ: நம்பிக்கை வரட்சியே இப்போது நம்பிக்கைக்குரியது

பொஸ்னியா,
பழைய யூகோஸ்லாவியா நாடடின் சமஷ்டிக் குடியரசுகளில் ஒன்று. 1926இல் ஸ்லாவினியா, குரோஷியா, சேர்பியா ஆகிய மூன்று பிரதேசங்களையும் இணைத்து உருவாக்கப்பட்டதே யூகோஸ்லாவியா இராச்சியம்.
1946 இன் பின் மேலும் தனித் தனி சுயாட்சியும், சம உரிமையும் கொண்ட ஆறு குடியரசுகளும் இணைந்து புதிய யூகோஸ்லாவியா அமைக்கப்பட்டது.
தேசிய உணர்வு அதிகரித்து வரும் இன்றைய உலகில் இந்த சமஷ்டிக் குடியரசில் அங்கம் வகித்த நான்கு குடியரசுகள் சுதந்திரப் பிரகடனம் செய்தமை ஆச்சரியத்துக்குரியதல்ல. ஆனால் யூகோஸ்லாவிய இராணுவத்தில் பெருந்தொகையானோர் சேர்பியரே என்பதால் அகண்ட யூகோஸ்லாவிய இன்னும் இருக்கிறது என்று நிலைநாட்ட சேர்பியா விரும்புகிறது.
இது மாத்திரமன்றி, அயலில் பிரிந்து சென்ற குடியரசுகளில் சிறுபான்மையினராக வாழும் சேர்பியரை அவர்கள் வாழும் பிரதேசங்களோடு சேர்த்து தன்னோடு இணைத்துக் கொண்டு முடிசூடா மன்னனராக ஆசைப்படுகிறது சேர்பியா. கூடுமான வரை தன் எல்லையை விஸ்தரிப்பதற்காகவும், சேர்பியரை ஒன்று படுத்துவதற்காகவும் பிரிந்து சென்ற குடியரசுகள் மீது நடாத்தும் தாக்குதல்களில் ஒன்றே பொலஸ்னியா மீதான ஆக்கிரமிப்பு மற்றும் அடக்குமுறைகள்.

இந்தப் பிரச்சினைகளுள் அகப்பட்டு அவதிப்படும் மக்களின் துன்பங்களையும் துயரங்களையும், அங்கு நேரில் சென்று கண்டு வந்திருக்கிறார் லூசி மக்கோகின்டல்.
லூசி மக்கோகின்டல் ஸ்கொட்லான்ட் பல்கலைக்கழக விரிவுரையாளர். 93 மார்ச்சிலும் ஜூனிலுமாக இருமுறை அவர் சரஜிவோவுக்கு விஜயம் செய்திருக்கிறார். அவர் அங்கு கண்டு கதைத்த பெண்களின் பிரச்சினைகள் தொடர்பாகவும், சரஜிவோவில் மக்கள்படும் வேதனைகள் தொடர்பாகவும் எழுதப்பட்ட கட்டுரை இது.

என்னுடைய சொற்கள் பலரது குரல்களை வெளிப்படுத்துகின்றன. அவை என்னுடைய குரலை, வெளியாட்களதை, உதவியாளர்களதை என்று எல்லாருடையதையும் வெளிப்படுத்துகின்றன. முக்கியமாக சரஜிவோவின் பெண்கள் என்னிடம் கூறிய கதைகளே இவை. இவை மிகவும் முக்கியமானவை. ஏனென்றால் இவற்றை நான் சொல்லாது போனால் வேற்று நாடொன்றில் இறந்து கொண்டிருக்கும் ஒரு நகரத்தில் அடைத்து வைக்கப்பட்டிருக்கும் அந்தக் குரல்கள் கேட்கப்படாமலே போய்விடக்கூடும்.

சரஜிவோவின் இன்றைய தமது வாழ்க்கை முறை எப்படி இருக்கிறது என்றும், முன்பெல்லாம் எப்படி அது இருந்தது என்றும், அது ஒரு போதும் மீள வரப்போவதில்லை என்றும் அவர்கள் தங்களுடைய கதைகளை என்னிடம் கூறிக்கொண்டிருக்கும் போது பலர் விம்மினார்கள். அவர்களுடைய, பாரம்பரிய விருந்தோம்பற் பண்பின் அடிப்படையான, விருந்தினர்களுக்கு ஒரு சிறிய கோப்பை கோப்பியும், ஒரு கிளாஸ் தண்ணீரும் வழங்கும் வழக்கத்தைக்கூட செய்ய முடியாத அளவுக்கு அவர்களுடைய இயலாமை அவர்களைச் சிறுமைப்படுத்துகிறது. ''நாங்கள் இப்படி, ஒரு நாளும் வாழ்ந்ததில்லை'' என அவர்கள் கூறுகின்றனர். யுத்தத்திற்கு முதல் ''சாதாரண ஐரோப்பிய மக்களைப் போல, எங்களுக்கும் எல்லாம் இருந்தது. நாங்கள் பயணம செய்தோம்; எங்களுக்கு தொழில்கள் இருந்தன; சினிமாவுக்குப் போனோம்; இரவு உணவின் போது, நண்பர்களுடன் சுற்றிவர இருந்து, சல்லாபித்தோம்'' இன்று மிருகங்கள் போல நாங்கள், வீதியோரங்களில் உணவைத் தேடி அலைகின்றோம். இன்று ஒரு கோப்பை கோப்பி கூட விருந்தி ர்களுக்கு வழங்கி உபசரிக்க முடியாதுள்ளோம்.''



↓ புதிய கல்லறைகள்

ஒவ்வொருவருக்கும் ஒரு கதை இருந்தது. கணவன்மார் கொல்லப்பட்டது, சேர்பியர்களால் மனித கேடயங்களாக பாவிக்கப்பட்டது, தம்மில் இருந்து இரண்டே இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் உள்ள யுத்தமுனையில் சகோதரர்கள் இறந்து போனது, பாணுக்காக கியூ வரிசையில் நின்ற நண்பர்கள் ஷெல்லடிக்கப்பட்டதால் கொல்லப்பட்டது, வீடுகள் அழிக்கப்பட்டது, வீட்டுச் சுவர்களைக் குண்டுகள் துளைத்து அழித்துக் கொண்டு இருக்கும் போது குளிரில் விறைத்தபடி அறைக்குள் படுத்திருந்த குழந்தைகள்... என்று இப்படிப் பலவிதமான கதைகள். தங்களுடைய கதைகளை அவர்கள் கூறிக் கொண்டிருக்கும் போது, பலர் பயத்தினாலும் சோர்வினாலும் அதிர்ச்சியுற்றிருந்தனர்.

கடந்த 14 மாத காலமாக அவர்கள் உண்ட மோசமான போஷாக்கற்ற உணவு அவர்களை மிகவும் பலவீனமாக்கியிருந்தது. தமக்கு நெருங்கிய, தாம் நேசிக்கின்றவர்கள் மீதான முடிவேயற்ற பயங்கரவாதங்களும், அவர்கள் உயிர் வாழ வேணும் என்பதற்காக நடாத்தும் ஆராதனைகளும், அவர்கள் கண்ணில் படாது போகிற போதெல்லாம் ''அவர்கள் இனித்திரும்பி வருவார்களோ எங்காவது துடிதுடிக்க கொல்லப்பட்டிருப்பார்களோ'' என்ற திகிலுமாய் சேர்ந்து அவர்களை மேலும் பலவீனமாக்கியிருந்தது. பிள்ளைகள் வீதியில் விளையாடிக் கொண்டிருக்கும் போது கண்டபடி விழும் ஷெல்களினாலோ அல்லது துப்பாக்கிக் குண்டுகளினாலோ அவர்கள் கொல்லப்படலாம் என்ற பயத்தினால், 14 மாதங்கள் பிள்ளைகளை வீட்டுக்குள்ளேயே வைத்திருப்பது, மின்சாரமோ, அடுப்புக்கான எரிபொருளோ இல்லாத மாடி வீடுகளில் சிதைந்த பகுதிக்கு , 14 மாதங்களாக ஒவ்வொரு துளி நீரையும் எடுத்துச் செல்வது, காய்ந்த பாண், சுவையேயற்ற சோறு, வெறும் அவித்த அவரைக்காய்கள். சுற்றி விழும் 'ஷெல்'சத்தம், எதிர்பாராத விதமாக அடுத்த 'ஷெல்' உங்கள் கட்டிடத்தின் சுவர்களினூடாக வந்து உங்கள் உடம்பின் ஒரு பகுதியை தாக்குமோ என்ற அவலம்....14மாதங்கள் இப்படியே கழிந்துவிட்டன. 'பிள்ளைகளின் இளம் வாழ்க்கையில் பயம் இருக்கக்கூடாது என்பதற்காக, அவர்களுடன் விளையாடுகின்றோம்' பிள்ளைகளுக்கு தேவையானவற்றை வழங்க, உணவளிக்க இயலாத பெற்றோரின் இயலாமை காரணமாக ஏற்படும் துயரம் உண்மையிலேயே மிகவும் மோசமான துயரமாகும். பிள்ளைகளின் உணவு, கல்வி, சுதந்திரம், வளர்ச்சி என்ற குழந்தை பருவத் தேவைகளை நிவர்த்திக்க முடியாமல் இருப்பது பெற்றோரின் பெரிய துயரமாகும். பிள்ளைகளை பேணிப் பாதுகாத்து வளர்ப்பதற்கு சக்தியற்ற பெற்றோர்களின் இத்தகைய நிலைமையானது இந்த நகரத்தையே மெல்ல மெல்லமாக திணறடித்துக் கொண்டு வருகிறது. நான் பேசிய எல்லாப் பெண்களும் பதட்டமும் மகிழ்ச்சியுமற்றுமே இருக்கின்றனர். எனது கடந்த மார்ச் மாதத்தைய முதல் பயணத்திற்கு பிறகு மிகப் பெருமளவுக்கு அவர்களது நம்பிக்கையில் அழிப்புக்கள் நடந்துள்ளதைக் கண்டேன். அப்பொழுது அவர்கள் குளிரில் சண்டை பிடிக்க வேண்டி இருந்த போது மனப்பலத்துடன் இருந்தார்கள் ஒரு நம்பிக்கை ''இந்தக் குளிர் காலத்தில் இருந்து எம்மால் வெளிவர முடியுமானால்....''என்ற நம்பிக்கை இருந்தது.

குளிர் காலம் முடிந்ததும் ஒன்றும் மாறவில்லை. காலம் கடந்து போகிறது. வாழ்க்கையையும் நம்பிக்கையையும் இந்த யுத்தமானது கேலிக்குள்ளாக்குகிறது என்ற யதார்த்தத்தை மக்கள் உணர்கின்றனர். வேதனையையும் இழப்புக்களையும் குறைத்துக் கொண்டு உயிர் பிழைத்திருப்பதற்கான நிலையையாவது பெற்று வாழும் நிலையை, தோற்கடிக்கப்படுகின்ற போராட்டம் ஏற்படுத்தவில்லை. இதற்கு ஒரு முடிவும் வரப்போவதில்லை. எதிர்காலமும் இல்லை. முன்னேற்றமும் இல்லை. கவலையைக் குறைப்பதற்கான வெற்றி வாய்ப்பு நிலையும் இல்லை. எல்லாவிடத்தும் நம்பிக்கை வரட்சியே இப்போது நம்பிக்கைக்குரியதாகி விடுகிறது.



இல்லாமல் போனவர்களுக்காக.....

சரஜிவோவில் துணிச்சலானது வீரசாகசங்களோ, அபாயத்தை ஏற்றுக் கொள்ளும் துணிவோ, புகழ் தேடிச் செல்வதோ போன்றதல்ல. சரஜிவோவில் மன உரமானது ஒவ்வொரு மணி நேரத்தினதும் ஒவ்வொரு நாளினதும் முடிவுகள் ஒவ்வொன்றிற்கும் தேவைப்படுகின்றது. உடுப்பது, இருக்கும் உணவை முடிந்தளவு சிறந்த முறையில் பங்கிடுவது, சினைப்பர் குண்டுகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் போதே நண்பனிடம் செல்வது. எந்தக் காரணமும் இல்லாமலே தமது இடங்களைக் கூட்டி துப்புரவு செய்து சுத்தமாக வைத்திருப்பது என்று எல்லாவற்றினைப் பற்றிய முடிவுகளிலும் துணிவு அல்லது மன உரம் அவசியமாகிறது. மேலும் மோசமாகின்ற பயத்துடன் சேர்த்து நம்பிக்கை இழப்பும், ஒரு காலத்தில் உங்களிடம் இருந்ததெல்லாம் என்றென்றைக்கும் உங்களுக்கு இல்லாதவையாகவே போய்விட்டன என்ற யதார்த்தமும் இன்று எல்லாவற்றையும் ஒரு முட்டாள்களின் சொர்க்கதின் கசப்பான நினைவுகளாக குறுக்கி விட்டன.



சரஜிவோ நகர வீதி...
↑ எதைத் தேடி....?

நகரத்தில் நம்பிக்கை இறந்துவிட்டது. அதனால் நகரம் இறந்து கொண்டிருக்கிறது. நம்பிக்கையின் இறப்பு ஒன்றும் செய்தி முக்கியத்துவம் வாய்ந்ததல்ல. இலக்குகளை எதிர்த்து நிற்கின்ற கறுப்பு நிறத்தினாலான உருவங்கள் எவையும் இறந்தவர்களை புதைப்பதற்காக இரங்கத்தக்க நிலையில் இல்லை. அதனால் சரஜிவோவின் சில கடைசி நிலைகளில் நம்பிக்கையின் சரணாகதியானது, வெளியாரால் கவனிக்கப்படாமலே போய்விடுகிறது.

சரஜிவோ மக்களை, முற்றுகை, பட்டினி பேரச்சம் மனக்கசப்பு என்பவற்றைப் பயன்படுத்தி அழிப்பதற்கு சர்வதேசத்தின் முரண்பாடுகள் சேர்பியர்களுக்கு உதவி வருகிறது. சரஜிவோ மக்கள், தமக்கிடையில் நேர்மையான புரிந்துணர்வுடன் வாழ்ந்தார்கள். அவ்ர்களது குடும்பங்கள் எந்த சமயத்தை நம்புகின்றன என்று கேட்பதற்கு முன்னாலேயே ஜோடிகள் திருமணம் செய்து கொள்ள முடியுமென்ற அளவுக்கு ஏற்றுக் கொள்ளும் பண்புடைய மக்கள் அவர்கள். கடந்த 14 மாதங்களாக தொடர்ந்த பகைமையிலும் கூட இந்த நிலைமை நீடித்து வருகிறது. ஆனால் நகரத்தில் நம்பிக்கை இறந்து வருவது போல இதுவும் இறந்து கொண்டிருக்கின்றது.

நான் நகரத்தின் பின் தங்கிய பகுதிகளுக்கு சென்று, முன்பு சந்தித்த பெண்களில் சிலரை சந்தித்தேன். சரஜிவோவின் விஷேமான சூழ்நிலைகளில் வழங்கப்படும் பங்கீட்டு உணவு பற்றாக்குறையானதே. அதனோடு சமாளிப்பதனால் வெளிப்படையாகவே மெலிந்தும் கொஞ்சம், கொஞ்சமாகவும், வேதனையுடனும், வாழ்க்கையில் இருந்து வழுக்கிச் சென்று கொண்டிருக்கின்றனர்.

அவர்களுடைய மனஉறுதி பலவீனமடைகின்றது. தவிர்க்கமுடியாதென மறுத்தால் ஒழிய அவர்களுடைய விடாமுயற்சி ஒரு அர்த்தமற்றதாகவே தோன்றும். வெளியுலக சம்பவங்கள் தொடர்பாக அவர்களுக்கு எந்தவிதமான ஆர்வமுமில்லை. சிரிப்பு இல்லை, பகிடி இல்லை, கலந்துரையாடல் இல்லை.

''ஐரோப்பாவின் பகுதிகள் எம்மைக் கைவிட்டது ஏன்?'' என நான் கேட்கப்பட்டேன்.

'துப்பாக்கி குண்டுகளுக்கும் ஷெல்லடிக்கும் பலியாவதற்கா எமக்கு உணவு தருகின்றீர்கள்?'
என்னிடம் எந்தப் பதிலும் இல்லை.
சிலர் கூறினார்கள்
''சேர்பியர்களால் கொல்லப்படுவதற்காகவே, முஸ்லீம்களுக்கு சாப்பாடு போடுகின்றீர்கள்''

''எம்மைக் கொலை செய்கின்றது. உணவுப்பற்றாக்குறை அல்ல. அது யுத்தம். நீங்கள் எங்களுக்கு உதவியளிப்பது, உங்கள் மனதை திருப்திப்படுத்த மட்டுமே.
''நீங்கள், எம்மை நாமே பாதுகாப்பதற்கும் விடமாட்டீர்கள். நீங்களும் பாதுகாப்புத்தர மாட்டீர்கள்''
நாம் சண்டையில் பலவீனமடையும் வரையுமே சேர்பியர்கள் காத்துக் கொண்டு இருக்கின்றனர். பிறகு அவர்கள் எங்கள் எல்லோரையும் கொன்று விடுவார்கள்:

முன்பு நான் வந்த பொழுது, தமது பிரச்சினையை ஐரோப்பிய மக்கள் அறிந்து கொள்ளவும், இந்த யுத்தத்தை முடிவுக்கு கொண்டு வ்ரவும், தமது நகரங்களில் சிவில் நிர்வாகம் நடைமுறைக்கு வரவேண்டுமென்ற ஆர்வத்துடன் அவர்கள், தங்களது கதைகளைக் கூறினர். ஆனால், இம்முறையோ அவர்களது கதைகள் சிந்தனையின்றி நோக்கின்றி வந்து கொண்டிருந்தன. எந்தவிதமான எதிர்பார்ப்புகளும் அற்றவையாய். மக்கள் அறிவார்கள் தாம் கைவிடப்பட்டதையும் , தங்களை அவர்களது சர்வதேச அரசியல் பொருளாதார நலன்களுக்காக மட்டுமே மற்றவர்கள் பாவிப்பார்கள் என்பதையும் அதுமட்டுமே தம்மிடமிருந்து அவர்களுக்கு கிடைக்கக்கூடிய ஒரு லாபம் என்பதையும் அந்த மக்கள் அறிவார்கள்.

உலகம் அவர்களுக்கு பிழை செய்து விட்டது. அது அவர்கள் கூறிய கதைகளின் பற்றாக்குறையினாலல்ல. மாறாக கேட்பதற்கோ, செயற்படுவதற்கோ, முயற்சிக்காதவர்களின் பற்றாக்குறையினாலேயே என்பதை நான் சொல்லத் தேவையில்லை.

தமிழில்:செல்லமமா
நன்றி: Aliran monthly

நன்றி - நூலகத்திட்டம்

# சுதந்திரம் கிடைக்கும்... ஆனால், அது எப்போது..?



இவானா பெனாஸ்: மத்திய பொஸ்னியாவைச் சேர்ந்த பிலா என்ற குரோஷியக் குக்கிராமம் ஒன்றின் 12 வயதுச் சிறுமி. முஸ்லீம் படைகளின் ஆக்கிரமிப்புக்கு உட்பட்டு வெளியேற முடியாமல் இருக்கும் அச்சிறுமி பிரான்ஸிலுள்ள தனது பள்ளித் தோழி சன்ராவுக்கு எழுதிய கடிதம் இது. இது வெறும் கடிதமல்ல; யுத்தகால அனுபவங்களைக் கூறும் கதை. 'BRUCKEN BAUER' என்ற சுவிஸின் வாராந்த சஞ்சிகை ஒன்றில் வெளிவந்த இக்கடிதம் இங்கு அப்படியே மொழி பெயர்க்கப்பட்டுள்ளது.

சன்ரா தராபா;
முகவரி தெரியாத இடத்தில்
பிரான்ஸ்.
பிலா, ஒக்டோபர் -1993

அன்புள்ள சன்ரா!

நீயும் ஜோசப்பும் எப்படியிருக்கிறீர்கள். நீ மாறியிருக்கிறாயா? நீ எங்களை விட்டுப் பிரிந்து நீண்ட காலமாகி விட்டது. நாங்கள் இருவரும் கடைசியாகப் பள்ளிக் கூடத்தில் சந்தித்த நாள் உனக்கு ஞாபகம் இருக்கிறதா? அதற்குப் பிறகு உன்னைப் பற்றி நான் எதுவும் அறியவில்லை. பிரான்ஸில் இருக்கிறாய் என்பதைத்தவிர. எமது 'பிலா' கிராமத்தில் பல மாற்றங்கள் ஏற்பட்டுள்ளன. அவை படுமோசமான வருந்தத்தக்க நிகழ்வுகள். அதிகமான மக்கள் கொலை செய்யப்பட்டு விட்டார்கள். எனக்குப் பயமாக இருக்கிறது. இங்கு மனிதர்கள் வீதியில் நடந்து செல்ல முடியாது. உண்மையில் நான் இப்போது 5ம் வகுப்பில் படிக்க வேண்டும். ஆனால் இங்குதான் பாடசாலைகள் நடைபெறுவதில்லையே. எங்கள் பாடசாலையில் அதிகளவான ஐக்கிய நாடுகள் படையினர் குடி கொண்டுள்ளனர்.

தேவாலயங்களில், பிரார்த்தனைகள், கொண்டாட்டங்கள் எதுவும் செய்ய முடியாமல் உள்ளது. 'நோவாபிலா'வில் உள்ள தேவாலயம் இப்போது வைத்தியசாலையாக உள்ளது. நான் நேற்று 'இபோ'வுடன் அங்கு போயிருந்தேன். அங்கு அவர் தாதியாக வேலை செய்கின்றார். இங்குள்ள நோயாளர்களுக்குப் போதுமான அளவுக்கு கட்டில்கள் இல்லை. இதனால் நாங்கள் தேவாலய வாங்குகளை ஒன்றாகச் சேர்த்துக் கட்டி கட்டில்களாகப் பயன்படுத்துகின்றோம். தேவாலயத்தில் சகிக்க முடியாத அளவுக்கு துர்நாற்றம் வீசுகின்றது. இங்கு முன்னைவிடவும் முற்றிலும் வேறுபட்ட நிலைமை நிலவுகின்றது. அதிகளவு மக்கள், குழந்தைகள் உட்பட இங்குதான் உள்ளனர். அதிகமானவர்களுக்குக் கால்கள் இல்லை. அல்லது ஒரு கையை இழந்துள்ளனர். இவர்கள் படுத்தபடுக்கையாகவே உள்ளனர். இன்னும் கொஞ்சச் சிறுவர்கள் நான்கு சக்கர வண்டியில் உள்ளனர். இவை வெறும் 'பகுடி' அல்ல என்பதை நான் உனக்குச் சொல்ல விரும்புகிறேன்.

நீ, வசித்த வீதியின் பெயர் இப்போது தொலைக்காட்சி வீதி. ஏனெனில் உலகின் பல பாகங்களிலுமுள்ள தொலைக்காட்சி நிறுவனங்களின் படப்பிடிப்பாளர்கள் இங்குள்ள வீடுகளில் தான் இருக்கின்றனர். உனது வீட்டில் பி.பி.சி இயங்குகின்றது. நான் அங்குபோக முடியும், ஆனால் நான் அங்கு போவதில்லை. ஏனெனில் ஆட்கொல்லிகளின் பயம். விக்டோரியாவின் கடை நீண்டகாலமாக மூடியிருக்கிறது. என்னால் எங்கேயும் சலாமி, வாழைப்பழம் வாங்க முடியாது. எனக்கு சலாமி அனுப்பி வைப்பீரா? நான் இன்னும் அவரைக்காயும் உருளைக்கிழங்கும் தான் சாப்பிட்டுக் கொண்டிருக்கிறேன்.



(வாக்.........உவாக்.......வாந்தி எடுப்பது போன்ற உணர்வு)

இன்னும் குறைந்தளவான கார்கள் தான் பிலாவில் உண்டு. இராணுவம் அதிகமான குடும்பங்களில் கார்களை எடுத்துச் சென்றுவிட்டது. எனது பாட்டனாரிடம் இன்னும் கார் இருக்கிறது. மிலானிடம் உண்டு. அவருக்கு அது தேவை, தண்ணீர் எடுத்து வருவதற்கு. மிலானும், விக்டோரியாவும் எப்போதும் வெளிநாட்டுப் பத்திரிகையாளர்களுடன் தான் திரிவார்கள். அவர்களில் அதிகமானவர்கள் நல்லவர்கள். ஆனால் இருவருடன் தான் எதையாவது கதைக்க முடியும். அவர்கள் ஜேம்ஸ், கீர்க். அவர்கள் குரோஷியப் மொழி கதைக்கிறார்கள்.

யுத்தம் ஆரம்பித்ததில் இருந்து அதிகளவான ஐ.நா.இராணுவத்தாங்கிகள் இங்கு வந்த வண்ணம் உள்ளன. இவை வரும் போது பெரிய இரைச்சலாகவும், பயமாகவும் இருக்கும். ஆனால் எனக்குப் பழகிவிட்டது. எல்லாம் ஒன்றுதான். பையன்கள் அவர்கள் வாகனங்களுக்கு அப்பிள் எறிவார்கள். அவர்கள் கெட்டவர்கள் அல்ல.

முன்னர் எனக்குக் 'கிரனைட்'டுக்குப் பயம் இருக்கவில்லை. இப்போது பயம். நேற்று நானும், வேறு சில பிள்ளைகளும் ஆற்றில் குளிக்கப் போனோம். கடுமையான வெப்பமாக இருந்தது. நாங்கள் குளித்துக் கொண்டிருக்கும் போது மிகவும் அருகாமையில் ஒரு 'கிரனைட்' வெடித்தது. ஏய்.....! உடனே நாங்கள் விரைவாக வெளியே வந்தோம். அதே நேரத்தில் இன்னும் இரண்டு கிரனைட்டுக்கள் ஆற்றுக்குள் வெடித்தன. சரியாக அந்த இடத்தில் தான் நாங்கள் நீந்தி விளையாடிக் கொண்டிருந்தோம். எனக்குப் பயமாக இருந்தது. நான் எனது உடுப்புகள் இன்றி வீட்டுக்கு ஓடினேன். இப்போது நாங்கள் ஆற்றில் குளிப்பதில்லை.

அப்பா, கொஞ்சக் காலமாகத் தொழிற்சாலையில் வேலை செய்வதில்லை. ஆனால் ஒவ்வொரு இரண்டாவது இரவிலும் அவர் கூட்டுக் காவலுக்குப் போகிறார். அனேகமாக அடுத்த நாள் காலையில் தான் அவர் வருவார். அவருக்கு ஒரு சீருடையும், துப்பாக்கியும் உள்ளது. அம்மா அவருக்கு எப்போதும் சிகரெட் மற்றும் பொருட்களைக் கட்டிக் கொடுப்பாள். அவர் வீட்டுக்குத் திரும்பி வரும் வரையும் நானும், அம்மாவும் பயந்து கொண்டுதான் இருப்போம். நான் நினைக்கிறேன் இங்கு மிகவும் மோசமான சூழ்நிலை. எங்கும் கிரனைட்டுக்கள். நான் தனியாக. எல்லோரும் ஊரைவிட்டு வெளியேறிவிட்டார்கள். எனக்கு யாரும் உதவியும் இல்லை. இதனால் என்னால் நித்திரை செய்யக்கூட முடிவதில்லை.

சில தினங்களுக்கு முன் நாங்கள் மூன்று நாட்கள் நிலத்தின் கீழ்ப்பகுதியில் வாழ வேண்டி ஏற்பட்டது. முழு பிலாவிலும் ஒரே யுத்தம். துப்பாக்கி வேட்டுக்கள். கிரனைட் சத்தங்கள். அது ஒரு பயங்கர அனுபவம். நிலத்தின் கீழ் இருட்டாகவும், குளிராகவும் இருந்தது. எல்லோர் மத்தியிலும் அச்சம் நிலவியது. அம்மா சொன்னாள் ''உண்மையில் நாங்கள் எல்லோரும் வெகுவிரைவில் பிலாவை விட்டு ஓட வேண்டி வரும்'' என்று, ஐ.நா படையினர் சொன்னார்கள் ''அது நல்லதாக இருக்கும். ஏனெனில் இங்கு இருப்பது ஆபத்தானது'' என்று.

என்னால் சுயமாக முடிவு எடுக்க முடியுமானால் 'எங்கு சுதந்திரம் உண்டோ அங்கு நான் வாழ விரும்புகிறேன்' சில வேளை அவுஸ்ரேலியாவில், அவுஸ்ரேலியா உலகில் மிகச் சிறந்த இடம். எனக்கு இரண்டு மாமிகள் அங்கு இருக்கிறார்கள். ஆனால் கடந்த ஏழு வருடங்களாக அவர்களைப் பற்றி எனக்கு ஏதுவும் தெரியாது. நான் ஒரு தடவை பிரான்ஸ் வரவும் விரும்புகிறேன். 'போட்டோ மாடல்' ஆக வருவதற்கு எனக்கு ஆர்வமாய் உள்ளது, ஜக்குவாலினா சொன்னாள். 'போட்டோ மாடல்' ஆக வேண்டுமானால் பிரான்ஸுக்குப் போக வேண்டும் என்று. நான் இப்போது வளர்ந்து இருக்கிறேன், 4 .அல்லது 5 சென்றி மீற்றர். எனது தலைமயிர்கள் முன்னர் இருந்ததை விடவும் நீளமாக உள்ளன. ஆனாலும் மெலிந்து விட்டேன். எனக்கு அது விருப்பம்.

என்னிடம் இரண்டு முயல்கள் உண்டு. நானும், சகோதரன் இவானும் அவற்றிற்கு தீனிபோடுவோம். நான் நினைக்கிறேன் நாங்கள் இங்கிருந்து போவதாய் இருந்தால் அவற்றையும் எடுத்துக் கொண்டு போக வேண்டும் என்று. கவலையாகவும், துக்கமாகவும் உள்ளது. நீ இங்கு இல்லாமல் இருப்பது, எங்கள் நண்பிகளில் பலரை நாம் பிரிந்து இழந்து உள்ளோம். எனக்குத் தெரியாது இவர்கள் எல்லோரும் எங்கு போய் இருக்கிறார்கள் என்று. சில நாட்கள் இருப்பார்கள் பின்னர் பார்த்தால் ஆட்கள் இல்லை. இப்போது ஜக்கு வாலினா என் சிறந்த நண்பி. அவள் டூர்பேயில் இருந்து வந்துள்ளாள். 17 வயதான அவள் எனக்கு அடுத்தவீட்டில் வசிக்கிறாள். ஜக்கு வாலினாவுக்கு நீண்ட அழகான தலைமயிர். மேலும். நான் நினைக்கிறேன் அவள் அழகானவள் என்று. நாங்கள் இருவரும் எப்போதும் தண்ணீர் எடுப்பதற்கு ஒன்றாகப் போவோம். தண்ணீர் எடுக்கும் இடம் நாங்கள் இருக்கும் இடத்தில் இருந்து அதிக தூரத்தில் இல்லை. நான் ஒரு கலனையும். அவள் ஒரு கலனையும் தூக்குவோம். ஒவ்வொரு கலன்களும் 5 லீற்றர் தண்ணீர் கொள்ளும்.

நாங்கள் நாள் ஒன்றுக்கு இரு தடவைகள் தண்ணீர் எடுக்க வேண்டியிருக்கும். சில நாட்களில் இன்னும் அதிகமாகவும் தேவைப்படும். சில நாட்களில் எங்களுக்கு மின்சாரம் இல்லை. இரவில் பெற்றோல் விளக்குகளையும், மெழுகுவர்த்திகளையும் நாங்கள் எரிக்கின்றோம். ஆனால் நாங்கள் எப்போதும் நேரகாலத்தோடு படுக்கைக்குச் சென்று விடுவோம்.

நான் அம்மாவுடன் 'பெற்ராக்' இன் மரணச்சடங்கிற்குப் போயிருக்கிறேன். சவப்பெட்டி திறந்திருந்தது. அதனால் அவரின் முகத்தைப் பார்க்க முடிந்தது. அன்பான அந்த முகத்தின் வாயில் இரத்தம் தோய்ந்து இருந்தது. ஏன் அவர் இறந்தார்? நான் அம்மாவைக் கேட்டேன். 'எங்கள் எல்லோருக்காகவும் அவர் இறந்துள்ளார்! என்றாள் அம்மா. ஆனால், அப்பா இப்பவும் கூட்டுக்காவல் கடமைக்குப் போகிறாரே என்று சொன்னேன் நான். அந்த நிமிடத்தில் அம்மா வாயடைத்துப் போனாள். அவளால் தொடர்ந்து எதுவும் பேசமுடியவில்லை.

அந்த நிகழ்ச்சி ஓரளவு தாமதமாகவே ஆரம்பமானது. பெற்ராக் வாழ்ந்த வீட்டுக்கு முன்தான் அது நடந்தது. பெற்ராக்கின் அம்மாவும், பாட்டியும் தாங்கொண்ணாத் துயரத்தில் அழுது தள்ளினார்கள். எவருமே எதுவும் சாப்பிடவில்லை. பாணும், பாலும், வெண்ணெய்க் கட்டியும் மேசையில் கவனிப்பாரற்றுக் கிடந்தன. அது முழு இருட்டைப் போன்று இருந்தது. சவப்பெட்டி கறுப்புக்காரில் வைக்கப்பட்டது. பெற்ராக்கின் அப்பாவும், அவரது மாமாவும் மட்டுமே சுடலைக்குக் காரோடு போனார்கள். 'இப்போது. கட்டாயம் அப்படித்தான் செய்ய வேண்டியுள்ளது. நாங்கள் அதிகளவு ஆட்கள் சுடலைக்குப் போவோமானால் அங்கு கிரனைட்டுக்களுக்கு இரையாக வேண்டியிருக்கும்' என்றார் அப்பா.

யுத்தம் என்பது முட்டாள்தனம். ஏனெனில் குழந்தைகளும், தாய்களும் கொலை செய்யப்படுகிறார்கள். வளர்ந்தவர்களும் கூடத்தான். எனக்குத் தெரியாது என்ன இங்கு நடக்கிறது என்று. எதிர்காலத்தில் என்ன இங்கு நடக்கப் போகின்றது என்று. நான் வளர்ந்தவர்களிடம் இது பற்றிக் கேட்டால் 'நீ இளம் பிள்ளை உனக்கு ஒன்றும் விளங்காது' என்று அவர்கள் கூறி விடுகிறார்கள். இங்கு நிலைமை மிகவும் கொடூரமானது. பாட்டாவும், பாட்டியும் வாழ்ந்த இடத்தில் அவர்களைக் கடத்திச் சென்றுவிட்டார்கள். அதன்பின் அவர்கள் வீடு சூறையாடப்பட்டு விட்டது. அதற்குப் பின் படையினர் பாட்டாவின் சகோதரனைக் கொலை செய்து விட்டார்கள்.

யுத்தம் பிலாவில் ஆரம்பமாவதற்கு முன் எனது அடுத்த பாட்டி ஒஸ்திரியாவுக்குப் போய்விட்டார். பாட்டா எங்களோடு வாழ்ந்து வருகிறார். அவருடைய சொத்துக்களை படையினர் தீக்கிரையாக்கிவிட்டனர். அவர் பாட்டியிடம் ஒஸ்திரியாவுக்குப் போக விரும்புகிறார். ஆனால் முடியவில்லை. நாங்கள் அடைபட்ட நிலையில் இங்கு வாழ்கிறோம். எங்களால் எதுவும் செய்ய முடியாது.

நான் நினைக்கிறேன் சுதந்திரம் கிடைக்கும் ஆனால் அது எப்போது என்றுதான் தெரியாது. சன்ரா! தயவு செய்து எனக்கு பதில் எழுதவும்.

என்றும் உன்னை மறவாத தோழி
இவானா

நன்றி - நூலகத்திட்டம்





# கோடை: நெறியாளருக்கான குறிப்புகள்

-சி. அரங்கநாதன் எம்.ஏ

கடந்த திங்கட்கிழமை (04.04.94) தெகிவளை ஜெயசிங்க மண்டபத்தில் **அரங்காடிகளின்** ரசிகர் அவைக்காக **நாடோடிகள்** தயாரித்த **மஹாகவி யின் கோடை** நாடகம் பார்க்கச் சந்தர்ப்பம் வாய்த்தது. ஏற்கனவே மஹாகவி யின் எழுத்துருக்கள் மீதான என் பரிச்சயம் காரணமாகவும், இக் **கோடையை** முன்னர் மூன்று தடவைகள் மூன்று நெறியாளர்களினால் ( **அ.தாசீசியஸ், வி.எம்.குகராஜா, ரதிதரன்**) மேடையிட்ட போது பார்த்த அனுபவம் காரணமாகவும் நிறைந்த எதிர்பார்ப்புடன் சென்றிருந்தேன். இம்முறை **கா.சிவபாலன்** அவர்கள் இந்நாடகத்தை இயக்கியிருந்தார். கோடை பார்க்கிற போது சிவபாலனுடன் சில விடயங்கள் உரையாடலாம் எனத் தோன்றியது. அதற்கான நேரம் கிட்டவில்லை. எழுதுவது பொதுவில் பயனுள்ளது என நம்புகின்றேன்.

மூன்று வெவ்வேறு நெறியாளர்களினால் மேடையிட்ட போது மூன்று வெவ்வேறு அரங்க அனுபவங்கள் கிடைத்தன. அவ்வனுபவங்கள் யாவும்



உளத்திருப்தி கொண்டவனல்ல. ஆயினும், வெவ்வேறு அரங்க அனுபவமாக மிளிர்ந்தது தாசீசியஸின் நெறியாள்கை முத்திரைகளே பின்வந்தோரிடம் பரவலாக செறிந்திருந்தது. குகராஜாவின் நெறியாள்கையிலும், சிவபாலனின் நெறியாள்கையிலும் இதனைக் கவனிக்கலாம். ரதிதரனின் மேடையேற்றம் படுமோசமானதாக இருந்தது. ஆனால் குகராஜாவின் கோடை நாடகத்தை நெறியாள்கை செய்த போது தாசீசியஸ் அதனை மேற்பார்வை செய்திருந்தார். மற்றும் அனுபவம் வாய்ந்த நடிகர்களான **அ.பிரான்சிஸ் ஜெனம், ஆனந்தராணி ராஜரட்னம் சோ.தேவ ராஜா** முதலானவர்கள் நடித்திருந்தனர்.

பிரதித் தெரிவு தொடர்பாக ஒரு கேள்வி எழுகின்றது. கோடை- பாநாடக வகையைச் சார்ந்தது. காத்திரமான பிரதி. சொல்ல வருகிற செய்தியோ அந்நியப்பட்டது. இத்தகையதொரு சந்தர்ப்பத்தில் இப்பிரதி தெரிவு செய்யப் பட்டிருக்க வேண்டுமா? நெறியாளர் இப்பிரதியின் தெரிவு குறித்து நீண்ட யோசனை செய்திருக்க வேண்டும். முன்னைய காலத்தில் தயாரித்திருந்த மாத்திரம் இதனைத் தெரிவு செய்வதற்குப் போதுமானதாக நினைக்க முடியவில்லை.

வானொலி நாடகத்திற்கும் மேடை நாடகத்திற்குமிடையிலான வேறுபாட்டை நெறியாளர் முதலில் தெளிவு படுத்தியிருக்க வேண்டும். இந்நாடகத்தைப் பொறுத்த வரையில் நெறியாளரைச் சர்வாதிகாரியாகவே கொள்ள வேண்டும். பாத்திரங்கள் செப்பனிடப் படவில்லை. வானொலி நாடகங்களில் குரலின் ஏற்ற இறக்கம், தொனிமாறுபாடு இவை போதுமானவை. ஆனால் மேடை நாடகத்தில் அவை மாத்திரம் போதுமானவை அல்ல. **'உடலே நடிகரின் மொழி'** எனும் கருதுகோள் ஒன்று அரங்கு தொடர்பாக உண்டு. உடலும், குரலும் நடிகரின் முக்கிய வெளிப்பாட்டுச் சாதனங்கள். இங்கு நடிகா அதனைக் கவனத்தில் கொள்ளவில்லை. எஸ்.எஸ்.கணேசபிள்ளை (காசி) **சோக்கல்லோ சண்முகம்** (சாமியார்) **செ.சக்திதரன்** (முருகப்பு) **பா.திருச் செந்தூரன்** (கணேசு) இவர்களிடமே அக்கவனத்தை ஓரளவாயினும் காண முடிந்தது. ஆனால்துரதிர்ஷ்டம் என்ன வென்றால், இவர்களின் பாகங்கள் நாடகத்தின் முழுமையில் சொற்பமே.

முக்கிய பாத்திரங்களை ஏற்றிருந்த **எஸ்.சுரேஸ்ராஜா** (சோமு), **சுமதி** (கமலி) ஆகியோர் நாடகத்தைப் பின்தள் ளியமைக்குப் பிரதான காரண கர்த்தாக்கள் ஆவர். இவர்களது உடலோ, முகமோ, குரலோ ஏற்றிருந்த பாத்திரத்திற்குப் பொருத்திப்போக வில்லை. மாணிக்கம், செல்லம் பாத்திரங்களை ஏற்றிருந்த **தி.சச்சிதானந்தன், புவனலோஜினி** ஆகியோரின் பாத்திர வார்ப்பு முழுமையைப் பெற முயன்ற போதிலும் போதிய குரல் பயிற்சி இன்மையால் அப்பாத்திரங்கள் தம் இலக்கை எய்யத் தவறிவிடுகின்றன. **சி.சுந்தரலிங்கம்** (விதானையார்) **சோ.தேவராஜா** (பஞ்சையர்) தம் பாத்திரங்களை ஓரளவு நிறைவு செய்கின்றனர்.

ஆனால் நடிகர்களிடையேயும், நடிபாகங்களுக்கிடையேயும் ஒருங்கிணைப்பு காணப்படவில்லை. அதனால் நாடகம் முடிவடைகிறபோது பெற்ற அனுபவம் என்ன எனும் வினா எழுகிறது. ஒரு அரைகுறையான அனுபவமே எமக்குக் கிடைக்கிறது.

மேடை அமைப்பு (கதிர்காமத்தம்பி) நன்கு அமைந்தது. ஒளி, இசை போன்ற பிற அம்சங்களில் மேலும் கவனம் வேண்டும்.

மேற்கூறிய யாவும் நெறியாளர்க்கான குறிப்புக்களே. ஆனால் நெறியாளருடன் மேலதிக விடயங்கள் குறித்தும் உரையாட வேண்டும்.

முதலில் இப்பிரதியைத் தெரிவு செய்கிற போதே பாரிய பொறுப்பு ஒன்றினைத் தலையில் ஏற்றிக் கொண்டாயிற்று. அதற்கேற்ப நடிகர்களை 'வேலை வாங்கியிருக்க' வேண்டும். நடிகர்கள் தம் பூரண சம்மதத்துடன் தான் இம்மேடையேற்றத்திற்கு உதவ முன் வந்தார்கள். அதனைப் பூரணமாகப் பயன்படுத்தியிருக்க வேண்டும். இங்கு சர்வாதிகாரி எனும் நிலைப்பாடு எடுத்தல் அவசியம். நடிகர்கள் நேரத்திற்கு வருவது, ஒழுங்காக வருவது என்பதிலிருந்து இறுதியில் பார்வையாளர்களை 'கைகூப்பித் தொழுவது' வரை நெறியாளரின் தலைமைத்துவத்துக்குள்ளேயே நடிகர்கள் அடங்கியிருக்கின்றனர். குறிப்பாக இவ்வகையான நாடகங்களைப் பொறுத்தவரையில் அதுவே சாத்தியமானதும் கூட. இவ்விடத்தில் நெறியாளர்தன் கையை நெகிழ விட்டு விட்டாரென்பது மேடையேற்றத்தின் போது அப்பட்டமாகத் தெரிந்தது.

பிரதி நெறியாளரால் வியாக்கியானப் படுத்தப் பட்டிருக்க வேண்டும். அப்போதுதான் பிரதியின் உயிரை நெறியாளரால் தொட்டிருக்க முடியும். உயிர் இன்னதென்று கண்டு பிடித்து அதனை வெளிக் கொண்டு வருவதே பிரதான வேலை. பிரதியின் உயிர் உலாவுவதற்கே ஒலி, ஒளி, இசை இன்ன பிற அம்சங்கள், பாவனை, நடிப்பு யாவும் உதவுதல் வேண்டும். உயிர் நெறியாளரின் வியாக்கியானத்தினூடாக வெளிவரும். தனித்தனி சில சட்டங்கள் (Frame) அழகாக வலுவுள்ளதாக அமையும் போதிலும் கூட்டு மொத்தமாக அவை அனுபவத்தைத் தரத்தவறிவிடும்.

உதாரணமாகக் கவனியுங்கள்; " **என்றோ ஒரு நாள் இருந்து பார் மாணிக்கம்....**" என்று பஞ்சையர் கூறுகிற போது (தேவராஜா அதனை நன்றாகச் செய்திருந்தார்) அது வலுவான சட்டமாக (Frame) அமைந்திருக்க வேண்டியது. முன்னரும், பின்னரும் நாடகத்தில் ஒருங்கிணைப்பு காணப்படாதனால், இது தனித்த ஒரு சட்டமாக(Frame) எவ்வித அனுபவத்தையும் தொற்ற விடாமல் செய்து விடுகிறது.

அவ்வாறே மாணிக்க நா யனக்காரர் சோமுவிற்குப் பொன்னாடை போர்த்துகிற போது".... **அஞ்சுகின்றேன் அப்பா! உது மனித சாதனையை மிஞ்சியது...**" எனும் கட்டத்தில் பார்



வையாளருக்கு ஒரு கூதல் ஓடுமே. சிலிர்ப்பு உண்டாகுமே. அது ஒன்றும் இல்லாமல் போனதற்கு காரணம் ஒருங்கிணைப்பு நன்றாக இல்லாமல் போனமைதான். உயிரை உலுப்புகிற இந்த இடங்களில் நெறியாளர் இன்னும் கவனம் செலுத்தியிருக்க வேண்டும்.

பாத்திரங்கள் இன்னமும் செப்பமாகச செதுக்கப்பட்டிருக்க வேண்டும். இந்நாடகம் அத்தகைய தொன்றுதான். குறிப்பாக **'கோடை'** கவிதையால் நெய்யப் பட்டது. தாசீசியஸ் கூறியது போல கோடை வார்த்தைச் சோடனை குறைந்தது. இதனாலும் நெறியாளரின் வேலைப்பளு அதிகமாகிறது. பாத்திரங்களை முதலில் முழுமையாக உணர வைத்திருக்க வேண்டும். உணரவைப்பதன் மூலமும் அதிகளவு பயிற்சியைக் கொடுத்திருப்பதன் மூலமும் பாத்திரங்கள் செதுக்கப்பட்டிருக்கலாம் இந்நாடகம் ஆடல், பாடல், நிறைந்ததொன்றல்ல கவிதை வடிவிலான வசனங்களை மட்டும் நம்பிய ஒன்று.

இவை நிறைவு பெற்றிருந்தால் நாடகம் முழுமை பெற்றிருக்கும் தி.சச்சிதானந்தன் (மாணிக்கம்) புவனலோஜினி (செல்லம்) சோ.தேவராஜா (பஞ்சையர்) போன்றோரிடம் திறமைகள் இருந்த போதிலும் அவை முழுமை பெறாமல் போய்விட்டது.

இந்நாடகத்தின் நெறியாளரான கா.சிவபாலனிற்கான குறிப்புகளே இவை. இன்னும் காலம் கடந்து விடவில்லை. நாடகத்தை முழுமை பெறச் செய்ய இடம் இருக்கிறது.

இவ்வாறு எழுதுவதானால் இவர்களின் உழைப்பைக் குறைத்து மதிப்பிட்டதாக யாரும் கருதி விடக்கூடாது நிறை சொல்லி என்ன பயன்? நாடோடிகள குழுவினரிடமிருந்தும் எதிர்பார்கிறோம் மேலும் அவர்கள் அடுத்த அடி எடுத்து வைக்க முடியும். அதற்கான தகைமைகள் அவர்களிடமும் உண்டு. அதனால் அவர்களை இன்னும் எதிர்பாப்பதில் என்ன தவறு?

# கோடையின் மறு தொடக்கம்

மஹாகவியை அறியாமலே ஈழத்துக் கவிதை பற்றி ஒரு புதிய விமர்சகப் பரம்பரை நம் கண்முன் உருவாகி வருகிறது. தமிழ் கவிதைக்கு மஹாகவியின் பங்களிப்பின் ஒரு குறிப்பிட வேண்டிய பகுதி அவரது பாநாடகங்கள் எனலாம். கோடை பன்முறை மேடையேறிய காலப்பகுதியில் நான் இலங்கையில் இருக்கவில்லை. அதை மீண்டும் இருபதுக்குமதிகமான வருடங்கள் கழித்து அரங்காடிகளின் ரசிகர் அவைக்காக நாடோடிகள் மேடையேற்றிய போது எதிர்பாராதவாறு அதைக் காணும் வாய்ப்புக் கிடைத்தது இது அதிர்ஷ்டவசமானது.

மஹாகவி நாடகத் தயாரிப்பாளரோ நெறியாளரோ அல்லர். அவரது கவிதைகள் பொதுவாகவே இறுக்கமும் செறிவும் மிக்கவை. அவர் விரும்பும் மரபு வடிவம் அவற்றில் அவசியமற்ற சொற்பெருக்கத்திற்குக் காரணமானதில்லை. எனவே அவரது பாநாட்கத்தை மே[illegible]யேற்றும் போது மேடையில் கூறப்படுவன பார்வையாளர்களைத் தெளிவாகச் சென்றடைகின்றனவோ என்பது பற்றிய கவனிப்புக்கு ஒரு தேவை உண்டு. அதேவேளை ஒரே நாடகச் சுவடிக்குப் பல வேறு மேடை வியாக்கியானங்கட்கும் வாய்ப்புண்டு. இம்முறை மேடையேறிய கோடை. இருபத்தைந்து வருடங்கள் முன்னர் கொழுத்திய கோடையினைப் பின் பற்றிய அமைந்துள்ளது என அறிகிறேன். ஆயினும் இரண்டின் வெம்மையும் ஒப்பிட என்னைவிட வேறெவராவதுதான் முன்வரவேண்டும்.

பாநாடகத்தின் கவிதையின் ஓசை நயம் தெளிவாகவே ஒலிப்பது சிறப்பானது. இவ்விஷயத்தில் ஒலியமைப்பின் தொழில்நுட்பம் மேடைக் கலைஞர்களது பேச்சாற்றலுக்கு அடுத்தளவு முக்கியமானது. முன் வரிசைக்கு அருகிலேயே அமர்ந்திருந்தும் என்னால் சில வரிகளைத் தெளிவாகக் கேட்க முடியாமல் போயிற்று. பின்னால் அமர்ந்திருந்தவர்களது நிலைமை எப்படியோ தெரியாது.

**சி.சிவசேகரம்**

கள்ளச் சாமியார் வேடத்திற் சிறிது நேரமே வந்து ஒரு கலக்குக் கலக்கிவிட்டுப் போன "சோக்கல்லோ" சண்முகத்தின் சொற்கள் மிகத் தெளிவாகக் கேட்டதற்கு ஒரு காரணம் அவருக்குரிய வரிகளின் தன்மையாக இருக்கலாம். ஆயினும் அவரது மேடைப் பழக்கம் அதிலும் முக்கியமானதென்றே நம்புகிறேன். கதைக்குரிய சூழலை விளக்கும் முற்பகுதியிற் பஞ்சையர்" (சோ.தேவராஜா), மாணிக்கம் (தி.சச்சிதானந்தன்), செல்லம் (புவனலோஜினி), விதானையர் (சி.சுந்தரலிங்கம்) ஆகியோர் நடுவே நடைபெறும் உரையாடல் மேலும் தெளிவாக அமைந்திருக்கலாம். கவிதை வரிகளை வேறுபட்ட அழுத்தங்களுடனும் அவசியமான போது மீண்டும் கூறியும் பார்வையாளர்களுடன் கூடிய நெருக்கத்தை ஏற்படுத்தியிருக்கலாம். கணேசு (பா.திருச்செந்தூரன்) மிகவும் உற்சாகமாக நடித்து எல்லார் மனதையும் கவர்ந்துள்ளார். அவரது உற்சாகம் அவருடன் தோன்றும் மற்ற நடிகர்களையும் தொற்றக் கூடுமாயின் கோடை இன்னும் பிரகாசமாக இருக்கலாம். மேடையமைப்பில் இருந்த சில குறைபாடுகள் தவிர்த்திருக்கக் கூடியன. உதாரணமாக வீட்டின் ஓலைக் கூரையூடே விழும் வெளிச்சம் ஓட்டைக் குடிசை என்ற உணர்வை ஏற்படுத்தும் நோக்கைச் சார்ந்ததல்ல. இறுதிக் காட்சியில் நாதஸ்வரம் வாசிக்கும் சோமு (எஸ் சுரேஸ்ராஜா) அருகே இருந்த கோயிற் தூண்கள் அவர் எழும் போது ஆடுவதும் தவிர்த்திருக்கக்கூடியதே. அவர் நாதஸ்வரத்தைக் கையில் உயர்த்திப்பிடித்தபடி இருக்கச் சில நேரம் ஓசையே எழாமல் இருப்பது நெறியாளர் விட்ட சில தவறுகளில் மாதிரிக்கு ஒன்று ஒப்பனை நேர்த்தியாகவும். ஆடை அலங்காரம் முறையாகவும் இருந்தது. பொதுவாக கடும் உழைப்பின் மூலமே இந்த நாடகம் சுவைக்கக்கூடிய விதமாக நமக்கு வாய்த்தது

சாதியமும், வெள்ளையர் ஆட்சி மீதான பற்றும் இன்று தளர்ந்து விட்டாலும் மிகுதியான அந்நிய மோகமும் சாதியத்தின் எச்சசொச்சங்களும் இன்னும் உள்ளன. அதை சார்ந்திருந்த சமுதாயச் சிந்தனைகள் விடுதலைப் போராட்டத்தினூடும் தொடர்கின்றது. அந்தளவில் கோடையின் முக்கியத்துவம் வரலாறு சார்ந்தது மட்டுமல்ல. தமிழ் மக்கள் மேலும் பொலிவான பல கோடைகளைத்தரிசிக்க நாடோடிகள் வழி செய்வார்களாக.

பி.கு:- (1) நாடக நிகழ்ச்சி பற்றிய கையேடொன்று நிறைய விளம்பரங்களுடனும், நாடகம் பற்றி மிகக் குறைவான விளக்கங்களுடனும், 20 ரூபாவுககு விநியோகிக்கப்பட்டது. நாடகத்திற்கான அனுமதி 20, 50, 100 ரூபாவாக இருக்கையில் இக்கையேட்டின் விலை அதன் உள்ளடக்கத்திற்குப் பொருந்தாத அளவு மிகையானது.

(2) சீழ்க்கை அடிக்காமல் நாடகத்தைப் பண்பாக ரசிப்பது பற்றி ஒரு பயிற்சிக்கூடம் நடத்துவது பற்றி யாராவது யோசிப்பார்களா?

நன்றி - நூலகத்திட்டம்



# இனப்பிரச்சினைக்கான தீர்வும் இரண்டாவது சபையும்

**'இலங்கையின் அரசியல் யாப்புச் சீர்திருத்தத்திற்கான ஓர் உருவரைபு'' என்ற தலைப்பில் நடைபெற்ற கருத்தரங்கின் நான்காவது அமர்வு பற்றிய குறிப்புகள் இவை**

**எஸ்.சுந்தரலிங்கம்**

''இலங்கையில் சோல்பரி அரசியல் யாப்பின் போது உருவாக்கப்பட்ட மேல்சபை சிறுபான்மையோருக்கு ஒரு காப்பீடாக கருதப்பட்ட போதும் நடைமுறையில் அதுதன் நோக்கத்தை நிறைவேற்றவில்லை.'' என்று குறிப்பிட்டார் கிங்ஸ்டன் சர்வதேச பாடசாலையின் அதிபர் கே.அருணாசலம் அவர்கள்.

21.2.94 அன்று நடைபெற்ற கருத்தரங்கின் நான்காவது அமர்வு ''இரண்டாவது மன்றத்தின் தேவையும் பாராளுமன்றத்தில் அதன் பங்கும்'' என்ற உபதலைப்பில் முகம்மது சமீம் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

அருணாசலம் அவர்கள் மேலும் உரையாற்றுகையில் ''தனிப்பட்ட பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு இன்று போதிய அதிகாரம் இல்லை. மக்கள் மத்தியில் ஏற்படும் குறைபாடுகளை அவர்கள் பாராளுமன்றத்திற்குள் கொண்டு வருகின்றனர். கேள்வி நேரத்தில் அதற்குப் பதில் அளிக்கப்படுகின்றது. பின்னர் அது பற்றி ஆராயப்படுவதில்லை. இந்தச் சூழ்நிலை ஜனநாயகம் சிறப்பாக இயங்குவதற்கு தடையாக உள்ளது. மேல்சபை ஒன்றை உருவாக்கும் போது அது பொதுசன அபிப்பிராயத்திற்கு அதிகளவில் வழிவிடுகையில் கூடிய ஜனநாயகத் தன்மை ஏற்படுவதற்குரிய நிலை உருவாகும்.

மேலும் மேல்சபை தானும் சட்டங்களை அறிமுகப்படுத்துவதோடு கீழ்சபையின் கருமங்களில் உதவியாகவும் இருக்கலாம். நெருக்கடியான சந்தர்ப்பங்களில் அதன் திறமை கீழ்சபைக்கு ஆறுதலாகவும் அமையும்.

அருணாசலம் அவர்களின் இவ் உரையைத் தொடர்ந்து மூதூர் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் அ.தங்கத்துரை அவர்கள் பதிலுரை நிகழ்த்தினார். அவர் தனது உரையில் கூறியதாவது;

''சோல்பரி ஆணைக்குழுவினர் செனற்சபையினை சிறுபான்மையினரின் நலன் கருதியே ஏற்படுத்தினார்கள் என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக பிரித்தானியாவின் நலன்கருதியே அச்சபை நிறுவப்பட்டது. சிறுபான்மையோருக்கு எதிரான சட்டங்களான இலங்கை பிரஜாவுரிமைச் சட்டம் (1948) இந்தோ -பாகிஸ்தான் பிர்ஜாவுரிமைச் சட்டம் (1949) வாக்குரிமைச் சட்டம் -(1952) தனிச்சிங்களச் சட்டம் (1956) ஸ்ரீமா -சாஸ்திரி ஒப்பந்தச் சட்டம் (1964) என்பன கொண்டு வரப்பட்ட போது செனற்சபை அதற்கான சம்மதத்தையும் வழங்கியது. எனவே சோல்பரி யாப்பு காலத்து மேல் சபை சிறுபான்மையோருக்கு காப்பீடாக அமையவில்லை. இந்நிலையில் உருவாக்கப்படப் போகும் மேல்சபையில் சிறுபான்மையோரின் நலனைக் கவனத்தில் எடுத்தல் அவசியம். இதற்கு மாகாணசபைகளின் நலனைக் கவனிக்கும் ஓர் மத்திய அமைப்பாக மேல்சபை அமைந்தால் சிறப்பாக இருக்கும். அத்தோடு கட்சியின் கட்டுப்பாடற்ற ஓர் அவையை நிறுவுவதும் நேர்மையானதோர் ஜனநாயகத்திற்கு வழிகோலும்'' இவ்வாறு தங்கத்துரை குறிப்பிட்டார்.

மேற்படி விடயம் கலந்துரையாடலுக்கு விடப்பட்டபோது ஆசிரியர் யோதிலிங்கம் கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றினார். அவர் தனது உரையில் கூறியதாவது:

"சோல்பரி யாப்பின்படி உருவாக்கப்பட்ட மேல்சபை தேர்தல் அரசியலில் ஈடுபடவிரும்பாத அறிஞர்கள் கல்விமான்களின் சேவையைப் பெறுதல். கீழ்சபை விடும் தவறுகளைத் திருத்துதல், சிறுபான்மையோருக்கு போதிய பாதுகாப்பையும் பிரதிநிதித்துவத்தையும் வழங்கப் பொதுசன அபிப்பிராயத்திற்கு வழிவகுத்தல் போன்ற காரணங்களுக்காகவே உருவாக்கப்பட்டது. ஆனால் நடைமுறையில் இவை எவற்றையும் அச்சபை நிறைவேற்றவில்லை. எனவே புதியதொரு மேல் சபையை உருவாக்கும் போது அதன் அமைப்பு, அதன் அதிகாரங்கள் மேல் சபைக்கும் கீழ் சபைக்கும் இடையிலான தொடர்பு என்பவற்றில் அதிக கவனம் செலுத்த வேண்டியது அவசியமானதாகும்.

அமைப்பைப் பொறுத்தவரை ஏற்கனவே சோல்பரி அரசியல் யாப்பில் காணப்பட்ட அமைப்பு முறையோ, தங்கத்துரை அவர்கள் கூறியது போல மாகாணசபை மட்டத்திலிருந்து உருவாக்கப்படுகின்ற அமைப்பு முறையோ சிறுபான்மையோருக்கு பலனளிக்கப் போவதில்லை. இவ்விரு அமைப்பு முறையிலும் பெரும்பான்மை இனத்தவர்களின் ஆதிக்கமே முன்புபோல மேல்சபையில் தலைதூக்கும். எனவே சிறுபான்மையோரின் நலனைப் பேணக்கூடிய அமைப்பு வடிவத்தை சிந்தித்தல் அவசியமானதாகும்.

அதிகாரத்தைப் பொறுத்தவரையிலும் அதிகாரம் கீழ் சபைக்கு சமமானதாக வலுவானதாக அமைய வேண்டும். சோல்பரி அரசியல் யாப்பில் மேல் சபைக்கு வலுவானதாக அதிகாரம் இருக்கவில்லை. அத்தோடு அதிகாரம் இருந்து விட்டால் மட்டும் போதாது. மேல்சபைக்கும் கீழ்சபைக்கும் உள்ள உறவுகளைப் பொறுத்தவரையிலும் கீழ்சபையின் தலையீடின்றி இயங்கக்கூடிய நிலை இருக்க வேண்டும்." இவ்வாறு யோதிலிங்கம் குறிப்பிட்டார்.

இவ் அமர்வில் உரையாற்றிய அருணாசலம், பதிலுரையாற்றிய தங்கத்துரை போன்றோர் மேல் சபையின் தேவை பங்கு பற்றிய தெளிவான கருத்துக்களை எடுத்துக்கூறவில்லை. இலங்கையின் அரசியற் பிரச்சினைச் சூழலில் வரலாற்றுரீதியான அனுபவத்துடன் மேல் சபையின் அமைப்பும், பங்கும் பற்றிக்கவனம் செலுத்தவில்லை. கலந்துரையாடலில் கலந்து கொண்டு உரையாற்றிய யோதிலிங்கம் இது தொடர்பாக சில கருத்துக்களைக் கூறிய போதும், அவரும் கூட தெளிவாகக் கருத்துக்களை முன்வைக்கவில்லை. இந்த வகையில் இவ்அமர்வு பின்வரும் மூன்று விடயங்களில் அதிக கவனம் செலுத்தி ஆராய்ந்திருக்க வேண்டும் என நினைக்கின்றேன்.

1) மேல்சபை அமைக்கப்படுவதன் நோக்கம்
2) மேல்சபையின் அமைப்பு
3) மேல்சபையின் அதிகாரங்கள்

ஒருசபை அமைக்கும் போது அது என்ன நோக்கத்திற்காக அமைக்கப்படுகின்றது என்பது தெளிவாக்கப்பட வேண்டும். அந்நோக்கம் நாட்டின் அரசியற் பிரச்சினைகளை குறிப்பாக மைய அரசியல் பிரச்சினையை தீர்ப்பதாக அமைவதோடு வரலாற்று அனுபவத்தையும் கவனத்தில் கொள்வதாக அமைவது அவசியமானதாகும். இலங்கையைப் பொறுத்தவரை மைய அரசியற் பிரச்சினையாக இனப்பிரச்சனையும் துணை அரசியற் பிரச்சினையாக ஜனநாயகம் அற்ற அதிகாரவாத ஆட்சியும் உள்ளது. எனவே உருவாக்கப்படுகின்ற மேல்சபை இவ் இரு பிரச்சினைகளையும்- குறிப்பாக இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு - வழிவகுப்பதாக அமைய வேண்டும். இவை இரண்டையும் கவனத்தில் கொண்டு அமைக்கும் போது கூட வரலாற்று அனுபவத்தை தட்டிக்கழிக்க முடியாது. ஏற்கனவே தோல்வியுற்ற மேல்சபை ஒன்றை உருவாக்கிய அனுபவம் இலங்கைக்கு உள்ளது. தனது நோக்கங்களில் ஒன்றைக் கூட நிறைவேற்ற முடியாத வகையில் அழிக்கப்பட்ட அவ் மேல்சபை இலங்கைக்கு ஓர் முன்படிப்பினையாகும். அவ் அனுபவத்தையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

பாராளுமன்ற முறையின் தந்தை என வர்ணிக்கப்படுகின்ற பிரித்தானியாவில் மேல்சபை உருவாக்கப்பட்டாலும் அங்கு அது பயனுடைய ஒன்றாக இருக்கவில்லை. சமஸ்டி ஆட்சி நாடுகளில் அறிமுகப்படுத்தப்பட்ட பின்னரே முக்கியமும், பயனும் உடைய ஒன்றாக அது மாறியது. அந் நாடுகளில் மத்திய அரசாங்கத்தில் சமஸ்டி அரசுகளின் நலன்களைக் கவனிக்கின்ற ஒன்றாகவே அது விளங்கியது. அமெரிக்கா, சோவியத் யூனியன், சுவிஸ் அரசியலமைப்புகள் இதற்கு நல்ல எடுத்துக்காட்டுகளாகும். குறிப்பாக சோவியத் யூனியனிலும், சுவிஸிலும், தேசிய இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கான ஒரு முயற்சியாகவே இது உருவாக்கப்பட்டது. சோவியத்தில் இச்சபை ''தேசிய இனங்களின் சோவியத்'' என்றே அழைக்கப்பட்டது.

இலங்கையைப் பொறுத்தவரை அது இன்று தேசிய இனங்களின் சிறைக்கூடமாகவே உள்ளது. இருந்தும் இது மறுக்கப்பட்டு இனப்பிரச்சினை என்கின்ற போது வடக்கு-கிழக்கு பிரச்சினையை மட்டும் கவனத்தில் எடுக்கின்ற போக்கு நிலவுகின்றது. இது தவறானது. வடக்கு-கிழக்கு தமிழ் மக்களின் பிரச்சினை வளர்ச்சியடைந்துள்ள போதும், ஏனைய ஒடுக்கப்படும் தேசிய இனங்களான முஸ்லீம்கள், மலையக மக்களின் பிரச்சினைகளை எந்த வகையிலும் குறைத்து மதித்து விடமுடியாது. எனவே தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வு காண முற்படும் போது அனைத்து தேசிய இனங்களின் பிரச்சினைகளுக்கும் தீர்வு காண்பது அவசியமாகும். இதற்கு அனைத்து தேசிய இனங்களுக்கும் அதிகாரங்களைப் பங்கிடப்படக்கூடிய வகையில் சமஸ்டி அதிகார அலகுகள் உருவாக்கப்பட வேண்டும். நடைமுறையில் இருக்கின்ற ஒற்றையாட்சி முறையும், ஆங்கிலேயர் உருவாக்கிய மாகாண, மாவட்ட எல்லைகளும் இதற்கு ஒரு போதும் உதவப் போவதில்லை. இவை தேசிய இனங்களின் அதிகாரப் பிரயோகத்திற்கு ஏற்ற வகையில் மாற்றியமைக்கப்பட வேண்டும்.

மேல்சபையின் அமைப்பைப் பொறுத்தவரை சபையில் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவம் அமையும் விதம் அங்கத்தவர்களின் எண்ணிக்கை அங்கத்தவர்களை தெரிவு செய்யும் முறை என்பவற்றில் அதிகளவிலான கவனம் செலுத்தப்படல் வேண்டும்.

சபையில் தேசிய இனங்களின் பிரதிநிதித்துவம் அமைவதற்கு மேலே கூறியது போல தேசிய இனங்கள் அதிகாரம் செலுத்துகின்ற சமஷ்டி அரசுகள் உருவாக்கப்பட வேண்டும். தேசிய இனங்கள் செறிவாக உள்ள இடங்களில் சுயாட்சி அமைப்புகளையும் ஓர் தேசிய இனம் பெரும்பான்மையாக வாழும் பிரதேசத்தில் இன்னோர் தேசிய இனம் குறிப்பிட்டளவில் இருப்பின் அவ்விடங்களில் சுயாட்சி உள்ளமைப்புகளையும் உருவாக்கலாம். இதற்கு சோவியத் மாதிரியையோ அல்லது சுவிஸ் மாதிரியையோ பின்பற்ற முயற்சிக்கலாம். சோவியத் மாதிரியில் சமஸ்டி ஆட்சி அலகுகள் ஒன்றியக்குடியரசுகள், சுயாட்சிக்குடியரசுகள், சுயாட்சி பிராந்தியங்கள், சுயாட்சிப்பகுதிகள் என நான்கு வகையானதாக உள்ளன. தேசிய இனங்களின் செறிவுக்கு அமைய இவை உருவாக்கப்பட்டுள்ளன. கூடியளவு செறிவைக் கொண்ட தேசிய இனங்களின் பிரதேசங்கள் ஒன்றியக் குடியரசுகள் எனவும் மிகக் குறைந்தளவு செறிவைக் கொண்ட தேசிய இனங்களின் பிரதேசங்கள் சுயாட்சிப் பகுதிகள் எனவும் அழைக்கப்படுகின்றன. இடைப்பட்டவை ஏனைய இரு பெயர்களினாலும் அழைக்கப்படுகின்றன. இலங்கையில் இந்த வகையில் ஐந்து பெரிய சுயாட்சி அமைப்புகளை உருவாக்கலாம். வடக்கு கிழக்கு இணைந்த பிரதேசத்தில் தமிழ் மக்களுக்கும், முஸ்லீம் மக்களுக்கும் இரு சுயாட்சி அமைப்புகளையும் வடமத்திய, மத்திய ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் சிங்கள மக்களின் பிரதேசங்களை இணைத்து ஒரு சுயாட்சிப் பிரதேசத்தையும் வடமேல், மேல், தென் மாகாணங்களில் சிங்கள மக்களின் பிரதேசங்களை இணைத்து ஒரு சுயாட்சிப் பிரதேசத்தையும் மத்திய, ஊவா, சப்ரகமுவ மாகாணங்களில் மலையகத் தமிழ் மக்களின் பிரதேசங்களை இணைத்து ஒரு சுயாட்சிப் பிரதேசமுமாக ஐந்து பெரிய சுயாட்சி அமைப்புகளை உருவாக்கலாம்.

கிழக்கு மாகாண சிங்கள மக்கள் வடமேல் மாகாண முஸ்லீம் மக்கள் (புத்தளம்) வடமேல் மாகாண தமிழ்மக்கள் (உடப்பு, முந்தல்) மேல்மாகாண முஸ்லீம், மக்கள் மேல்மாகாண தமிழ் மக்கள் மத்திய மாகாண முஸ்லீம் மக்கள் (அக்குறணை) என்பவர்கள் வாழும் பிரதேசங்களில் சுயாட்சி உள்ளமைப்புகளை உருவாக்கலாம். மக்கள் செறிவுக்கேற்ப தரரீதியாகவும் இதனைப் பாகுபடுத்தலாம்.

இவ் அமைப்புகள் மேல்சபையில் வகிக்கும் அங்கத்துவ எண்ணிக்கை தொடர்பாக பெரிய சுயாட்சி அமைப்புகளுக்கு சமமாக வழங்கப்படலாம். சுயாட்சி உள் அமைப்புகளுக்கு தேசிய இனங்களின் செறிவுக்கு ஏற்ப வழங்கப்படலாம். ஆனால் மேல் சபையின் மொத்த எண்ணிக்கை சோவியத் யூனியனைப் போல கீழ் சபைக்கு சமமானதாக இருத்தல் அவசியமானதாகும்.

அங்கத்தவரை தெரிவு செய்வதற்கு சோல்பரி அரசியல் யாப்பில் காணப்பட்டது போல கீழ்சபையிலிருந்து தெரிவு செய்வதும், பிரதமரின் சிபாரிசின் பேரில் மகாதேசாபதியால் நியமிப்படுவதும் ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. இத்தகைய முறை ஆளுங்கட்சியின் செல்வாக்குக்கு வழிவகுப்பதாக அமையும். இதற்குப்பதிலாக சோவியத் யூனியனிலோ, அமெரிக்கவிலோ உள்ளது போன்று நேரடியாக தேர்தலின் மூலம் மக்களினால் தேர்ந்தெடுக்கப்படும் முறையே சிறப்பானதாக அமையும். அத் தெரிவுகள் தொழிலாளர்களிடமிருந்தும் விவசாயிகளிடமிருந்தும் பெண்களிடமிருந்தும் தெரிவு செய்யப்பட வேண்டும் என நிபந்தனைகளை விதிக்கலாம்.

மூன்றாவது விடயமான அதிகார விடயத்தைப் பொறுத்தவரை மிகக்கூடுதலான கவனம் அவசியமானதாகும். மேல் சபைக்கு அதிகாரங்கள் கையளிக்கப்படுகின்றது எனும் போது மதத்திய அரசின் கருமங்களில் தேசிய இனங்களுக்கு அதிகாரங்கள் வழங்குகின்றோம் என்பதே பொருளாகும். எனவே இதுவிடயத்தில் குறிப்பாக சட்டவாக்கவிடயத்தில் சோவியத் அமெரிக்க அரசியலமைப்பில் உள்ளது போல கீழ்சபைக்கு சமமான அதிகாரங்கள் வழங்கப்பட வேண்டும். இது தொடர்பாக முரண்பாடு ஏற்படும் போது இரு சபைகளிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட குழுவொன்றின் மூலம் முரண்பாட்டுக்கு தீர்வு காண்பதற்கு முயற்சிக்கலாம். அதிலும் தீர்வு காணப்படாவிட்டால் அக்குறிப்பிட்ட விடயம் மக்கள் தீர்ப்புக்கு விடப்படலாம். மேல் சபையில் ஆராயப்படும் விடயம் குறிப்பிட்ட ஒரு தேசிய இனத்தின் நலனோடு சம்பந்தப்பட்ட விடயமாக இருப்பின் அது தொடர்பாக அக்குறிப்பிட்ட தேசிய இனத்திற்கு மறுப்பாணை அதிகாரம் (VETO POWER) வழங்கப்பட வேண்டும்.

நிர்வாக விடயங்களிலும் கூட அமெரிக்காவைப் போல சில சிறப்பான அதிகாரங்கள் இதற்கு வழங்கப்படலாம். உயர் அதிகாரிகள் நியமனம் நீதிபதிகள் நியமனம் வெளிநாட்டு உடன்படிக்கைகளுக்கு சம்மதம் போன்ற அதிகாரங்கள் இதற்கு இருப்பதானது தேசிய இன ரீதியான பாரபட்சம் ஏற்படுவதை தவிர்ப்பதற்கும் ஜனாதிபதி அல்லது நிர்வாகத் தலைவர் தன்னிச்சையாக அதிகாரங்களை பிரயோகிப்பதை தவிர்ப்பதற்கும் வழிவகுப்பதாக அமையும்.

எனவே இலங்கையில் அமைக்கப்படுகின்ற மேல் சபையில் மேற்கூறிய விடயங்களை கவனத்தில் எடுத்தல் அவசியமானதாகும். இவை எவற்றையும் கவனத்தில் எடுக்காமல் சோல்பரி யாப்பில் உள்ளது போன்ற ஓர் மேல் சபையை அமைப்பின் அது நாட்டின் மையப் பிரச்சினைக்கு எந்த வகையிலும் தீர்வு காணாத ஒன்றாக இருக்கின்ற அதேவேளை வெறுமனவே பணச்செலவையும் நிர்வாக அமுலாக்கத்தில் கால தாமதத்தையும் ஏற்படுத்துகின்ற ஒன்றாகவே அமையும். ஏற்கனவே மாகாண சபை விடயத்திலும் கூட மேற்கூறிய பணச்செலவும் கால தாமதமும் ஏற்பட்டுள்ளது தெரிந்ததே.

இறுதியாக, இக்கருத்தரங்கின் நான்கு அமர்வுகள் பற்றிய எனது குறிப்புகளை எனது சிந்தனைக்கு எட்டியவகையில் தந்துள்ளேன். எமது போராட்டம் சம்பந்தமான வரலாற்று அனுபவத்தையும் பல்வேறு நாடுகளின் அரசியலமைப்பு அனுபவங்களையும் கவனத்தில் எடுத்தே எனது குறிப்புகளை தந்துள்ளேன். இக்குறிப்புகள் முடிந்த முடிவானவையல்ல. அவை மேலும் விவாதிக்கப்படவும், ஆராயப்படவும் வேண்டிய விடயங்கள். இலங்கையின் தேசிய இனச்சிக்கலை கவனத்தில் கொண்டு இவை இன்னும் செழுமைப்படுத்தப்பட வேண்டும் என்றே விரும்புகின்றேன். இந்த வகையில் எனது குறிப்புகள் ஓர் ஆரம்பமாக அமையும் எனக்கருதுகின்றேன்.

நன்றி - நூலகத்திட்டம்



## மன்னார் மாவட்டம்

# வைத்தியர்கள் இல்லாத வைத்தியசாலைகள்!

மன்னார் மாவட்டத்தில் பெரிய வைத்திய சாலையாக இருப்பது மன்னார் ஆதார வைத்தியசாலை மட்டுமே. இங்கு பணியாற்றுவதற்கு பத்து வைத்தியர்கள் தேவை. இருப்பதோ மூன்று வைத்தியர்கள். மாவட்ட வைத்திய அதிகாரியாக ஒரு பெண் டாக்டரே தனித்து நின்று தன் கடமைகளை இயன்றளவு செய்கிறார். ஆனால் மன்னார் மாவட்ட மக்கள் இவரது சேவை மேலும் கூடியளவு தேவை எனக் கூறுகின்றார்கள். மேலும் இந்த வைத்தியசாலைக்கு 45 தாதிமார் தேவை. ஆனால் இன்று வேலை செய்பவர்களோ 19 பேர் மட்டுமே. மருந்து கொடுப்பவர்கள் ஏழு பேர் இருக்க வேண்டும். ஆனால் ஒருவர் மட்டுமே உள்ளார். இவர் விடுமுறையில் சென்றால், மருந்து கொடுப்பது நிறுத்தப்படும். இரத்தப் பரிசோதகரும் ஒருவரே உள்ளார்.

தேவையான மருந்துகளை, கொழும்பில் இருந்து கற்பிட்டி ஊடாக கப்பலிலேயே கொண்டு வரவேண்டும். இது மிகவும் சிரமமான காரியம்.

ஒன்றரை வருடத்திற்கு மேலாக பல் பிடுங்கவோ அல்லது அது தொடர்பான வருத்தங்கள் உள்ள நோயாளர்களையோ கொழும்புக்கே அனுப்புகின்றனர். இதற்காக 2000ரூபாய் அளவில் செலவு செய்ய வேண்டும். ஏழை நோயாளர் எங்கு போவார்கள்?

இது தொடர்பாக கேட்டால் கட்டாயம் ஒரு பல் வைத்தியரை நியமிக்க வேண்டும் என மட்டும் கூறுகின்றனர். ஆனால், யாரும் இங்கு வந்து வேலை செய்யத் தயார் இல்லை என்ற காரணத்தினால் இந்த வெற்றிடம் நிரப்பப்படாமலே இருக்கின்றது. ஒன்றரை வருடத்திற்கு முன்பு பல் வைத்தியர் ஒருவர் இருந்தார். அப்பொழுது ஒரு நாளைக்கு 60 பேர் பல் வைத்தியத்திற்காக வந்தனர். இப்பொழுது இப்படி வருபவர்களது நிலைமை கேள்விக்குரியதே. சத்திரசிகிச்சை செய்வதற்கு ஒரு பிரஞ்சு வைத்தியர் ஒருவர் உள்ளார்.

மின்சாரம் ஒரு பிரச்சினையாகவே இங்கும் உள்ளது. ஒரே ஒரு ஜெனரேட்டர் மட்டும் உள்ளது. இதுவும் நீண்ட நேரம் வேலை செய்யாதாம்.

ஒரு நாளைக்கு வெளிநோயாளர் பிரிவுக்கு 11 00 பேர் வருகின்றனர். படுக்கைகள் 180 உண்டு. அவையும் தரம் குறைந்தவையே. ஒரு நாளைக்குச் சராசரியாக 60-80 நோயாளர்கள் தங்குகின்றனர்.

மருந்துகளைச் சேமித்து வைப்பதற்கு ஒரு அறை வேண்டும் அதைக் கேட்டால் கவனிப்பார் யாரும் இல்லையாம். மழை பெய்தால், இருக்கும் மருந்துகளெல்லாம் நனையும் அளவுக்கு இப்பொழுது உள்ள சேமிப்பறை உள்ளது.

### முருங்கன் வைத்தியசாலை

இந்த வைத்தியசாலை 1983க்கு முதல் தான் கடைசியாகப் புனரமைக்கப்பட்டது. அதன் பின் அப்படியே கைவிடப்பட்டது. ஒவ்வொன்றும் ஐந்து கட்டில்களை உடைய ஆண்கள் வாட் ஒன்றும், பெண்கள் வாட் ஒன்றும் உள்ளது. ஒரு படுக்கை கூட ஒழுங்கான நிலையில் இல்லை. அனேகமான நேரங்களில் நோயாளிகளைப் படுக்க வைக்கப் பாயே பயன்படுத்தப்படுகிறது. தாதிமார் ஏழு பேர் மட்டுமே உள்ளனர். இரண்டு வைத்தியர்கள் உள்ளனர். அனேகமான நேரங்களில் ஒருவர் மாறி ஒருவரே நிற்பர். ஏற்பூசிகளைப் பாதுகாக்க குளிர்சாதனப்பெட்டியில்லை. அதற்கு மின்சாரமும் இல்லை. ஜெனரேட்டர் உள்ளது. அதுவும் வேலை செய்யாது. இப்படி எந்த வித வசதிகளும் இல்லாமலே முருங்கன் வைத்தியசாலை உள்ளது.

மடுவிலும் ஒரு வைத்தியசாலை உள்ளது. இது இக்கோயிலுக்காகக் கட்டப்பட்டது. இன்று UNHCRஆரின் பொறுப்பில் புனரமைப்புச் செய்து வைத்தியசேவை செய்யப்படுகிறது. ஆனால் எல்லா வசதிகளும் இல்லை. இடம்பெயர்ந்து இங்கு அகதிகளாக வாழும் 25,000 பேருக்கு இது போதுமானதல்ல.

நானாட்டானிலும் ஒரு கிராமிய வைத்தியசாலை உள்ளது. இதற்கான வைத்தியர் மடுவில் உள்ளார். அடம்பனில் 83க்கு முதல் ஒரு வைத்தியசாலை இருந்தது. இப்பொழுது அது இருந்ததற்கான அடையாளமே இல்லை. இங்குள்ள நோயாளிகள் முருங்கன் வைத்தியசாலைக்கே செல்ல வேண்டும். அதிகாரிகள் வருவார்கள். கதைப்பார்கள் கலந்தாலோசிப்பார்கள். சென்று விடுவார்கள். இந்த வைத்தியசாலைக்கு மட்டும் புத்துயிர்ப்புக் கிடைக்காது. அப்படியே இருக்கும்.

இப் பிரதேசங்களில் பயிற்சி பெற்ற தாதிமார் பலர் உள்ளனர். ஆனால் இவர்கள் வேலை செய்வது வவுனியாவில். மன்னார் தீவில் நான்கு அரசாங்க வைத்தியசாலைகள் உள்ளன. அதில் எருக்கலம்பிட்டி ஆஸ்பத்திரி வைத்தியர்கள் இல்லாததால் மூடப்பட்டுள்ளது. தலைமன்னார் வைத்தியசாலையில் வைத்தியர்கள் பற்றாக்குறையால் இதுவரை மூடப்பட்டு கடந்த மாதமே திறக்கப்பட்டுள்ளது. இங்கு கட்டில்களோ மெத்தைகளோ ஒன்றும் இல்லை. பேசாலை வைத்தியசாலை சொல்லமுடியாத அளவுக்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது.

# கற்பிக்கத் தயார்; கைகொடுக்கிறார்கள் இல்லை!

### கல்வி: மாணவர்களுடைய பிரச்சினை

இந்த மாவட்டத்தில் 18,863 பிள்ளைகள் பாடசாலைக்கு செல்லும் மாணவர்கள். இங்கு 105 பாடசாலைகள் உள்ளன. இதில் 82 பாடசாலைகள் இப்பொழுது இயங்குகின்றன. இவற்றுள் 22 பாடசாலைகள் இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்திலும், 60 பாடசாலைகள் இராணுவமில்லாத பிரதேசத்திலும் இயங்குகின்றன.

அரசாங்கத் தகவல்களின்படி, இராணுவக் கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் 35 பாடசாலைகளும், மற்ற பிரதேசங்களில் 57 பாடசாலைகளும் இயங்குகின்றனவாம். இங்கு முறையே 6762, 10043 மாணவர்கள் படிக்கின்றனர்.

கற்பிக்க வேண்டிய ஆசிரியர் தொகை 621. ஆனால் 230 ஆசிரியர்களுக்கான வெற்றிடம் உள்ளது. இவர்களுள், விஞ்ஞானம், கணிதம் கற்பிக்க 10 பேரும். வர்த்தகம் கற்பிக்க 10 பேரும், கலைப்பாடம் கற்பிக்க 5 பேருமாக பட்டதாரி ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். இவற்றைவிட, பயிற்றுவிக்கப்பட்ட ஆசிரியர்களில் இருந்து விஞ்ஞான, கணித ஆசிரியர்கள் 34 பேரும், ஆங்கிலம் கற்பிக்கும் ஆசிரியர்கள் 99 பேருமாக மற்றப் பாடங்களையும் சேர்த்து 205 ஆசிரியர்கள் தேவைப்படுகின்றனர். 66 தொண்டர் ஆசிரியர்களை தெரிவு செய்த போதும், கல்வி சேவைக் குழுவானது, இவர்களுக்கான நியமனங்களை இதுவரை வழங்கவில்லை.

இப்பாடசாலைகளுள், எட்டு முஸ்லீம் பாடசாலைகளும் இயங்குகின்றன. இந்தப் பாடசாலைகளில், இஸ்லாம் பாடத்தைக் கற்பிக்க ஒரு ஆசிரியர் கூட இல்லை. இதனால், தமது பிள்ளைகளைப் பாடசாலைக்கு அனுப்ப முஸ்லீம் பெற்றோர் தயங்குகின்றனர்.

இப்பிரச்சினைகள் தொடர்பாக, 25.1.94 அன்று ஆளுநரும், 18.2.94 அன்று கல்வி இராஜாங்க அமைச்சர் திருமதி.புலேந்திரனும் பல உறுதி மொழிகளை கொடுத்து விட்டுச் சென்றுள்ளனர். ஆனால் இதுவரை எதுவும் நடைபெறவில்லை.


இந்தியாவில் இருந்து திரும்பியுள்ள அகதிகளால் ஏற்பட்ட மாணவர் அதிகரிப்பானது புதிய நெருக்கடிகளைத் தோற்றுவித்துள்ளது. ஒழுக்கம், பண்பு, வயது வித்தியாசம், தொற்று நோய்கள் என்கிறவாறான பல நெருக்கடிகள். இதனால் ஏற்பட்ட பிரச்சினைகளைத் தீர்க்க மாற்று நடவடிக்கை எதுவும் எடுக்கப்படவில்லை.

அரசாங்க கொள்கைப்படி, ஒரு ஆசிரியருடன் பாடசாலை இயங்க முடியாது; இயங்கக்கூடாது. ஆனால் இங்கு சில பாடசாலைகள் அப்படித்தான் இயங்குகின்றன. உயர்தர வகுப்பிலோ நான்கு பாடங்கள் படிக்க வேண்டும். அல்லது போனால் உயர்தரப் போட்டிப் பரீட்சைக்கு தோற்றுவதில் அர்த்தமில்லாமல் போகும். ஆனால் பல பாடசாலைகளில் மூன்று பாடங்கள் மட்டுமே கற்பிக்கப்படுகின்றன. மூன்று பாடங்களுக்கு மட்டும் பரீட்சைக்குத் தோற்றி காணும் பயன் என்ன? என்கின்றனர் மாணவர்கள்.

90, 91ம் ஆண்டுகளில், உயர்தரப்பரீட்சை எடுக்க முடியாதவர்கள், 92ம் ஆண்டு பரீட்சைக்குத் தோற்றி சித்தியடைந்துள்ளனர். உயர்தரப் பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கான விஞ்ஞான, கணித ஆசிரியர்களுக்கான நேர்முகப் பரீட்சை ஒன்று, கம்பஹா மாவட்டத்தில் 94ம் ஆண்டு மார்ச் மாதம், 8,9,10 ம் திகதிகளில் நடைபெற்றது. இந்த நேர்முகப் பரீட்சைக்கு தோற்றுவதற்கான வரையறையாக 1.1.94 அன்று 22 வயதுக்கு குறைவாக இருக்க வேண்டும் எனக் குறிப்பிடப்பட்டிருந்தது. இடம் பெயர்ந்ததாலோ அல்லது இந்தியாவுக்குச் சென்றதாலோ, 90.91 களில் பரீட்சை எடுக்க முடியாதவர்கள் 92ம் ஆண்டு பரீட்சைக்கு தோற்றி சித்தியடைந்துள்ளனர். ஆனால் இவர்களது வயது 1.1.94 அன்று 22 வயதினை விட கூடவாகவே பெரும்பாலும் இருக்கும். இப்படி வயது கூடியது இவர்களது பிழையல்லவே. அதனால். இப்படியான வரையறைகளும், கட்டுப்பாடுகளும், பல மாணவர்களை தேவையில்லாமல் பாதிப்படைய வைக்கிறது.

ஒழுங்கான பாடசாலைகள் இல்லை. போதியளவு ஆசிரியர்கள் இல்லை. பெற்றோரோ, ஆசிரியர்கள் தேவை எனக் கேட்டுக் கேட்டு சலிப்படைந்து விட்டனர்.

14 கலைப்பட்டதாரிகள், கல்வி அதிகாரிக்கு மகஜர் கொடுத்துள்ளனர். தாம் பணமில்லாமலோ அல்லது குறைந்தது 500 ரூபாய் பணத்திற்கோ தொண்டர் ஆசிரியர்களாக பணியாற்ற விருப்பம் எனக் கேட்டுள்ளனர். ஆனால், இவர்களை தொண்டர் ஆசிரியர்களாகக் கூட நியமனம் செய்ய முடியாதவாறு கல்வி அதிகாரி உள்ளார்.




*03.01.94இரவு....*
*ராணுவத் தலைவர்களுடனான கூட்டம் முடிந்தது.*
*உற்ற தோல்விகளின்பின்*
*வெற்றிக்கான கனவு எழுத்தினவொடு*
*உண்டார் உணவு சி.தீபத்தின் தலைவர்.*

*மென் பஞ்சுச் சயனத்தில் சரிந்தார்*
*தொடர்ந்து ஏவறை,*
*கிழக்கின் ஓலம்....வடக்கின் வெடில்...*
*முகத்தைச் சுளித்தார்*
*இடுப்பைச் சற்றுத் தூக்கிக் கொண்டார்*
*வாயு பறிந்தது*
*'பெரும்' தேசிய வாசம்..! ஆகா!!*
*தேறிய வாசத்தை உள்ளிழுத்துக் கொண்டார்*
*புன்னகை படர.*

*கண்கள் சொருகச் சொருக*
*நின்ற நெடுமரமானார்*
*சிறுகொடிகள் சுற்றிப்படரப் படர*
*இலைகள் அடியை வருடித் தழுவத் தழுவ*
*புலரும் பொழுதை நோக்கி இரவு நகர்வதான கனவில்*
*மீண்டும் ஓர் முறை வாலிபனாகிக் கொண்டார்*
*திடீரென*
*பழக்கமற்ற கெட்டகனவு போலவும்*
*பழக்கமற்ற அவலக்குரல்கள் போலவும்*
*மாளிகை எங்கும் மரணவாசம் போலவும்*
*உணர்ந்தார்*
*மூசிப்பார்த்தார் முன்கையால் விசிப்பார்த்தார்*
*ஆசிதந்த ஆமத்துறுவைக் கும்பிட்டார்*
*அடங்கவில்லை*
*வேவுப்படையின் தலைவரை அழைத்தார்*
*'தூய உண்மையைச் சொல்' என்றார்*
*'சூரிய மலையைச் சூழ்ந்த பகுதிகளை*
*ஆழ்ந்தகழ்கிறார்கள் ஐயா!'*

*மெத்தையில் நிமிர்ந்து இருந்தார்*
*மீண்டும் துர்வாசம்....*
*சற்று இடுப்பைத் தூக்கினார்*
*துரதிருஷ்டவசமாக இப்பொழுது*

*ரயர்கள் எரியத்தொடங்கின....*
*தலையைப் பொத்தியபடி ஓங்காளித்தார்*
*உளவுப்படையின் தலைவர் ஓட்டை இல்லா கிசுகிசு பை*
*ஒன்றை*
*உருவி எடுத்து ஏந்தினார், ஒழுகியதை.*
*பின்னர் ஓடத் தொடங்கினார்*
*உலகச் சண்டியனும்*
*பேட்டை ரவுடியும் கோட்டை கட்டியிருந்த காணிகளின்*
*இடையில் ஓர் வளவில் புதைப்பதற்கு*



தேவஅபிரா

நன்றி - நூலகத்திட்டம்



# குமாரபுரம் ஸ்டேஷன்



குமாரபுரம் என்பது ஒரு காட்டு ஸ்டேஷன். அரை மைல் சுற்றளவுக்கு எந்த ஊரும் கிடையாது. ஆனாலும், ஸ்டேஷன் என்று கட்டி விட்டால் பெயர் வைக்காமல் முடியுமா? இடுகுறிப் பெயரையாவது வைத்துவிடத் தானே வேண்டும்? அந்த கணக்கில் தான் குமாரபுரம் என்ற பெயரை வைத்திருக்கிறார்களே ஒழிய மற்றப்படி கிழக்கே ஒரு மைலுக்கப்பால் உள்ள குமாரபுரம் என்ற கிராமம் முக்கால் நூற்றாண்டாக ஸ்டேஷனைப் பகிஷ்காரம் செய்துகொண்டுதானிருக்கிறது. தாது வருஷப் பஞ்சத்தின் போது ஜனங்களுக்கு நிவாரணம் அழிக்கும் நோக்கத்துடன் திருச்சியிலிருந்து திருநெல்வேலி வரையிலும் ரயில் பாதை போடப்பட்டதாகச் சொல்லுவார்கள். அந்தப் பாதையில் கோவில்பட்டிக்கு தெற்கே ஏழாவது மைலில் இருக்கிறது இந்த ஸ்டேஷன். சுற்றுக்கிர்ாம வாசிகள் வாழ்நாளில் ஒருமுறையோ, இருமுறையோ தான் கோவில், குளம் என்று யாத்திரை கிளம்புவார்கள். பத்துமைல் தூரத்தில் ஒரு மாரியம்மன் கோவிலோ, பன்னிரண்டுமைல் தூரத்தில் ஒரு காளியம்மன் கோவிலோ இருக்கும். அதற்குப் போய் பொங்கலிட்டு விட்டு வருவது வழக்கம். இந்த க்ஷேத்திராடனத்திற்கும் ரயிலும் வேண்டாம், மோட்டாரும் வேண்டாம். பெரும்பாலான சமயங்களில் அவர்கள் போகவேண்டிய ஊர் ஸ்டேஷனை விடவும் அருகில் இருக்கும். நேரே ஊருக்கு நடந்து போகாமல் ஸ்டேஷனுக்கு வந்து யாரும் ரயில் ஏறுவார்களா?

இந்த ஸ்டேஷனின் வரலாற்றில் முதன் முதலாக வந்து இறங்கிய முக்கியஸ்தர் சுப்பராம ஐயர் என்று தான் சொல்ல வேண்டும். கோவில் பட்டியிலிருந்து அவர் மூன்று நாட்களுக்கு முன் வந்திருந்தார். புதிதாக மாற்றுதலாகி வந்திருக்கும் ஸ்டேஷன் மாஸ்டருக்கு அவர் பால்ய நண்பர். சிறிது காலம் வரை பள்ளித்தோழர். சற்று எட்டிய உறவும் கூட. ஸ்டேஷன் மாஸ்ரர் தன் நண்பருக்கு இந்தக் காட்டு ஸ்டேஷனில் வரவேற்பு அளித்து விருந்துபசாரம் செய்ய இப்போது ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது. அவருடைய பிள்ளைக்கு ஆறாம் ஆண்டு நிறைவு வந்தது. அதை ஒரு சாக்காக வைத்து நண்பரை அழைத்தார். சுப்பராம ஐயரும் அமைதியான சூழ்நிலையில் நண்பரோடு நிம்மதியாகப் பொழுது போக்கலாம் என்று வந்து சேர்ந்தார்.

ஆண்டு நிறைவு வைபவத்திற்கு வந்த ஒரே விருந்தினர் சுப்பராம ஐயர் தான். பால்ய நண்பர்கள் இருவரும் தத்தம் வாழ்க்கை வரலாறுகளையும், ஊர் விட்டு ஊர் மாற்றுதலாகிப் போன கதைகளையும், குடும்பச் செய்திகளையும் பற்றி விஸ்தாரமாக இரவெல்லாம் பேசிக் கொண்டிருந்தார்கள். கோவில் பட்டியில் வசதிகள் எப்படி என்று ஸ்டேஷன் மாஸ்ரர் கேட்டார். குமாரபுரம் ஸ்டேஷனில் எப்படி நாட்களைத் தள்ள முடிகிறது என்று சுப்பராம ஐயர் கேட்டார்...ஒரு நாள் கழித்து.

மறுநாள் ஸ்டேஷன்மாஸ்டர் அடிக்கொரு தடவை தம் வேலையைக் கவனிப்பதற்காக அவரிடம் விடைபெற்றுப் போய்க் கொண்டிருந்தார். முற்பகலில் ஸ்டேஷன்மாஸ்ரர் இல்லாத சமயங்களில், அவருடைய பையனோடு உட்கார்ந்து தமாஷாகப் பேசிக்கொண்டிருந்தார் சுப்பராம ஐயர். பையன்களோடு விளையாடுவதோ, பையன்களின் 'கூட்டுறவால் குதூகலம் அடைவதோ அவருக்கு வழக்கமில்லை. அவருடைய தொழில்தான் அதற்குக் காரணமோ என்னவோ! இருந்தாலும் பேச்சுத்துணைக்கு அங்கே அந்தச் சிறுவன்தானே இருக்கிறான்? அவனோடு ஒரு தினுசாக மத்தியானம் வரை பொழுதைக் கழித்தார். சாப்பாட்டுக்குப் பிறகு இரண்டுமணி நேரம் படுத்துத் தூங்கினார். மூன்று மூன்றரைக்கெல்லாம் எழுந்து தாம் கையோடு கொண்டு வந்திருந்த ஒரு புத்தகத்தை எடுத்துக் கொண்டு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டார்.

பிளாட்பாரத்தில் ஐந்தாறு வேப்பமரங்கள் இருந்தன. கோடை காலமானதால் நன்றாகப் பூத்துத் தரையில் படிக்கணக்கில் பூக்களை உதிர்த்திருந்தன. அடர்த்தியாகத் தளிர்த்திருந்த அந்த மரங்களிலிருந்து குளிர்ந்த காற்று சிறிது மலர் மணத்தோடு ஸ்டேஷனை நோக்கி வீசிக்கொண்ருந்தது. அதனால் ஸ்டேஷன் கட்டடத்தில் காற்றுவரும் பக்கத்தில் ஒரு பெஞ்சில் உட்கார்ந்து கொண்டு புத்தகத்தை விரித்துப் படிக்க ஆரம்பித்தார்.

சிறிது நேரத்தில் தெற்கேயிருந்து வந்து ஒரு எக்ஸ்பிரஸ் வண்டி வழக்கம் போல் அந்த ஸ்டேஷனில் நிற்காமல் போய் விட்டது. இனி மாலை ஆறு மணிக்குமேல்தான் அங்கே வண்டிகள் வரும். ஆகவே ஸ்டேஷன்மாஸ்டர் நண்பரின் பக்கத்தில் வந்து உட்கார்ந்தார். புத்தகத்தை மூடி கீழேவைத்த சுப்பராம ஐயர், 'இந்த ஸ்டேஷனுக்குப் பிரயாணிகளும் வருவதுண்டல்லவா?' என்று சிரித்துக் கொண்டே கேட்டார்.

'வராமல் என்ன? நேற்றுக்கூட ஒரு பிரயாணி வந்து இறங்கினாரே?' என்றார் ஸ்டேஷன்மாஸ்ரர்.

சுப்பராம ஐயர் உரக்கச் சிரித்தார். நேற்று வந்து இறங்கிய பிரயாணி அவரேதான்.

'இப்படி இன்னும் பத்து ஸ்டேஷன்கள் இருந்தால் போதும் ரயில்வே பட்ஜெட்டில் வருஷம் தவறினாலும் துண்டு விழுவது தவறாது' என்று அவரோகணச் சிரிப்போடு சொல்லிப் பேச்சையும் சிரிப்பையும் ஏககாலத்தில் நிறுத்தினார் சுப்பராம ஐயர்.

'அப்படியும் சொல்லிவிடுவதற்கில்லை. நாளை திங்கட்கிழமை. கோவில்பட்டியில் சந்தை. பத்து டிக்கெட்களுக்காவது ஆள் வந்து சேரும்.'

'அப்படியானால் நாளை ஸ்டேசனுக்கு இரண்டு ரூபாய் வரும்படி இருக்கிறது என்று சொல்லுங்கள்!' இருவரும் சிரித்தார்கள். அட்போது போர்ட்டர் கருப்பையா வந்து ஒரு மூலையில் நின்று, இவர்கள் பேசுவதை ரஸித்துக் கேட்டுக் கொண்டிருந்தான்.

'எதற்காகத்தான் இந்த ஸ்டேசனைக் கட்டிப் போட்டானோ? இது இல்லையென்று எவன் அழுதான்?'

இந்த ஸ்டேசன் சுற்றுக் கிராமவாசிகளுக்கு வேறொரு வகையில் மிகவும் பிரயோசனப்பட்டு வருகிறது. இப்படியும் ஸ்டேஷனால் 'ஒரு நன்மை இருக்க முடியும் என்பதை இங்கு மாற்றலாகி வந்த பிறகுதான் பார்த்தேன்.'

சுப்பராம ஐயர் ஒன்றும் சொல்லாமல் கேட்டுக் கொண்டு இருந்தார். ஸ்டேசன் மாஸ்டர் தொடர்ந்து சொன்னார்.

'இது கோடை காலமாக இருப்பதனால்தான் சுற்றிலும் உள்ள இந்தப் புன்செய் நிலங்கள் இப்படிப் பயிர் பச்சை இல்லாமல் வரண்டு கிடக்கின்றன. மற்றச் சமயங்களில் இப்படி இராது. நவதானியங்களும் விளையும் செழுமையான பூமிதான். நிலத்தில் வேலை செய்பவர்கள் குடிதண்ணீர் பிடிப்பதற்கு மண் கலயங்களோடு இங்கே வருவார்கள். இருபது கலயம் தண்ணீராவது தினமும் தேவைப்படும். அந்த வகையில் இந்த ஸ்டேஷன் பிரயோஜனப் பட்டு வருகிறது.'

'அப்படியானால் தண்ணீர்ப் பந்தல் கட்ட வேண்டிய இடத்தில் ஸ்டேஷனைக் கட்டியிருக்கிறான் என்று சொல்லுங்கள்!'

ஸ்டேஷன் மாஸ்டர் இப்போது தமாஷை நிறுத்தி விட்டு மனப்பூர்வமாகவே பேச ஆரம்பித்தார்.

'இப்படித்தான் ஒன்று இருக்க வேண்டிய இடத்தில் மற்றொன்றைக் கொண்டு போய்க் கட்டுகிறான் மனிதன். ஒரு காரியத்துக்கென்று உண்டாக்கப்பட்டது. மற்றொரு காரியத்துக்குப் பிரயோஜனப்படுகிறது. நியாயமாகச் செய்த செலவு தண்டச் செலவாக மாறிக் கொண்டு வருகிறது; உலகமே அப்படி இருக்கும் போது இந்தக் குமாரபுரம் ஸ்டேஷனை மட்டும் பழித்துப் பேசுவானேன்?'

சுப்பராம ஐயர் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டு 'உலகத்தையே உங்கள் ஸ்டேஷன் ஜன்னல் வழியாகப் பார்க்கிறீர்கள்! ஆறு மாதங்களுக்குள் இந்தக் கல் கட்டடத்தின் மேல் உங்களுக்கு இவ்வளவு பாசம் ஏற்பட்டு விட்டது ஆச்சரியமாகத்தான் இருக்கிறது' என்றார்.

ஸ்டேஷன் மாஸ்டர் சற்று ஆவேசமாகவே பேச ஆரம்பித்தார்:

'கோவில்பட்டியில் பள்ளிக்கூடம் கட்டியிருக்கிறானே, எதற்காகக் கட்டியிருக்கிறான்? சொல்லுங்கள். பார்ப்போம்!'

'எதற்காகப் பள்ளிக்கூடம் கட்டுவான்? நூறு குழந்தைகள் படிப்பதற்காகத்தான் கட்டுவான்!'

'சரி, ஒப்புக் கொள்ளுகிறேன்! நூறு குழந்தைகளும் எதற்காகப் படிக்கிறார்கள்?' என்று கேட்டார் ஸ்டேஷன் மாஸ்டர்.

'இப்படியெல்லாம் கேள்வி போடுகிறீர்கள்'

'காரியமாகத்தான் உங்களைக் கேட்கிறேன். பதில் சொல்லுங்கள்.'

'....'

'பிள்ளைகள் அறிவு வளர்ச்சிக்காகப் படிக்கிறார்கள் என்றுதானே சொல்கிறீர்கள்?'

'நீங்கள் வேறு என்ன காரணத்தைச் சொல்லப் போகிறீர்கள்?'

'எந்தப் பைத்தியக்காரனும் அறிவு வளர்ச்சிக்காகப் பிள்ளைகளைப் பள்ளிக்கு அனுப்புவதில்லை. நீங்களும் நானும் அறிவு வளர்ச்சிக்காகவா படித்தோம்? படிக்காதவனுக்கும் உத்தியோகம் உண்டு என்று சட்டம் செய்யட்டும். எவனாவது மழைக்குக் கூடப் பள்ளிக்கூடத்தில் வந்து ஒதுங்குகிறானா என்று பார்க்கிறேன்' என்று சவால் விட்டார் ஸ்டேஷன் மாஸ்டர்.

சுப்பராம ஐயர் சிரிக்கும் போது போர்ட்டரும் சேர்ந்து சிரித்தான். அவனை வைத்துக் கொண்டு தமாஷ் பேச்சுப் பேசுவது மரியாதை இல்லை என்று நினைத்தோ என்னவோ, சுப்பராம ஐயர் மேற்கொண்டு எதுவும் பேசாமல் புத்தகத்தைக் கையில் எடுத்துக் கொண்டார்.

'என்ன, பேசாமல் இருக்கிறீர்கள்?' என்று கிண்டினார் ஸ்டேஷன் மாஸ்டர்.

'உங்களிடத்தில் பேசி ஜெயிக்கவா? குமாரபுரம் ஸ்டேஷன் சந்திர சூரியர்கள் உள்ளவரை நிலைத்திருக்கட்டும், எனக்கு ஒரு நஷ்டமும் இல்லை' என்று சொல்லிவிட்டு ஐயர், ஏதோ ஒரு பக்கத்தைத் தேடியவராய்ப் புத்தகத்தைப் புரட்டினார்.

ஸ்டேஷன் மாஸ்டர் போட்டரை அழைத்து, 'வீட்டுக்குப் போய்க் காபி போடச் சொல், கருப்பையா' என்று சொல்லி அனுப்பினார்.

'நாமும் போகலாமே' என்றார் ஐயர்.

சிறிது நேரத்தில், இருவரும் எழுந்து ஸ்டேஷனை அடுத்திருந்த வீட்டை நோக்கிப் புறப்பட்டார்கள்.

மூன்றாம் நாள் காலையில் எட்டு மணிக்கெல்லாம் வடக்கே போகும் பாஸஞ்சர் வண்டி ஒன்று இருந்தது. அன்று திங்கட்கிழமை. கோவில்பட்டிச் சந்தைக்குச் செல்லும் பிரயாணிகள் நாலைந்து பேர் ஏழு மணிக்கு முன்னதாகவே சாக்குப் பைகள் சகிதம் ஸ்டேஷனுக்கு வந்து உட்கார்ந்து வெற்றிலை பாக்குப் போடட வணணம ஏதேதா பேசிக கொண்டிருந்தார்கள். ஏழேகால் மணிக்கெல்லாம், சுப்பராம ஐயரும் பலகாரம் சாப்பிட்டு வந்து பிளாட்பாரத்தில் உள்ள வேப்ப மரங்களில் கீழே கிடக்கும் ஒரு பெஞ்சியில் உட்கார்ந்து முந்திய நாள் கையில் வைத்துக் கொண்டிருந்த புத்தகத்தை எடுத்து, விட்ட இடத்திலிருந்து படிக்க ஆரம்பித்தார். ஆனால் நாட்டுப்புறப் பிரயாணிகளின் சுபாவமான உரத்த சம்பாஷணைகளால் அவரால் நிம்மதியாகப் படிக்க முடியவில்லை. சுகந்தமான வேப்பங்காற்றும் அவருடைய கவனத்தைத் திருப்பிக் கொண்டிருந்தது.

'இந்தப் பாலைவனத்திலும் இப்பேர்ப்பட்ட ஒரு நறுமணம்! இந்த மாதிரியான ஓர் இளங்காற்று! பார்த்தால் ஒரே கருப்பு மண்ணாக இருக்கிறது. இங்கே இப்படிச் சில மரங்கள் முளைத்து, இப்படி ஒரு திவ்வியமான வாசனையைக் காற்றில் கலந்து கொண்டிருக்கிறது. இந்த வாசனை கூட இந்த மண்ணில்தான் உற்பத்தியாகியிருக்கிறது.'

அவர் கண்கள் தூரத்தில் தெரியும் கிராமங்களை ஏறிட்டு நோக்கின.

'இந்த ஊர்களில் வசிக்கும் நூற்றுக்கணக்கான ஆண்களும் பெண்களும் இந்த மண்ணை நம்பித்தான் வாழ்கிறார்கள். இந்தக் கரிசல் மண்ண.. லிருந்து மணமும் கிடைக்கிறது; உயிரும் கிடைக்கிறது.

அவருடைய சிந்தனைகளெல்லாம், அவர் படித்துக் கொண்டிருந்த புத்தகத்தின் வசனங்களைப் போல் சுவை பெற்றிருந்தன. தொடர்ந்து படிப்பது போலவே எதிர்பாராத சிந்தனைகள் ஓடிக் கொண்டிருந்தன. அப்போது மேற்கே சுமார் அரைமைல் தூரத்தில் நாலைந்து பேர் அவசரம் அவசரமாக ஸ்டேஷனை நோக்கி ஓட்டமும் நடையுமாக வந்து கொண்டிருப்பது தெரிந்தது.

'வண்டிக்கு நேரம் இருக்கிறது. இப்படி வேர்க்க விறு விறுக்க ஓடிவருவானேன்?' என்று ஐயர் நினைத்தார். அதைவிட அப்பாவித்தனமாக இருந்தது. சிலர் ஒருமணி நேரத்துக்கு முன்னதாகவே வந்து ஸ்டேஷனில் காத்துக் கொண்டிருந்தது.

'சூதுவாதில்லாத ஜனங்கள்' என்று ஒருமுறை அவர் தமக்குத் தாமே சொல்லிக் கொண்டார்.

வேப்பங்காற்று இருக்க இருக்க சுகம் ஏற்றிக் கொண்டிருந்தது. இந்தக் காற்றுக்காகவே அங்கே கோடை காலத்தைக் கழித்து விடலாம் போல் அவருக்குத் தோன்றியது. இந்த அடிட்டடையில், சுற்றிலும் உள்ள மண்ணிலும், புல்லிலும், புல் நடுவே பூத்துக் குலுங்கும் காட்டு மலர்களிலும், சாம்பல் நிறக் கற்றாழைகளிலும் அவருக்கு ஒரு அன்பும் அனுதாபமும் பிறந்தன. சிறிது நேரத்தில் ரயில் ஏறி விடப் போகிறோம் என்ற நினைப்பில் அந்த அன்பும், அனுதாபமும் சற்று அழுத்தம் பெறவும் செய்தன.


'மனிதர்கள் எங்கெல்லாம் வாழ்கிறார்கள்! மனிதர்களாகவும் வாழ்கிறார்கள்!'

கு.அழகிரிசாமி

இந்திய சாகித்திய அக்கடமியின் பரிசினைப் பெற்ற கு.அழகிரிசாமி அவர்கள் 'மணிக்கொடி' காலத்து அறுவடைகளில் ஒருவர். புதுமைப்பித்தன், கு.ப.ரா, பி.எஸ்.ராமையா இவர்களுடன் விதந்து குறிப்பிட வேண்டிய சிறுகதை எழுத்தாளர் கு.அழகிரிசாமி. ஆயினும் மேற்கூறியவர்களுடன் ஒப்பிடுகிற போது, மனிதரை, அவர் உயர் வைப்படைப்பது இவர் சிறுகதைகளின் சிறப்பம்சம். மார்க்ஸியத்தின் பால் நாட்டம் கொண்ட இவரது சிறுகதைகளே தன்னை முற்றிலும் பாதித்ததாக எழுத்தாளர் ஜெயகாந்தன் ஒரு முறை குறிப்பிட்டார். 'குமாரபுரம் ஸ்டேஷன்' எனும் இவரது சிறுகதையும் மனிதரை, அவர் உயர்வைப் படைப்பதாக அமைகின்றது.

நன்றி - நூலகத்திட்டம்





# வி.பி

எனக்கு ஒரு நண்பன் இருந்தான். அவன் பெயர் மாறன். பாடசாலையில் படிக்கிற காலத்தில் செருப்புப் போடாது பாடசாலைக்கு வருவான். அவனிடம் அதற்குக் காரணம் இருந்தது. ''எல்லோருக்கும் எப்ப செருப்புப் போட வசதி வருகிறதோ அப்பதான் நானும் போடுவன்'' அவன் அப்படிச் சொன்ன போது அவன் வயது பதின்மூன்று. 1973 ஆம் ஆண்டு.

அப்படி அவனைப் பாதித்தவர் வி.பி. என அழைக்கப்படுகின்ற வ.பொன்னம்பலம்.

எமது ஊரில் (அளவெட்டி) வி.பியின் சேவைகள் அதிகம் இருந்தது. அரசாங்கம் கூட்டுறவுச் சங்கங்களை அமைக்க முன்னர், இருந்த கூப்பன் கடைகளையும், சங்கக்கடைகளையும், கொம்பனிக் கடையையும் ஒன்றிணைத்து அளவெட்டி கூட்டுறவு சமாஜம் எனும் கூட்டுறவுச் சங்கக்கடை ஒன்றினையும் அமைத்திருந்தார். இலங்கையின் கூட்டுறவுச் சங்கங்களுக்கு இது முன்னோடியாகவும் அமைந்தது. பின்னர் உருவான அளவெட்டி பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் தலைவராகவும் பதவியேற்று இலங்கையில் முன்னணி வாய்ந்த பல நோக்குக் கூட்டுறவுச் சங்கமாக மாற்றியமைத்தவர் வி.பி.

காங்கேசன்துறைத் தொகுதியில் தமிழரசுக் கட்சியின் கோட்டையாக அளவெட்டி விளங்கியிருந்த சமயம் அது. தமிழரசுக் கட்சித்தலைவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் சுலபமாக வெற்றி கொள்கின்ற நேரம். அளவெட்டியிலிருந்து செல்வநாயகத்தை எதிர்த்து வி.பி. தேர்தலில் நிற்கிறார். அவருக்குப் பின்னால் இளைஞர் குழாம் திரளுகின்றது. அவரது கொள்கைகளை இளைஞர்கள் அங்கீகரிக்கிறார்கள். அதற்காக வேலை செய்கிறார்கள். கொம்யூனிச சித்தாந்தம் இளைஞர்களைக் கவர்கிறது. வி.பி.யிடம் அவர்களுக்கு தகப்பன், மகன் உறவு, தோழமை உணர்வு. எல்லாம் கலந்த பாசம். 1970 ஆண்டுத் தேர்தலில் செல்வநாயகத்தை தேர்தலில் வி.பி. வென்று விடுவார் எனும் நம்பிக்கையும் அளவெட்டியில் நிலவியது.

ஒரு உண்மை- விமர்சனத்துக்கு அப்பால் வி.பி.தான் கொண்ட கொள்கைக்காக தான் சார்ந்த கட்சிக்காக உழைத்தார். விசுவாசமாக உழைத்தார்.

பெரும்பான்மைத் தமிழ் மக்களால் 'தாழ்த்தப்பட்ட மக்கள்' என அழைக்கப்பட்ட என்னைப் போன்ற பலரிற்கு வி.பி. ஆதர்சமாக விளங்கினார். எம்மை மனிதனாக மதித்து, எம்மைச் சகல தகுதிகளிலும் உயர்த்த முனைந்தவர்; உயர்த்தப்பட்டவர்களுக்காக 'அடங்காத் தமிழர்' சி.சுந்தரலிங்கம், எஸ்.ஜே.வி.செல்வநாயகம், போன்றோர் தேர்தலில் நின்ற சமயம் வி.பி. எம் அணிக்காக வேலை செய்தார்.

அவரில் ஆச்சரியம் என்னவென்றால் ஊரில் ஒவ்வொரு குடும்பங்களையும் அவருக்குத் தனிப்பட தெரிந்திருந்தது.

வி.பி.யின் மேடைப் பேச்சுக்கள் வெகுவாக ரசிக்கக் கூடியவை. எதிரியைப் புண்படுத்தாத, அரசியல் கருத்துக்களை மட்டும் பேசுவதனைக் கலையாகக் கொண்டவர். அவரது அரசியல் எதிரிகள் அவரை 'வருவார் போவார்' (வ.பொ) என்றும் 'சிறீமாவின் சீலைத் தலைப்பைப் பிடித்துத் தொங்குபவர்' என்றெல்லாம் கிண்டலடித்த போதும், அவர் தனது பாணியிலிருந்து மாறுபடவில்லை.

அவரது அரசியலின் இறுதிக்காலங்களில் வி.பி.தோல்விகளைத் தழுவினார் என்ற போதிலும், நேர்மையான அரசியல்வாதியாகத் திகழ்ந்தார் என்பதனால் அவருக்கு என் அஞ்சலி.

- அளவெட்டியான்

# சரிநிகரின் நாட்குறிப்பு

**ஏப்பிரல்-3**

மணலாறு ஆந்தகுளம் பிரதேசத்திலுள்ள 'ஜயபூமி' முகாமைச் சேர்ந்த படையினரின் தாக்குதலால் 3 புலி உறுப்பினர்கள் கொலை செய்யப்பட்டனர். 10 பேர் ப்டுகாயம் என அரச தரப்பு தெரிவிக்கின்றன.

புல்மோட்டை பொலிஸ் பாதுகாப்பு அரண் மீதான புலிகளின் தாக்குதலில் இருபொலிஸார் பலி. நால்வர் காயம்.

புத்தளம் அகதி முகாம் எரிந்து நாசம். 156 குடிசைகள் முற்றாக சேதம். 700பேர் உடமைகளை இழந்தனர். ஒருவர் பலியானார்.

**ஏப்பிரல் -4**

பேருவளை பிரதேச சபையின் சு.க உறுப்பினர் சந்திர டி சில்வா இனந்தெரியாத நபர்களால் மொறகல்லையில் வைத்துச் சுட்டுக் கொலை செய்யப்பட்டார்.

**ஏப்பிரல் -5**

கனேமுல்ல அதிரடிப்படை முகாமில் நடந்த குண்டுவெடிப்புச் சம்பவத்தில் இராணுவத்தை சேர்ந்த ஒருவர் பலி.

**ஏப்பிரல் -6**

ருவண்டா, புருண்டி ஜனாதிபதிகள் பேச்சுவார்த்தை நடத்திவிட்டு ஜெட் விமானத்தில் திரும்பி வருகையில் ரொக்கட் தாக்குதலுக்கு இலக்காகி இருவரும் பலி.

**ஏப்பிரல் -7**

வவுனியா இளமருதங்குளம் எனும் இடத்தில் பாதுகாப்பு படையினரின் தாக்குதலில் 8 விடுதலை புலி உறுப்பிர்கள் கொலை செய்யப்பட்டனர் என அரசு அறிவித்தது.

**ஏப்பிரல் -8**

கொழும்பில் குண்டுவெடிப்பு. மெரியட் ஹோட்டல் தாஜ் சமுத்திரக் ஹோட்டல், சபையர் ஹோட்டல், தெகிவளை மிருகக்காட்சிசாலை, கல்கிஸ்ஸ கடற்கரை ஆகிய இடங்களில் இக்குண்டு வெடிப்பு சம்பவம் நடந்துள்ளது. குண்டு வைக்கச் சென்ற இருவரில் ஒருவரான அருள்தாஸ் குண்டு வெடிப்பில் கொல்லப்பட்டார். 14 பேர் சிறு சிறு காயங்களுடன் தப்பித்தனர் என அரசு தெரிவித்துள்ளது.

கம்புறுப்பிட்டி சோதனை முகாமில் புலிகளின் தாக்குதலினால் இராணுவத்தைச் சேர்ந்த ஒருவர் பலி. பலர் காயம் புலிகள் தரப்பிலும் காயம்.

அச்சுவேலியில் இராணுவத்தால் மேற்கொள்ளப்பட்ட கண்மூடித்தனமான ஷெல் தாக்குதலில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூன்று பெண்களான சிவலிங்கமூர்த்தி பேரின்பநாயகி (54), வேலுப்பிள்ளை சகுந்தலா தேவி (42) சிவலிங்கமூர்த்தி சிவதர்ஷினி (19) ஆகியோர் கொல்லப்பட்டனர். இன்னுமொருவர் படுகாயமடைந்தார்.

புத்தளம் எழுவன்குளம் இராணுவ முகாமைச் சேர்ந்த இராணுவவீரர் ஒருவர் குண்டுகளுடன் தூங்கிக் கொண்டிருந்த போது குண்டு வெடித்து மரணம்.

**ஏப்பிரல் -10**

கொழும்பில் நடந்த குண்டு வெடிப்பின் காரணமாக சந்தேகத்தின் பேரில் மலையகம் மற்றும் வட-கிழக்கைச் சேர்ந்த ஐநூறுக்கும் மேற்பட்ட இளைஞர் யுவதிகள் கைது.

**ஏப்பிரல் -11**

கொழும்பில் இடம்பெற்ற குண்டு வெடிப்புச் சம்பவங்களுக்கு தாங்களே பொறுப்பு என 'ஈழம் படை' எனும் அமைப்பு சர்வதேச செய்தி நிறுவனமொன்றிற்கு தொலைபேசியில் அறிவிப்பு.

தப்பிச் செல்ல முயற்சித்த இருவர் மீது மிரிகான பொலிஸினரின் துப்பாக்கிச் சூட்டுக்கு ஒருவர் பலி என அரசு அறிவிப்பு.

கொழும்பு முகத்துவாரத்தில் சந்தேகத்தின் பேரில் மூன்று தமிழ் வாலிபர்கள் கைது.

**ஏப்பரல் -12**

கொழும்பு புதுச்செட்டித்தெருவில் விடியற்காலை பொலிஸாரின் தேடுதல் வேட்டையில் 30 தமிழ் இளைஞர் யுவதிகள் சந்தேகத்தின் பேரில் கைது.

**ஏப்பிரல் -13**

மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினரான ராஜநாதன் பிரபாகரன் சந்தேகத்தின் பேரில் கொழும்பில் கைது செய்யப்பட்டு தடுத்து வைப்பு.

**ஏப்பிரல் -15**

மாத்தளை மாநகரசபையின் ஐ.தே.க. உறுப்பினர் ரஹ்மான் ஹுசைன் அவரது உறவினர் வீட்டில் வைத்து மோட்டார் சைக்கிளில் வந்த இனந்தெரியாத நபர்களால் சுட்டுக்கொலை செய்யப்பட்டார்.

அரசியல்வாதிகள் மூவரின் ஊழல்களை வெளியிட்ட காரணத்தினால் தனக்கு லஞ்ச ஊழல் ஆணையாளர் பதவி வழங்கப்படவில்லை என உதவி லஞ்ச ஊழல் ஆணையாளர் விஜய பீ அன்ரனி மேல்நீதிமன்றத்தில் 100 லட்ச ரூபா நட்டஈடு கோரி வழக்குத் தாக்கல் செய்துள்ளார்

**ஏப்பிரல் -17**

8ம் திகதி கொழும்பில் இடம்பெற்ற குண்டுவெடிப்புக்கு ''எல்லாளன் படை'' எனும் அமைப்பு தாங்களே சம்பவத்துக்கு காரணம் என உரிமை கோரியுள்ளதுடன் உல்லாசப்பயணிகளுக்கு கொலை அச்சுறுத்தல்களையும் விடுத்துள்ளது.

**ஏப்பிரல் -16**

மணலாறு பொலிஸ்நிலையம் மீது புலிகள் நடத்திய தாக்குதலில் பொலிஸ் ஒருவர் மரணம். மூன்று பொலிஸார் படுகாயம்.

# 'பிதாவே என்னை மன்னியும்'

*மீண்டும் என்னை*
*சிலுவையில் அறையுங்கள்*
*மூன்றாம் நாளில்*
*உயிர்த்த குற்றத்துக்காய்,*

*பாரம் நிறைந்த சிலுவையை*
*முதுகில் சுமத்துங்கள்*
*கல்லிலும் முள்ளிலும்*
*என்னை நடத்துங்கள்*
*சவுக்கினால் அடியுங்கள்*
*வடிகின்ற ரத்தத்தை*
*பார்த்து ரசியுங்கள்*

*இரும்புக் கம்பி*
*மண்நிறைந்த குழாய்*
*மண்வெட்டிப் பிடி*

*எதனாலும் என்னை தாக்குங்கள்*
*கைகளை கால்களை*
*உடைத்து வீசுங்கள்*
*கண்களைப் பிடுங்கி*
*காக்கைக்கு வீசுங்கள்*

*இயந்திரத் துப்பாக்கியினால்*
*எனது நெஞ்சு பிளக்கட்டும்*
*எனது மூளை சிதறட்டும்.*

*எனது எண்ணங்கள்*
*எனது ஆசைகள்*
*எனது உணர்வுகள்*
*எல்லாம் அழியட்டும்*

*மீண்டும் என்னை*
*சிலுவையில் அறையுங்கள்*
*மூன்றாம் நாளில்*
*உயிர்த்த குற்றத்துக்காய்.*



- இனியவள்

# தோல்வியை நோக்கி

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐ.தே.க வேட்பாளருக்கு எதிராக மேல் மாகாண சபை முதல் அமைச்சர் சந்திரிகா பண்டாரநாயக்கா போட்டியிட்டால் நான்கு லட்சம் வாக்குக்களை அவர் மேலதிகமாகப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளதாக தேசியப் புலனாய்வுத்துறையினர் (N.I.B) தமது அறிக்கையில் தெரிவித்துள்ளனர். ஐ.தே.க.வில் அரசியல் ஸ்திரப்பாடு சம்பந்தமாக ஆய்வொன்றை நடாத்திய தேசிய புலனாய்வுத்துறை இம்மாதம் 7ம் திகதி சமர்ப்பித்த தமது ஆய்வறிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்துள்ளது. இத்தேசியப் புலனாய்வுத்துறை தென்மாகாண சபைத் தேர்தலுக்கு முன்பாக அத்தேர்தலில் ஐ.தே.க தோல்வியைத் தழுவும் என அறிவித்திருந்தது குறிப்பிடத்தக்கது.

தேசிய குற்றப் புலனாய்வுப் பிரிவின் சிரேஸ்ட பொலிஸ் அதிகாரியான சேனக சில்வாவின் தலைமையில் 144 பொலிஸ் அதிகாரிகளைக் கொண்ட இந்த ஆய்வுக்குழு கடந்த ஜனவரி மாதத்திலிருந்து தனது ஆய்வினைத் தொடர்ந்திருந்தது. இவ்வாய்வின் போது தொண்டமான் ஐ.தே.க.வுடன் சேர்ந்திருந்து தேர்தலில் பங்கு பற்றுவார் என்று எடுத்துக் கொண்டே இவ்வாய்வு செய்யப்பட்டுள்ளது. இவ்வாய்வின்படி சந்திரிகாவிற்கு ஜனாதிபதித் தேர்தலில் நாலு லட்சம் மேலதிக வாக்குகள் கிடைக்கும் என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாய்வின் போது இக்குழுவினர் வடபிரதேசத்தை கணக்கில் எடுத்துக் கொள்ளவில்லை.

நன்றி - நூலகத்திட்டம்



## இலங்கையின் அரசியலமைப்புக்களும் இனப்பிரச்சினையும்.

# இனவாதம் நுழைந்த க்கதை

பௌத்த சிங்கள பேரினவாதம் 1800களில் ஊற்றுப் பெற்றுவிட்டாலும் 1915ம் ஆண்டு வரை அது அரசியலில் ஆதிக்கம் செலுத்திய கற்றோர் குழாமை ஆக்கிரமிக்கவில்லை. 1915 இல் நடைபெற்ற சிங்கள -முஸ்லீம் கலவரத்தைத் தொடர்ந்தே அது கற்றோர் குழாமையும் தனக்குள் இழுத்துக் கொண்டது. அதுவரை இனவாதம் மதவாதிகள் மட்டத்திலிருந்து பெரியளவிலும் கலைஞர்கள், தேசியவாதிகள் என்போரிடமிருந்து சிறிய அளவிலுமே வெளிக்கிளம்பியிருந்தது.

இத்தன்மைகளினாலேயே 1910 இல் குறூ-மக்கலம் அரசியற் சீர்திருத்தம் அறிமுகப்படுத்தப்பட்ட போது அதில் பேரினவாதத்தினை நிலைநிறுத்துவதற்கான அம்சங்கள் காணப்படவில்லை. எனினும் கற்றோர் குழாம் சீர்திருத்தத்திற்கான கோரிக்கைகளை முன்வைத்த போது அதில் இனவாத அம்சம் காணப்பட்டது. அவர்கள் நியமன முறைக்குப் பதிலாகத் தேர்தல் முறையையும், இனவாரிப் பிரதிநிதித்துவத்திற்குப் பதிலாகப் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவத்தையும் கோரிநின்றனர். பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அடிப்படையில் இனவாதத் தன்மை வாய்ந்தது. ஏறத்தாழ 75 வீதமளவுக்கு பெரும்பான்மையினத்தைக் கொண்ட நாட்டில் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவமுறை பெரும்பான்மை இனத்தின் கைகளிலேயே ஆட்சி அதிகாரத்தை கையளிக்கக்கூடிய நிலையை உருவாக்கும். 1920க்கு பின்னர் இந்நிலையே தொடர்ந்தது. ஆனால் பிரதேசவாரிப் பிரதிநிதித்துவக் கோரிக்கையை முன்வைத்தாலும் ஆரம்பத்தில் கற்றோர் குழாமிடம் இனவாதம் இருக்கவில்லை. இதனாலேயே அவர்கள் 1911 இலும் 1916இலும் பொன்னம்பலம் இராமநாதனைத் தங்களுடைய பிரிதிநிதியாகத் தெரிவு செய்தனர்.

### குறூ -மக்கலம் சீர்திருத்தம் (1910):

கோல்புறூக்கின் சீர்திருத்தத்தை தொடர்ந்து வந்த குறூ மக்கலம் சீர்திருத்தம் 1910ம் ஆண்டு நடைமுறைக்கு வந்தது. இச்சீர்திருத்தத்தின்படி சட்டசபையில் உத்தியோகப் பற்றற்றவர்களின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டு கற்றோர் குழாத்தினருக்குச் சட்டசபையில் இடம் கொடுக்கப்பட்டதோடு தேர்தல் முறைமையும் அறிமுகப்படுத்தப்பட்டது. இனப்பிரச்சினை தொடர்பாக இச்சீர்திருத்தம் அதிகளவில் முக்கியத்துவம் பெறாவிட்டாலும் கற்றோர் குழாமின் அரசியல் பிரவேசத்திற்கு வழிவகுத்தது என்ற வகையில் முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. இச்சீர்திருத்தத்தின்படி நடைபெற்ற தேர்தலில் கற்றோர் குழாமின் பிரதிநிதியாக பொன்னம்பலம் இராமநாதன், மார்க்கஸ்-பர்னாந்து என்பவருடன் போட்டியிட்டு வெற்றி பெற்றார். 1916ம் ஆண்டு நடைபெற்ற தேர்தலிலும், ஜே.எஸ். ஜெயவர்த்தனா என்பவரோடு போட்டியிட்டு வெற்றி பெற்றார்.

### தேசியவாதிகளின் எழுச்சி

குறூ-மக்கலம் அரசியற் சீர்திருத்த காலகட்டம் (1910-1920) இலங்கை அரசியல் வரலாற்றில் முக்கியமான காலகட்டமாகும். இக்காலகட்டத்தில் இலங்கை அரசியற் சக்திகள் மதவாதிகள், கற்றோர் குழாம் என்போருக்குப் புறம்பாகத் தேசியவாதிகள் ஒரு சக்தியாக எழுச்சி பெற்றனர். 1910 இலேயே இதற்கான கருக்கள் உருவாக்கப்பட்டாலும் 1915 இலேயே நிறுவன வடிவம் பெற ஆரம்பித்தது. இந்தவகையில் உருவாக்கப்பட்ட தேசிய இயக்கமே இளம் இலங்கையர் கழகம் (1915) ஆகும். இந்திய சுதந்திர போராட்டத்தினால் கவரப்பட்ட ஏ.ஈ.குணசிங்க விக்ரர் கொரயா என்பவர்களே இதற்கு தலைமை தாங்கினர். நூற்றுக்கணக்கான இளைஞர்களைக் கொண்ட இவ்வியக்கம் தீவிர தேசியவாத இயக்கமாக இருந்தது. இந்தியாவில் திலகர் முன்வைத்த ''சுயராச்சியம் எங்கள் பிறப்புரிமை'' என்ற கோரிக்கை இவர்களையும் கவர்ந்திருந்தது. இவர்களும் கற்றோர் குழாமைப் போலப் பிரித்தானியர்களிடம் சலுகைகளை கோரி நிற்காமல் சுயராச்சிய கோரிக்கையை முன்வைத்து 'வெள்ளையனே வெளியேறு' எனப்பிரச்சாரம் செய்தனர்.

1915 ஏப்பிரலில் கண்டி கைப்பற்றப்பட்ட நூற்றாண்டைக் கொண்டாடுமுகமாக இலங்கை பூராவும் வெள்ளையனே வெளியேறு என்ற கோரிக்கையை முன்வைத்து தேசிய இனக் கொண்டாட்டத்தை இவர்கள் நடாத்தினர். இவர்களுடைய பிரச்சாரத்திற்கு சிங்கள பத்திரிகைகளும் உதவின. ''தினமின'' பத்திரிகை இது தொடர்பாக 2.3.1915 இல் விசேட அனுபந்தம் ஒன்றை வெளியிட்டது. அதில் கண்டியைக் கடைசியாக ஆண்ட விக்கிரம இராஜசிங்கனின் படம், கொடி, முடி,



பொன்னம்பலம் அருணாசலம்

குடை, ஆலவட்டம், சிம்மாசனம், முதலிய அரசசின்னங்களின் நிழற்படங்களை வெளியிட்டதோடு ஈ.ஏ.பெரேரா, பி.ஜெயதிலகா என்போர் எழுதிய வரலாற்றுக் கட்டுரைகளையும் பிரசுரித்தது.

இளம் இலங்கையர் கழகத்தின் இப்பிரச்சாரம் இயல்பாகவே மதவாதிகளையும் தேசியவாதிகளையும் ஒன்றிணைத்தது. இதன் தீயவிளைவு என்னவெனில் ஆரம்பத்தில் இலங்கையர் அனைவரையும் ஒன்றிணைத்த ஒரு தேசிய இயக்கத்தைக் கட்டி எழுப்ப வேண்டும் என்ற நோக்கில் எழுச்சியடைந்த தேசியவாதிகளையும் பௌத்த சிங்கள பேரினவாதம் தன்னுள் இழுத்துக் கொண்டமையாகும். இவ் இருசக்திகளும் இணைந்த பேரினவாதத்தின் எழுச்சியாகவே 1915 இல் நடைபெற்ற சிங்கள முஸ்லீம் கலவரத்தை பார்க்கமுடியும்.

### சிங்கள முஸ்லீம் கலவரம் (1915)

1915இல் நடைபெற்ற சிங்கள முஸ்லீம் கலவரத்திற்கு முன்னரும் 1883 இல் ஒரு சமூகக் கலவரம் நடைபெற்றது. மதவாதிகள் மட்டும் தலைமையேற்ற இக்கலவரம் பௌத்தர்களுக்கும், கிறிஸ்தவர்களுக்கும் இடையில் கொட்டாஞ்சேனையில் நடைபெற்றது. 1883 ஏப்பிரலில் கொட்டாஞ்சேனை புனித லூசியா தேவாலயத்திற்கு அருகே உள்ள விகாரையில் மிகுத்துவத்த ஆனந்த தேரோ என்ற பிக்கு ஈஸ்டர் பண்டிகை நாளில் தனது விகாரையிலும் சில சடங்குகளை ஒழுங்கு செய்தார். இது தமக்கு எதிரான செயல் என கிறிஸ்தவர் நினைத்தபடியால் பெருங்கலவரம் தோன்றியது. இதில் ஒருவர் இறந்தார். 12 பொலிஸ்காரர் உட்பட 30 பேர் காயமடைந்தனர்.

இக்கலவரத்தில் மதவாதிகள் மட்டுமே முன் நின்றமையால் உடனடியாக நிறுத்தப்பட்டது. ஏனைய இடங்களுக்கு பரவக்கூடிய நிலை இருக்கவில்லை. ஆட்சியினரும் பக்கச்சார்பாக நடந்து கொள்ளவில்லை.

சிங்கள -முஸ்லீம் கலவரம் இதற்கு மாறானதாக இருந்தது. ஒரு சில நாட்களுக்குகிடையிலேயே நாடு முழுவதும் பரவியது. ஆட்சியினரும் பக்கச்சார்புடன் நடந்து கொண்டனர்.

கலவரத்துக்கான தொடக்கமாக கம்பளை வாலகொட விகாரைப்பிரச்சினை இருந்த போதும் கலவரம் கண்டியிலேயே ஆரம்பமானது. 28.5.1915 இல் வைகாசி விசாக நாளில் கண்டி காசில் வீதியில் ஊர்வலம் போய்க் கொண்டிருந்த பௌத்தர்களுக்கும் பள்ளிவாசலில் தொழுது கொண்டிருந்த முஸ்லீம்களுக்கும் இடையே நடைபெற்ற வாக்கு வாதமே கலவரத்திற்கு உடனடிக் காரணமாயிற்று.

இக்கலவரம் மிக விரைவிலேயே கொழும்பு, இரத்தினபுரி, மாத்தளை ஆகிய நகரங்களுக்கும் பரவியது. ஏற்கனவே பௌத்த மதவாதிகளால் உருவாக்கப்பட்ட முஸ்லீம்களுக்கு எதிரான இனவாதமும், இளம் இலங்கையர் கழகத்தினால் உருவாக்கப்பட்ட தேசிய எழுச்சியும் கலவரத்தை ஊக்குவித்தது. இதற்கு மேலும் எண்ணெய் ஊற்றும் வகையில் தலதாமாளிகையை அழிப்பதற்கு கொழும்பிலிருந்து முஸ்லீம்கள் வருகிறார்கள் என்ற வதந்தியும், ஆட்சியினர் முஸ்லீம்களுக்குச் சார்பாக நடந்து சிங்களவர்களை ஒடுக்கிய நிலையும் தேசியப் போராட்டத்தில் முஸ்லீம்கள் அன்னியப்பட்டிருந்த நிலையும் உதவியது.

கலவரத்துக்கு பின்னர் முஸ்லீம்கள் பற்றி சிங்கள மக்கள் கொண்டிருந்த உணர்வை கலவரம் நடந்து ஒரு மாதத்திற்கு பின்னர் அநகாரிக தர்மபால கூறிய கருத்து வெளிப்படுத்தியது. அவர் பின்வருமாறு கூறினார்.

''பிரித்தானியருக்கு ஜேர்மனியர் எவ்வாறோ சிங்களவருக்கு முஸ்லீம் அவ்வாறே. முகமதியர் சமயத்தாலும் இனத்தாலும், மொழியாலும் அந்நியர்கள். பௌத்த சமயம் இல்லாவிடின் மரணமே சிங்களவர் வேண்டுவர். பிரித்தானிய உத்தியோகத்தர் சிங்களவர்களைச் சுடலாம். தூக்கிலிடலாம். சிறைப்பிடிக்கலாம். ஆனால் எப்போதும் சிங்களவருக்கும் முஸ்லீம்களுக்குமிடையில் பகைமை உறவே உள்ளது. அந்நியரால் தமக்கு இழைக்கப்படும் அவமானங்களை இனிமேலும் பொறுக்க முடியாது என்று அமைதிமிக்க சிங்களவர் இறுதியில் உணர்ந்து விட்டனர். முழுத்தேசமும் முஸ்லீம்களுக்கெதிராக எழுச்சியுற்று விட்டது. இதற்குப் பொருளாதார ஆன்மீகரீதியான காரணங்கள் இருந்தன.

கலவரத்தைத் தொடர்ந்து பௌத்த சிங்கள பேரினவாதம் அரசியல் அரங்கிற்குள் நன்றாக தம்காலைப் பதித்து விட்டது. தேர்தல் அரசியலும் அறிமுகப்படுத்தப்பட்ட படியால் இதுவரை அந்நியப்பட்டிருந்த கற்றோர் குழாமும், இப்பௌத்த சிங்கள பேரினவாத அலைக்குள் நுழைய வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டது. இப்பேரினவாதம் இலங்கைத் தமிழருக்கு எதிராக அன்று வளராதபடியால் தமிழ்த்தலைமைகள் அனுபவரீதியாக உணர்ந்து கொள்ள சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. 1920 இன் பின்னரே அவர்கள் உணர்ந்து கொண்டனர்.

### அரசியல் திட்ட அரங்கில் பேரினவாதம்:


கலவரம் சிங்கள மக்கள் மத்தியில் இருந்த மதவாதிகள் தேசிய வாதிகள் கற்றோர் குழாம் என்போரை ஒன்றிணைத்தது.

இதன் நிறுவனவடிவமாகவே 1919 இல் இலங்கைத் தேசியகாங்கிரஸ் உருவாக்கப்பட்டது. கற்றோர் குழாமைச் சேர்ந்தவராகவும் அதே வேளை தீவிர தேசிய வாதியாகவும் இருந்தமையினால் பொன்னம்பலம் அருணாசலம் இலங்கைத் தேசிய காங்கிரஸின் தலைவராக தெரிவு செய்யப்பட்டார். இவர் தலைவராக இருந்தமையினால் புறத்தோற்றத்தில் தமிழர்களையும் இணைத்த தேசிய இயக்கமாக இது தோற்றமளித்தது. ஆனால் இதன் அடித்தளமாக பௌத்த சிங்கள பேரினவாதமாகவே இருந்தது. இது ஆரம்பிக்கப்பட்டு இருவருடங்களுக்கிடையிலேயே பேரினவாதம் தன் கோர முகத்தைக் காட்டத் தொடங்கியது. விளைவு அருணாசலம் தேசிய காங்கிரஸிலிருந்து தூக்கி வீசப்பட்டார்.

அரசியல் திட்டவாதிகளான கற்றோர் குழாமும் சிங்கள பௌத்த பேரினவாதத்திற்குள் நுழைந்த பின்னர் அரசியல் திட்ட மட்டதிலும் பேரினவாதம் தலைதூக்கத் தொடங்கியது. இதனால் 1920க்குப் பின்னர் உருவாக்கப்பட்ட எல்லா அரசியற் திட்டங்களிலும் பேரினவாத ஆதிக்கத்தை காணலாம். இந்த வகையில் 1920இல் அறிமுகப்படுத்தப்பட்ட மானிங் அரசியல் திட்டம் பேரினவாதம் அரசியல் திட்ட அரங்கில் தனது காலைப் பதிக்க ஆரம்பித்த ஒன்றாக இருந்தது. இவ் அரசியல் திட்டமூலம் மட்டுப்படுத்தப்பட்ட அளவில் அறிமுகப்படுத்தப்பட்ட பிரதேசவாரிப் பிரதிநிதித்துவம் அரசியல் திட்ட அரங்கில் பேரினவாத ஆதிக்கத்துக்கான கதவைத் திறந்து விட்டது. இதன்பின்னர் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் சிங்கள மக்களுக்கு மட்டுமே சென்றது. இது காலப்போக்கில் சிங்கள இனம் மட்டும் ஆளப்பிறந்த இனம் ஏனைய இனங்கள் ஆளப்படப் பிறந்த இனம் என்ற கருத்துப் போக்கை உருவாக்கிவிட்டது. ஜனாதிபதியின் அண்மைக்கால செடி, கொடி, பேச்சுக்கள் எல்லாம் இதிலிருந்து உருவானவையே.

செம்பாட்டான்

### படரும் கொடி



மை இருட்டில்
என் கரம் நீண்டு
எட்டி எட்டித் தொட்டது;
வானத்து மின் மினிகளை.

வேர்க்கால்கள்;
அருகில் மரவேருடன் புணர்ந்து,
முறுக்கிப் பிழிந்து பிணமாக்கி
இன்னும் அறியப்படாத
ஆழத்துள் புதைந்தது.

ஆணிவேரை அசைத்து,
பக்கவேர்களை அழித்து
நான் ஆழப்படுவதை
அறியாத மரம்
எக்காளமிட்டது;
'முடிந்தால் என்னைப் பற்றிக் கொள்'

நையாண்டியை நாசப்படுத்தி
சூர்யப்பந்தை
கைக்குள் பொத்திப் பிடித்து
ஒரு பொட்டு வெளிச்சமும்
சொட்டு மழையும்
உன்னால் ஸ்பரிசிக்க முடியாமல்
நீ சூம்பி விழுவதை
குனிந்து பார்ப்பதற்காக
மேகத்தைப் பற்றி
வெறிகொண்டு
வானில் படருகிறேன்.

ராகலை ஞானா

நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRILANKA

# சரிநிகர்

## ம.ம.மு.தலைவர்கள் மீதான வழக்கு:

## இழுத்தடிக்கும் அரசின் கபடத்தனம்

மலையக மக்கள் முன்னணிச் செயலாளர் நாயகம் அப்துல் பாவா காதர் மீதான வழக்கு விசாரணையின் தீர்ப்பு 18ம் திகதியன்று வழங்கப்படும் என எதிர்பார்க்கப்பட்ட போதிலும் மீண்டும் இவ்வழக்கு அரசதரப்பினர் வேண்டுகோளுக்கிணங்க ஒத்திப் போடப்பட்டுள்ளது. அரச தரப்பினர் மேலும் இரு சாட்சிகளை கொண்டுவர அனுமதி கோரியதன் காரணமாகவே இவ்வழக்கு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது. வழக்கை எப்படியாவது இழுத்தடிப்பதே இதன் நோக்கம் என்று நீதிமன்றத்தில் கூடியிருந்தோர் அதிருப்திப்பட்டனர்.

கடந்த சில தினங்களுக்கு முன் உயர்நீதிமன்றத்தில் காதரின் மீதான ''வொயர் டயர்'' விசாரணையின் போது நீதிபதி சி.வி.விக்னேஸ்வரன் அரசியல் பின்னணி காரணமாக இவ்வழக்கு இழுத்தடிக்கப்படுவதாக குறிப்பிட்டிருந்தார். கடந்த பல தடவைகள் 'வொயர் டயர்'' விசாரணை முடியும் நிலையில் நீதிபதி தனது தீர்ப்பினை வழங்கத் தயாராகும் சூழ்நிலைகளிலெல்லாம் அரசாங்க தரப்பு வழக்கறிஞர்கள் தங்களால் இன்னும் சில சாட்சிகளைக் கொண்டுவர முடியும் எனக் கூறி இழுத்தடித்து வந்ததும் அவ்வாறு கொண்டு வருவதாக கூறப்பட்ட சாட்சிகளும் கூட செல்லுபடியற்றதாகப் போனதும் தெரிந்ததே.



திரு. பீ.ஏ. காதர்

இந்நிலையில் 18ம் திகதியன்று காதர் மீதான வழக்கின் தீர்ப்பு வழங்கப்படும் என வழமைபோல் பலராலும் எதிர் பார்க்கப்பட்டது. எனினும் அன்றைய தினத்திலும் அரசாங்க தரப்பினர் மேலும் இரு சாட்சிகளை கொண்டு வந்து நிறுத்தப் போவதாக நீதிபதியிடம் அனுமதி கோரினர். எனவே இம்முறையும் இவ்வழக்கு ஏப்ரல் 29க்கு தவணை போடப்பட்டுள்ளது. முன்நிறுத்த இருப்பதாகக் கூறப்படும் இரு சாட்சிகளில் முதலாவது, சாட்சியானது வரதனுடன் சந்திரசேகரன், காதர், தர்மலிங்கம் ஆகியோர் பேசிக்கொண்டிருந்ததை கண்டதாகக் கூறுவார் என எதிர்பார்க்கப்படும் சாட்சியம். மற்றொன்று குறிப்பிட்ட வேனில் சந்திரசேகரனுடன் காதர் சென்றதைக் கண்டதாகக் கூறப்படும் சாட்சியமுமாகும்.

மேற்படி சாட்சிகள் ஏற்கனவே புஸ்வாணமாகிப் போன ஒன்றை மீண்டும் கொண்டு வந்து நிறுத்தும் முயற்சியில் அரசாங்க தரப்பினர் முனைந்துள்ளனர் எனச் சிலர் கருத்து தெரிவிக்கின்றனர்.

எவ்வாறிருப்பினும் இவ்வழக்கு தொடர்ந்து இழுத்தடிக்கப்படுவதற்கு அரசியல் காரணமே பிரதானமானது என்பது இன்று அப்பட்டமாகி வருகிறது. •

## கடனாளியாகும் கூ.சங்கம்

## ஐ.தே.கவினரின் கைவரிசை

மட்டக்களப்பில் உள்ள ப.நோ.கூட்டுறவுச் சங்கம் கடந்த பல வருடங்களாக பல இலட்ச ரூபா வருமானத்தில் தரமான சேவையை நடாத்தி வந்த ஒரு ஸ்தாபனம். இந்த ஸ்தாபனத்திற்கு ஐ.தே.க.பிரமுகரும் அண்மையில் மட்டு.மாநகரசபைத் தேர்தலில் ஐ.தே. கட்சியின் தலைமை வேட்பாளராகப் போட்டியிட்ட திரு. பத்மநாதன் தலைவராக வந்த ஓரிரு மாதங்களிலேயே கூட்டுறவுச் சங்கம் கடனாளியாகி விட்டது.

தன்னுடைய கை எப்போதும் சுத்தமானது என்றும் கறைபடியாத கரம் என்றும் அடிக்கடி கூறும் இவர் அண்மையில் கூட்டுறவுச் சங்கத்திற்குப் பொருட்கள் கொள்வனவு செய்யக் கொழும்பிற்குச் புறப்பட்டுச் சென்றார். தன்னோடு கொள்வனவு உத்தியோகத்தரையும் அழைத்துச் சென்ற இவர் கொள்வனவு உத்தியோகத்தரை ஒரு கடையில் இருத்தி விட்டுத் தன்பாட்டுக்கு கொள்வனவு செய்துள்ளார். இவர் கொள்வனவு செய்ததெல்லாம் கொழும்பில் கொமிசன் வியாபாரத்தில் ஈடுபட்டுள்ள இவரது ஒன்று விட்ட மைத்துனரிடம்தான். அத்தோடு கொள்வன்வு செய்த பொருட்களின் உண்மை விலை தெரியக்கூடாது என்பதற்காக முன்னொரு போதும் ப.நோ.கூட்டுறவுச் சங்கத்தினர் விற்பனை செய்யாத பொருட்களை கொள்வனவு செய்துள்ளனர். இவருடன் கொள்வனவிற்காக கொழும்பிற்குச் சென்ற கொள்வனவு உத்தியோகத்தர் தற்போது வயிறெரிந்து திரிகின்றாராம். ஏனென்றால் தாங்கள் கொள்வனவு செய்யும் போது சிறு தொகையைத்தான் கொமிசனாக எடுப்பார்களாம். ஆனால் பத்மநாதனோ கொமிசனுக்கு மேல் கொமிசனாக பெருந்தொகையைச் சுருட்டிக் கொண்டு விட்டாராம். அத்தோடு பத்மநாதன் அரசியல்ரீதியாகத் தனக்கு எதிரானவர்களையெல்லாம் கூட்டுறவுச் சங்கத்திலிருந்து அகற்றும் நடவடிக்கைகளிலும் ஈடுபட்டுள்ளது வெளிப்படையாகத் தெரிய வந்துள்ளது. சிறுசிறு குற்றம் செய்பவர்கள் எல்லாம் எவ்வித விசாரணையுமில்லாமல் பதவி இறக்குவது வேறு தரங் குறைந்த வேலைகளைக் கொடுப்பது வேலையிலிருந்து இடை நிறுத்தம் செய்வது போன்ற நடவடிக்கைகளிலெல்லாம் ஈடுபட்டுள்ளார்.

இவருடைய எல்லா நடவடிக்கைகளுக்கும் உறுதுணையாக இங்குள்ள பொலிஸ் அத்தியஸ்தராக டக்ளஸ் பீரிஸ் என்பவர் செயற்படுவதாகவும் தெரிய வருகிறது. •

## ஐ.தே.க...

துரிதப்படுத்தவென ஒஸ்ரின் பெணான்டோ என்பவர் ஜனாதிபதியால் நியமிக்கப்பட்டுள்ளார். ஜனாதிபதியால் அவசர அவசரமாக நியமிக்கப்பட்டுள்ள இவர் கடந்த வாரம் மட்டக்களப்பில் உள்ள எல்லாத் திணைக்களங்களையும் மட்டக்களப்பு மேஜர் உட்பட எல்லா பிரதேச அங்கத்தவர்களையும் அரசாங்க சார்பற்ற நிறுவனங்களையும் ஒன்றுகூட்டி நடாத்திய மாநாடு ஒன்றிற்கு கொழும்பிலிருந்து பறந்து வந்து ஒரு மணி நேரம் இருந்து கூட்டத்தை நடத்திவிட்டு மீண்டும் அவசர அவசரமாக கொழும்புக்குப் பறந்து சென்றார். மாநாட்டில் இவரால் அறிவிக்கப்பட்ட செய்தி என்னவென்றால் மட்டு நகரை அபிவிருத்தி செய்ய அரசாங்கத்திடம் பணம் இல்லை. அதை அரச சார்பற்ற நிறுவனங்கள்தான் கொடுக்க வேண்டும் என்பதுதான். இதைச்சொல்ல ஜனாதிபதி ஒருவரை நியமித்து விமானம் மூலம் அனுப்பி வைத்திருக்கின்றார். என்னே ஜனாதிபதியின் கரிசனை. •

## மணிவாசகம்

### நானே நிராகரித்தேன்

''தென் மாகாணப் பெருந் தோட்டங்களில் சிறிய எண்ணிக்கையினராகவேனும் உள்ள இந்தியத் தொழிலாளர்களின் வாக்குகளைப் பெறுவதற்காக ஐ.தே.க.வின் தேர்தல் பிரச்சார இயக்கத்தில் இணையுமாறு ஐ.தே.க.வின் பொதுச்செயலாளர் சிறிசேன கூரே எனக்கு அழைப்பு விடுத்திருந்தாலும் நான் அவ்வழைப்பை நிராகரித்தேன்..

**ஸ்ரீ லங்கா கிராமியத் தொழிற்துறை அபிவிருத்தி அமைச்சர் சௌ.தொண்டமான் -லங்காதீபவில் -28.03.1994**

### சு.க.வின் 'புதிய கொள்கை'

''இனப்பிரச்சினை தொடர்பான ஸ்ரீ.ல சு.கவின் புதிய கொள்கை கட்சிக்கு சிறுபான்மை இனங்களை வென்றெடுக்க உதவியுள்ளது. நாட்டின் அனைத்துப் பகுதிகளிலும் வாழும் சிறுபான்மை இனங்களின் ஒத்துழைப்பைப் பெற சிரத்தையுடன் செயற்பட்டு முக்கியமான நடவடிக்கைகள் பலவற்றை முன்னெடுக்கவுள்ளோம்.

**ஸ்ரீ லங்கா மேல் மாகாண முதலமைச்சர் சந்திரிகா பண்டாரநாயக்க குமாரணதுங்க -லங்காதீபவில்.-28.03.1994**

### தேர்தலின் பின் வன்முறை

''தென் மாகாண சபைத் தேர்தல்களின் பின்பு திக்வல்லை, கம்புறுப்பிட்டி உட்படத் தென் பகுதியின் பல இடங்களில் அரசின் வன்முறைகள் மிகவும் உக்கிரமாகச் செயற்படுத்தப்படுகின்றன.''

**கொழும்பு மாவட்ட ஸ்ரீ.ல.சு.கப் பா.உ. சீ.வீ.குணறத்ன -லங்காதீபவில் -28.03.1994**

### அமைச்சர் பதவியே வேண்டும்

''மத்திய மாகாண சபையின் முன்னாள் அமைச்சரும், இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமான எஸ்.சதாசிவத்துக்கு மீண்டும் அமைச்சர் பதவி வழங்கப்பட வேண்டும். அவ்வாறு வழங்கப்படாவிட்டால் ஐ.தே.கவுடன் தொடர்ந்தும் பேச்சுவார்த்தை நடத்துவதில் அர்த்தமில்லை''

**இ.தொ.கா.தலைவரும், ஸ்ரீ லங்கா சுற்றுலாத்துறை கிராமியத் தொழில் துறை அமைச்சருமான சௌ.தொண்டமான்- லங்காதீபவில் - 11.04.1994**

### பொறி வைக்கிறார் ரணில்

''வட-கிழக்கு மக்கள் மாகாண சபை முறையை ஏற்றுக் கொண்டு நாட்டில் சமாதானத்தை ஏற்படுத்துவதற்காகச் செயற்படுவதற்கூடாகத் தென் பகுதி மக்களின் தவறான புரிதலை இல்லாதொழிப்பதற்காகச் செயற்பட்டால் வட-கிழக்கு இணைப்புத் தொடர்பாகத் தற்போது தென் பகுதி மக்கள் தெரிவிக்கும் மனப்பாங்கு மாற இடமுண்டு.''

**ஸ்ரீ லங்காப் பிரதம மந்திரி ரணில் விக்கிரமசிங்க -லங்காதீபவில் -11.04.1994**

### திவயினவின் தேசியக் கடமை

''நாட்டுக்கே அழிவை ஏற்படுத்தும் புலிப் பயங்கரவாதிகளுக்கு கருணை காட்டும் போலி மனிதாபிமானிகளை அம்பலப்படுத்துவது தேசியக் கடமையாகும்.''

**ஆசிரியர் தலையங்கத்திலிருந்து.....- திவயினவில் -11.04.1994**

### நான் இணைய மாட்டேன்

''எவர் ஐ.தே.கவுக்குச் சென்றாலும் நான் ஒருபோதும் ஜ.ஐ.தே.முவை விட்டு ஐ.தே.கவுடன் இணைய மாட்டேன்.''

**வடமேல் மாகாண சபைத் தலைவர் சத்தாதிஸ்ஸ வடிமங்காவ லங்காதீபவில் -12.04.1994**

### ஒரு அற்புதமான ஆலோசனை

''கிழக்கை, வடக்கிலிருந்து பிரிக்கும் மக்கள் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடத்துவது செலவு மிகுந்ததொன்றாகும். அதனால் ஜனாதிபதியினால் இந்த இரு மாகாணங்களையும் வேறாக்கிப் பிரிக்கும் வர்த்தமானி அறிவித்தலை வெளியிடுவது இலேசானதும், செலவு குறைவானதுமாகும்.''

**கொழும்புப் பல்கலைக்கழகச் சட்டபீட விரிவுரையாளரும், பல்கலைக்கழக சட்ட உதவி நடு நிலையத்தின் பணிப்பாளருமான அரவிந்த இஹலகம -லங்காதீபவில்-12.04.1994**

### கிழக்கிலிருந்து ஒழிப்போம்

''கிழக்கு மாகாணத்தில் பயங்கரவாதத் தொல்லையை முழுமையாகவே இல்லாதொழித்து இந்த மாகாணத்தின் நிர்வாகத்தைப் பொலிஸிடம் கையளிப்போம்.''

**ஸ்ரீ லங்கா இராணுவத் தளபதி லெப். ஜென.ஜெரி சில்வா -லங்காதீபவில் -13.04.1994**

### விசேட ஆணைக்குழு

''தென் மாகாண முதலமைச்சராக பதவிப் பிரமாணம் செய்தவுடன் தேர்தல் தினத்தன்றும்; அதற்கு முன்பும், பின்பும் தென் மாகாண சபைக்குட்பட்ட அதிகாரப் பகுதிக்குள் நடைபெற்ற குற்றச் செயல்கள், தேர்தல் மோசடிகள் ஊழல்கள் மற்றும் பல்வேறு வகைப்பட்ட வன்முறைச் சம்பவங்கள் தொடர்பாக விசாரிக்க விசேட ஆணைக்குழுவொன்றை நியமிப்பேன்.''

**ஸ்ரீ லங்கா தென் மாகாண முதலமைச்சர் அமரசிறி தொடம் கொட - லங்காதீபவில் -28.03.1994**

**சீ. சாத்தனார்**

சரிநிகர் மாதமிருமுறை இதழ். இல.18/2 அலோசாலை கொழும்பு 03, இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில் வெளியிடுபவர் ச.பாலகிருஷ்ணன். 21/04/94

அச்சுப்பதிவு: 334 காலி வீதி இரத்மலானை நவமக அச்சகம்.